

கல்கி

KALKI 25.11.90 ரூ. 2.50

நாட்டின் எதிர்காலம் ராஜீவ் கையில்...

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.



இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம்... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிரா. கேனிஸ்டர்	145 பைசா
2.5 கிலோ கேரிபேக்கில்	83 பைசா


உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கனமாய் கிடைக்கிறது இதில் உங்களுக்கு ஒரு துளியளவு விம் உயர்வானதோங்கும் நுரை கொழித்து பிசுக்குகளை விசுக் என வெளியேற்றுகிறது கணங்களுக்காக... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமிளுக்க.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்குகந்த அளவிலே (தேர்ந்தெடுக்கக் கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

LINTAS-VG-482A-2519 TAM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



தங்கம் பெறத் தங்கமான யோசனைகள்

மாணவர் கட்டுரைப் போட்டி!

ரூ. 50 முதல் பரிசுக் கட்டுரை

விளையாட்டு வீரர்களுக்கு இன்றியமையாதது சத்தான உணவு. அவர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளார்களோ, அதற்குத் தகுந்தாற்போல் Calorific value உள்ள உணவு சாப்பிட வேண்டும். அது நமது நாட்டு வீரர்களுக்குச் சரியாகக் கிடைப்பதில்லை.

●● புதிய நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வது முக்கியமானது. நம் நாட்டு விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து ஒரே பயிற்சியாளரிடம் பயிற்சி பெறுவதால் அவரது வழியில் மட்டும்தான் போக முடியும். புதிய நுணுக்கங்களைத் தெரிந்து பயிற்சி பெறுதல் பல வெற்றிகளுக்கு வழி கோலும்.

●● விளையாட்டு வீரர்களை அரசாங்கம் இன்னும் அதிக அளவில் கௌரவித்து, அவர்களுக்கு இறுதிவரை 'பென்ஷன்' கிடைக்க வழி செய்ய வேண்டும். அவர்களின் திறமை முடிந்தவுடன் கண்டு கொள்ளாமல் இருப்பதால் திறமையுள்ளவர்கள் பலர் பள்ளிப் பருவத்திலேயே விளையாட்டுக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேலை தேடிச் செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். இத்தகையவர்களை அடையாளம் கண்டு, முன்னேற்ற வழி செய்ய வேண்டும்.

●● 'தகுதிச் சுற்றுப் போட்டிகள்' உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்குச் சில நாட்கள் இருக்கும் போதுதான் நடத்தப்படுகின்றன. இது பல மாதங்களுக்கு முன்பே நடத்தப்பட்டு, தேர்வு பெறுபவர்களுக்குத் தீவிரமான பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

●● நம் நாட்டு வீரர்கள், 'ஆசிய விளையாட்டுகள்' போன்ற போட்டிகள் தொடங்கச் சில நாட்கள் இருக்கும் போதுதான் அந்த நாடுகளுக்குச் செல்



'சினிமா துறையின் தாக்கம்'' என்ற தலைப்பில் சமீபத்தில் ஒரு கருத்தரங்கு நடந்தது. அதிலே பேசிய

கிறார்கள். ஆனால் வெளிநாட்டு வீரர்கள் முன் கூட்டியே சென்று அங்குள்ள தட்ப வெப்ப நிலைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு பயிற்சி செய்வதால், அவர்களுக்குப் போட்டி நடைபெறும் இடம் புதிதாகத் தோன்றுவதில்லை. எனவே வெற்றிகளை எளிதில் பெற்றுவிடுகின்றனர். இதே போன்று நம் வீரர்களுக்கும் ஆசிய விளையாட்டு நடக்கும் நாட்டில் சரியான சூழ்நிலையில் பல காலம் முன்னதாகவே பயிற்சியளிக்கப்பட வேண்டும். பயிற்சியாளர்களும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து விளையாட்டு வீரர்களிடம் வெற்றி பெற வேண்டும் என்கிற 'வெறி'யைத் தோற்றுவிக்க வேண்டும்.

●● விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களைப் பள்ளிப் பருவத்திலேயே ஊக்கப்படுத்தி, உணவுக் கட்டுப்பாட்டுடன் சிறப்புப் பயிற்சி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு அல்லது மூன்று ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல்கள் ஆரம்பித்து அங்கு வீரர்களைத் தங்கச் செய்து தனிப்பயிற்சி கொடுத்து வெற்றிக்கனியைப் பறிக்க வழி கோலலாம். மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களை மாநில அரசாங்கமே தனது செலவில் வெளிநாட்டிற்கு அனுப்பிப் பயிற்சி பெற்றுவர ஏற்பாடு செய்யலாம்.

●● விளையாட்டுப் போட்டிகளின் ஒவ்வொரு பிரிவையும் தனித் தனியாகப் பிரபலமான கம்பெனிகள், நிறுவனங்களிடம் ஒப்படைத்துத் திறமையை வளர்க்குமாறு கோரலாம். நமது நாட்டில் கிரிக்கெட்டிற்கு மட்டும் தான் அதிக அளவில் Sponsorship கிடைக்கிறது. இதை மாற்றி எல்லாப் போட்டிகளுக்கும் கிடைக்கச் செய்தால் ஆற்றல்கள் வளர்வதோடு அந்தந்த விளையாட்டுகள் மீது மக்களுக்கும் ஆர்வம் பிறக்கும்.

●● விளையாட்டு வீரர்களைத் தேர்வு செய்வதில், நமது நாட்டில் அதிக அளவில் செல்வாக்கும், அரசியலும் குறுக்கிடுகிறது. இதைத் தவிர்த்து திறமையின் அடிப்படையில் மட்டுமே வீரர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

●● எல்லாவற்றையும் விட முக்கியம், ஒவ்வொரு விளையாட்டு வீரரும், போட்டிகள் இல்லாத சமயங்களிலும் சரியான பயிற்சி பெறுதல் வேண்டும். தினமும் போட்டிகள் நடைபெறுவதாக எண்ணி உத்வேகத்துடன் பயிற்சி செய்தல் அவசியம். விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகளைத் தவறான வழிகளில் பயன்படுத்தாமல், உடல் திறமையைப் பெருக்கக்கூடிய வழிகளில் செலவிட்டு, போட்டி நுணுக்கங்களை அறிந்து, விளையாட்டில் பங்கு கொண்டால், இந்தியாவும் தங்கங்களை அள்ளி குவிக்கும். ஐயமில்லை!

— பிள்ளை இளங்கோவன்,
இறுதியாண்டு பி. ஈ.,
கோவை தொழில் நுட்பக் கல்லூரி,
கோவை — 14.

எதிரியை வீழ்த்த வீடியோ திட்டம்!

●● ஒவ்வொரு விளையாட்டிலும் நாம் தோல்வி அடைந்தவுடன், விளையாடிய வீரர்கள், அதே துறையைச் சார்ந்த முன்னாளைய வீரர்கள், பயிற்சியாளர்கள் முதலியோர் சேர்ந்து வீடியோ பார்த்து தோல்விக்கான காரணத்தையும், வெற்றி பெற்ற வீரர்கள் கையாண்ட யுக்தியையும், அவர்களது பலவீனத்தையும், அதை நாம் எவ்வாறு நமக்குச் சாதகமாகத் திருப்பிக் கொள்ளலாம் என்பதையும் அணு அணுவாக அலசி ஆராய்ந்து, எதிர் காலத்தில் நம் வீரர்கள் திறமையுடன் விளையாட ஒரு திட்டம் வகுத்துத் தர வேண்டும்.

●● வீரர்களைக் கண்டறிய விளையாட்டையே மூச்சாகக் கொண்ட நால்வர் அல்லது ஐவர் அடங்கிய குழு மாநிலம் தோறும் செயல்பட வேண்டும். மாநிலம் முழுவதும் இக்குழுவினர் சுற்றி, பள்ளி

சினிமா டாக்டர்கள்!

டாக்டர் ரெஜினால், சினிமாக்களில் ''டாக்டர்கள்'' நடந்து கொள்ளும் விதம் அபத்தமாக இருப்பதாகக் குற்றம் சாட்டினார்.

இதனை ஒப்புக் கொண்டதுடன் மன்னித்து விடுமாறும் கேட்டுக் கொண்ட மேஜர் சுந்தரராஜன் தமக்கே ஏற்பட்ட ஓர் அனுபவத்தை விவரித்தார்:

நான் கண் டாக்டராய் நடிக்க வேண்டியிருந்தது. பிரபல கண் மருத்துவர் அகர்வாலைச் சந்தித்துக் கண்ணை டெஸ்ட் செய்வது எப்படி என்று விளக்கமாய்க் கேட்டுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உபகரணங்களுடன் விளக்கிக் கொண்டிருக்கும் போது இடையில் டாக்டர் கேட்டார்: ''கதை என்ன?''

நான்சொன்னேன்: ''ஹீரோயினுக்குக்கண்பார்வை கிடையாது! அவளைப் பரிசோதனை செய்த நம் நாட்டு டாக்டர்கள், 'கண் பார்வை திரும்பக் கிடைக்க வாய்ப்பே இல்லை' என்று கூறிவிடுகிறார்கள். கடைசியில், மேல்நாட்டு மருத்துவர் ஒருவர் வந்து, பரிசோதித்து, ஆபரேஷன் செய்து, பார்வையை மீட்டுத் தருகிறார். இதுதான் கதை.''

பட்டென்று அகர்வால், ''நான்சென்ஸ்...! இந்திய டாக்டர் முடியாது என்றால் அது முடியாதுதான்! மேல்நாட்டு மருத்துவர் வந்தும் பயனில்லை... மருத்துவத் துறைக்கே இது பெரும் இழுக்கு!'' என்று பொரிந்து விட்டார்.

ஆயினும் என்ன? நாம் சினிமாவில் சொல்லுகிற போது, எதையுமே மிகைப்படுத்தித்தான் சொல்ல வேண்டி இருக்கிறது!

— மௌனஷ்மி

கள் தோறும் சென்று நன்றாக விளையாடும் சிறுவர் சிறுமியரைக் கண்டறிதல் வேண்டும்.

●● சிறப்புப் பயிற்சி பெறும் வீரர்களுக்கு அவர்கள் சார்ந்த விளையாட்டு தவிர, வேறு சிந்தனையே இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்பக் கவலை இல்லாமல் இருப்பின், சுதந்திரமாக அவர்கள் பயிற்சி பெற இயலும்.

— டி. எஸ். கிருஷ்ணன்,
இரண்டாமாண்டு பொறியியல்,
நேஷனல் பொறியியற் கல்லூரி,
நாலாட்டின்புத்தூர்,
கோவில்பட்டி தாலுகா.

தேசப்பற்றைத் தேடிப் பிடியுங்கள்!

கடந்த மூன்று வருடங்களில் ஒரே ஒரு முறை மட்டுமே வீட்டிற்குச் சென்று மற்ற நேரம் முழுவதையும் தன் நாட்டிற்காக — விளையாட்டு வீரர்களுக்காகச் செலவிட்டவர் சீன கோச் சங் குங்யூ. அவருடைய ஐந்து வயது மகனால் அவரை அடையாளம் கண்டு கொள்ளக் கூட முடியவில்லை! இங்கேயோ தன்னிடம் பயிற்சி பெறாத வீரரை தோற்றுப் போகச் சபித்த கோச்! நமது 'கோச்'களின் தேசப்பற்று இவ்வளவு உன்னதமாக இருக்கிறது. போதாக்குறைக்குச் சிவந்தி ஆதித்தன் தலைமையில் ஒன்று, வி.சி. சுக்லா தலைமையில் ஒன்று என இரண்டு ஒலிம்பிக் அசோசியேஷன்கள்! அதுமட்டுமா? ஒவ்வொரு போட்டிக்கும் அயல்நாடு செல்லும் அதிகாரிகள் தம்முடன் மனைவி, மகன், மருமகள், பேரன், பேத்திகள் என்று அழைத்துச் செல்லும் கண்கொள்ளாக்காட்சி!

ஸ்டீபில் சேசர் தினாராம் அதற்குரிய விசேஷ ஷூக்களைப் பல முறை கேட்டும் சாதாரண ஷூக்களையே வாங்கிக் கொடுத்தார்கள். அதனால் அவர் வெறும் காலுடன் ஓடி வெள்ளி பெற்றாரே, சக ஓட்டக்காரரின் ஷூவிலிருந்து தெறித்த ஆணி அவர் காலில் குத்தியதே! இதையெல்லாம் யார் எண்ணிப் பார்க்கிறார்கள்?

இதற்கு மறுபுறமாக, ஓட்டப் பந்தயத்தில் சிறிது தூரமே பாக்கி இருக்கும் போது விலகிக் கொள்ளும் பந்தய வீரர். இந்தியாவில் தாங்கள் செய்த சாதனைகளைக் கூட உலக அளவில் எட்ட முடியாத விளையாட்டு வீரர்கள். இவர்கள் ஒதுங்கிக் கொண்டு புதிய வீரர்களுக்கு வழி விட்டால் என்ன?

உலகக் குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் குற்றம் புரிந்து விட்டு சீர்திருத்தப் பள்ளி சென்றவர். அங்குதான் அவர் திறமை கண்டறியப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. எனவே விருப்பு வெறுப்பு இன்றித் திறமைகளைக் கண்டறிந்து போற்ற வேண்டும். இவையனைத்தையும் செய்ய தேசப்பற்று நமக்கு வேண்டும். நாம்தான் அதை எங்கோ தொலைத்து விட்டோமே. அதைத் தேடிப் பிடித்தப் பிறகுதானே தங்கப்பதக்கங்களைத்தேடிச் செல்ல வேண்டும்?

— எஸ். சிவானந்தவல்லி,
பி. ஏ. லிட்ரேச்சர் (தமிழ்) முதலாமாண்டு
அஞ்சல் வழிக் கல்வி,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், — 608 002.



• பதவிப் பிரமாணத்துக்குப் பிறகு, குடியரசுத் தலைவர், புதிய பிரதமர், துணைப் பிரதமர்.

நாட்டின் எதிர்காலம் ராஜீவ் கையில்...

சந்திரசேகர் பிரதமர் ஆனாலும், ராஜீவின் தயவில்தான் காலம் தள்ள வேண்டும். சந்திரசேகர் செய்தது சரியா? ராஜீவ் எப்படி நடந்து கொள்ளுவார்? ஆட்சி எத்தனை காலம் தாக்குப் பிடிக்கும்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம், பின்னணியை ஆராய்ந்து, பதில் சொல்கிறார் 'ஹிந்து' இணையாசிரியர் என். ராம்:

இது ஒரு பொம்மலாட்ட அரசு. ஆட்டி வைத்தால் ஆடும். யார் ஆட்டுவிப்பார்கள் என்பது வெளிப்படை.

மத்தியில் அமைச்சரவை அமைப்பது என்றால் கிட்டத்தட்ட அறுபது பேராவது காபினெட், ஸ்டேட், டெபுடி என்று பல நிலைகளில் தேவை. சந்திரசேகரின் ஜனதா தளத்தில் இருக்கிற அத்தனை பேரையும் அமைச்சர்களாக்கினால் கூடப் போதாதே? தேசிய மகாநாடு, பகுஜன் சமாஜ் கட்சி, அ.இ.அ.தி.மு.க. இவற்றிலிருந்து எல்லாம் ஒரு சிலர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று பேச்சு அடிபடுகிறது. ஆனால் எத்தனை தூரத்துக்கு உதவும்?

இது, தேர்தலுக்கு முந்தைய ஒரு கால கட்டம்; அவ்வளவுதான். மண்டல் கமிஷன் – ராமஜன்ம பூமி கொதிப்புகள் எல்லாம் அடங்க வேண்டும். இந்த 'கொந்தளிப்பு', தேர்தலுக்குச் சாதக

மான சூழ்நிலை அல்ல. அதனால்தான் இ. காங்கிரஸ் இப்போதைக்குப் பொறுப்பை ஏற்கவில்லை.

இந்த ஏற்பாடு, யதார்த்தமாகப் பார்த்தால் விரும்பத்தகாததுதான் என்றாலும், அரசியல் சாசனச் சட்டப்படி முறையானது. வேறு வழியில்லாமல் அமைந்த அரசு.

குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் நடந்து கொண்ட முறை ஒழுங்கானது. இ. காங்கிரஸ், பாரதீய ஜனதா, இடதுசாரிக் கட்சிகள் என்று எல்லோரையும் தனித் தனியாக அழைத்து, 'உங்களுக்கு விருப்பமிருக்கிறதா, உங்களால் முடியுமா பாருங்கள்' என்று கேட்டுக் கொண்டார். அவர்கள் எல்லோருமே நிராகரித்த பின்னர்தான் சந்திரசேகரை அழைத்துப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். 79 இல், சஞ்சீவ ரெட்டி நடந்து கொண்ட மாதிரி செய்யவில்லை. குடியரசுத் தலைவர், அரசியல் சாசனப் புத்தகத்தில் எழுதியுள்ள மாதிரியே நடந்து கொண்டிருக்கிறார். இனி வரும் குடியரசுத் தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக, இவரது பாரபட்சமற்ற நடவடிக்கை இருந்திருக்கிறது என்கிற அளவில், நாம் நிச்சயம் பெருமைப்படலாம்.



மற்றவர்கள் எல்லாம் மறுத்த பின், அவர் சந்திரசேகரை அழைத்த போது, அவர் துள்ளி எழுந்து வாய்ப்பைப் பற்றிக் கொள்ளத் தயாராய் இருந்தார். இந்திரா காங்கிரசின் பின் பலத்துடன் தான் இந்த அரசை அமைக்கப் போகிறார் என்று குடியரசுத் தலைவருக்குத் தெரிந்தே கொடுத்திருப்பதால், சுற்றி வளைத்து இ. காங்கிரசுக்கே கொடுத்திருப்பது மாதிரிதான். ஆனால் இந்தக் கூட்டு அமைப்பு வெகு நாள் நீடிக்காது.

அரசியல் நெருக்கடியும், குழப்பமான சூழ்நிலையும் இருக்கிறதால், இவற்றைச் சீர்படுத்தவே இந்தக் கூட்டு அமைச்சரவைப் பொறுப்பை ஏற்கிறோம் என்கிறார் சந்திரசேகர். அப்படியானால் யார் அந்தப் பொறுப்பை உண்மையில் ஏற்க வேண்டும்? ராஜீவ்தானே? அவர் ஏற்கவில்லை. சந்திரசேகரின் முயற்சி அரசியல் மோசடி என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜோதி பாசுவையே கூட ஒரு தேசிய அரசு அமைத்துத் தலைமை தாங்கக் கேட்டுக் கொண்டார்கள். ராஜீவே கேட்டுக் கொண்டார். வி.பி. சிங் கேட்டுக்

அடுத்த இதழில்...

●● தேன் நிலவும் அதன் பின்பும்

— ஒவ்வோர் ஆணும் பெண்ணும் படித்துப் பயன் பெற Marriage Counsellor வழங்கும் அனுபவத் தொடர்....

●● "நானும் மக்களோடு சேர்ந்து போராடுகிறேன்...!"

— தம்மோடு தொகுதியைச் சுற்றிப் பார்த்துப் பிரச்னைகளை விளக்குகிறார் திருவாடானை எம்.எல்.ஏ...

கொண்டார். ஆனால் அவர் ஏற்கவில்லையே! நல்ல ஜோக் என்று சிரித்தார். தாம், தேசிய அளவில் ஆறு சதவிகித வாக்குகளையே பெற்ற ஒரு கட்சியின் தலைவர்தான் என்று மறுத்துவிட்டார். பிரதமராகப் பதவி வகிக்கத் தகுதி வாய்ந்த குண நலன்கள் தம்மிடம் இருக்கின்றன என்று பதவியை ஏற்றுக் கொண்டுவிடவில்லையே!

ஆளும் கட்சியின் ஒரு சிறு பகுதி அதிருப்தியாளர்களாகப் பிரிந்து போய், அவர்கள் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கும் சந்திரசேகர் என்ற ஒரு தனி மனிதரின் சுயநலம் மிகுந்த பேராசையைப் பூர்த்தி செய்து கொள்ள இந்த அமைப்பு வழி செய்திருக்கிறது. ராமஜன்மபூமி விவகாரத்தில், வி.பி. சிங் அரசுக்குப் பாரதிய ஜனதா தன் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டது சாதகமாகப் போய்விட்டது. இதில் வருத்தத்துக்குரியது என்னவென்றால், அயோத்தியில் உறுதியாக இருந்து சமாளித்த உ.பி. முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் இதற்கு உதவியிருக்கிறார் என்பதுதான்.

ராஜீவ் ஆட்சியின் போதுதான் 'சிலான்யாஸ்' என்று ராமஜென்ம பூமி விவகாரத்துக்கு வித்திடப்பட்டது. பிரச்னை இந்த அளவுக்குப் போன பிறகு, வி. பி. சிங் விட்டுக்கொடுக்க மறுத்து, பாரதிய ஜனதாவைப் பகைத்துக் கொண்டார். கொஞ்சம் பின்னால் போய்ப் பார்த்தால், இதற்கு அடிப்படைக் காரணம், மண்டல் அறிக்கையை வி.பி.சிங் ஏற்றுக்கொண்டதுதான் என்று தெரியும். பாரதிய ஜனதா ஒரு பழைமை வாதக் கட்சி. பழையதை எல்லாம் சம்பிரதாய ரீதியாகத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு பிடிவாதமாய்க் கொண்டாடும் ஒரு கட்சி. மண்டல் அறிக்கை, தனது ஒட்டுமொத்தமான ஜாதியமைப்பைப் பாதித்து, வோட்டுக்கு வேட்டு வைத்து விடுமே என்ற ஆத்திரத்தில் உருவானதுதான் பின்னர் நிகழ்ந்தவை. வி.பி.சிங்கைப் பலவீனப்படுத்த வேண்டும்; பழிவாங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மட்டுமே இது நடத்தப்பட்டது.

சந்திரசேகரின் பழைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் புரியும். அவர் 'அத்தாரிட்டேரியனிஸம்' எனப்படும் மூர்க்கத்தனமான தலைமைக் கட்டுப்பாட்டை எதிர்த்து வந்தவர் என்று. எந்தவிதமான தீவிர உரையாடலும் இல்லாமல், எந்தவிதமான தீவிர விவாதமும் செய்யாமல், எந்தவிதமான நம்பத் தகுந்த விளக்கங்களும் மக்களுக்குக் கொடுக்காமல், இதே சந்திரசேகர் ஓடோடிப் போய் ராஜீவைச் சரணடைந்திருப்பது, அவர் இதுவரை கொண்டிருந்த கொள்கைப் பிடிப்புக்கு எதிரானது அல்லவா? ராஜீவுக்கு என்ன! சந்தர்ப்பம் வராதா என்று காத்திருந்தவர் போல், அவருக்குப் புகல் கொடுத்து விட்டார். ஆனால் நிகர லாபம் யாருக்கு?

நிச்சயம் ராஜீவுக்குத்தான்.

சந்திரசேகரைப் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரிக்கும்படி செய்து கொண்டு விட்டார்.

இனி என்ன? இந்திரா காங்கிரசிலிருந்து ஒரு சிறு முனகல், ஒரு சிறு சைகை, வந்தாலும் போயிற்று. சந்திரசேகரின் அமைச்சரவை ஆபத்தின் நுனியில் போய் நிற்கும். அப்புறம் என்ன, பீதி, குழப்பம் எல்லாம் பிடித்து அமைச்சரவை ஆட்டமாய் ஆடும்!

எத்தனை துறைகளுக்குச் செயலர்கள் நியமனம் செய்ய வேண்டும்! ஒவ்வொரு இலாகாவுக்கும், தான் சொல்கிற ஆள்தான் இருக்க வேண்டும் என்று இ. காங்கிரஸ் கட்டளை இடும். பிடிவாதம் காண்பிக்கும். வெளிநாட்டுத் தூதர் பதவிகளில், இங்கே ஆளுநர் பதவிகளில், இன்னாரைத்தான் போட வேண்டும் என்று அடித்துச் சொல்லும். மாட்டேன் என்றால் சந்திரசேகருக்கு ஆபத்துத்தான். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும், கழுத்துக்கு நேரே கத்தி தொங்கும் நிலைதான்!

இந்திரா காங்கிரசின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் எதிராக எதுவும் இந்த அமைச்சரவை செய்யக் கூடாது என்று இப்போதே அந்தக் கட்சியின் தலைவர்கள்

அன்று கேலி செய்தவர்கள் இன்று



இந்த வயசுல நீ இங்கிலீஷ் கத்துக்கப் போறியா என்று எனது தோழிகளும் உறவினர்களும் என்னை கேலி செய்த போது இங்கிலீஷ் கற்றுக் கொள்வது மிகவும் கடினமாக இருக்குமோ என்று நினைத்தேன்.

வேலைக்குப் போய் விட்டு வந்து, விட்டு வேலையையும் குழந்தைகளையும் கவனிப்பதற்குத்தான் நேரம் சரியாக இருக்கிறது இந்நிலையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்வது எப்படி என்று சிந்தித்து வந்தேன்.

விட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம் என்ற விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம்பார்த்தேன்.

ட்ரை பண்ணிப்பார்க்கலாம் என்று தபால்முறை பயிற்சியில் சேர்ந்தேன். ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லி கொடுப்பதைப் போல பயிற்சி முறை மிகவும் எளிய முறையில் அமைக்கப் பட்டிருப்பதால் தபால் முறைப் பயிற்சி என்ற எண்ணமே தோன்றவில்லை.

அலுவலக விஷயமாக மேலதிகாரிகளிடம் ஆங்கிலத்தில் தயக்கமின்றி என்னால் இப்பொழுது சரளமாகப் பேசமுடிகிறது. மேலும் பாடசம்பந்தமாக குழந்தைகள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க முடிகிறது.

இந்த வயசுல இங்கிலீஷ் படிக்கப் போறியான்னு கேலி செய்தவர்கள் என்னிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டு அதிசயப்படுவதுடன் தாங்களும் இப் பயிற்சியில் சேர்ந்து பயன்பெற விரும்புகிறார்கள். விவேகானந்தா கல்வி நிலையத்தின் பணி மென்மேலும் தொடர வேண்டும் என்பதே என் விருப்பம்

Mrs. ரேகா, சென்னை-40.

நீங்களும் விட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலம் எழுத,பேச பயிற்சி பெறலாம். நேர்முகப்பயிற்சியும் உண்டு. இப்பயிற்சி பற்றி மேலும் விபரமறிய கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி. நகர், சென்னை — 17. போன்: 441216.

சந்திரசேகரிடம் உத்தரவாதம் வாங்கியிருக்கிறார்கள். இது அவர்கள் வெளியிலிருந்து கொடுக்கும் ஆதரவுக்கான விலை.

இவற்றோடு, போஃபோர்ஸ் விஷயத்தை அப்படியே அமுக்கி வைக்கப் பார்ப்பார்கள். ஆனால் அது முட்டி மோதிக்கொண்டு வெளியே வரத்தான் செய்யும். அப்படி வெளியே வந்தால் இ. காங்கிரசுக்கு ஆபத்துத்தான். சந்திரசேகரைப் பரிசோதித்துப் பார்க்க இ. காங்கிரசுக்கு இது ஒரு சந்தர்ப்பம்!

ராஜீவ் இப்போது காத்திருந்து, மெல்ல சிம்மாசனத்தைப் பிடிக்க முயற்சிகளும், ஏற்பாடுகளும் செய்வார். பிறகு ஓரளவு தயாரானதும் சந்திரசேகரைக் கட்டாயம் கை கழுவி விடுவார். ஆனால் உடனே என்று சொல்ல முடியாது. அப்படிச் செய்தால் அபத்தமாக இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். நான்கு வாரம் அவகாசம் கொடுக்கலாம்! அதற்கு மேல் இந்த அரசு தாங்காது என்றே நினைக்கிறேன். ஒரு வருடம் வரை ஆதரிப்போம் என்று இ. காங்கிரஸ் வாக்குக் கொடுத்திருப்பதாகவும் ஒரு செய்தி!

சந்திரசேகர் அரசு பிரச்னைகளை எப்படிச் சமாளிக்கும்? தொழிலதிபர் டி. டி. வாசு சொல்கிறார்:

குழப்பமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதுதான் இப்போதைய உண்மை. எல்லோருமே நினைத்துக் கவலைப்படும் விஷயம், நாட்டின் பொருளாதாரம் பற்றித்தான்.

எண்ணெய்ப் பிரச்னையைச் சரிவர உணர்ந்து, கையாளப் போகிறவர் யார்? உயர உயரப் போய்க்கொண்டிருக்கும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது எப்படி?

அந்நியச் செலாவணி நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதோடு, வளைகுடா நாடுகளிலிருந்து வெளியேறி இங்கே திரும்பி விட்ட ஊழியர்கள் மூலம் முன்பு வந்து கொண்டிருந்த கணிசமான தொகையும் இனி வராது. இது ஒரு பரிதாபகரமான நிலை மட்டுமல்ல, பயமுறுத்தும் நிலைமையும் கூட.

புதிய பிரதமர் சந்திரசேகரின் அமைச்சர் குழுவில் திறமைசாலிகள் எவரேனும் இருக்கிறார்களா? புத்திசாலித்தனமும், பொருளாதார அனுபவத் திறனும் உள்ள நிதியமைச்சர் இருப்பாரா?

இவை ஒரு பக்கம் இருக்கட்டும். சட்ட — ஒழுங்கு நிலைமை எத்தனை மாநிலங்களில் சீராக இருக்கிறது?

இத்தனை பிரச்னைகளையும் கையாண்டு, சமாளிக்கக்கூடிய தகுதியும் திறமையும் வாய்ந்த மனிதர்கள் அமைச்சரவையில் இடம்பெறுவார்களா?

அதனால்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன், நாம் இப்போது குழப்பமான நிலையில் இருக்கிறோம் என்று.

இந்தியன் ஏர்லைன்ஸ் ஆகட்டும், தொலைத் தொடர்புத் துறை ஆகட்டும் — இவற்றின் பிரச்னைகளை யார் தீர்த்து வைக்கப் போகிறார்கள்? போதாக்குறைக்கு, போக்குவரத்துத் துறையிலும் இப்போது பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன.

ராஜீவ் பின்னணியில் இருந்து கொண்டிருப்பார் என்றாலும், தில்லி அமைச்சர் குழுவில் யாரேனும் இவற்றை எல்லாம் வெற்றிகரமாகக் கையாளுவார்களா?

இவைதான் இப்போதைய சிந்தனை; கவலை எல்லாம்.

பேட்டி: **சாருகேசி**

மேலட்டை வண்ணப்படம்: **சுபா**

கிராமப்புறங்களில் காகிதத்தில் அல்லது ரூபாய் நோட்டுக்களில் கூட மண்ணெண்ணெய் பட்டு விடுவது சகஜம். கவலை வேண்டாம். கொஞ்சம் விபூதியை எடுத்துத் தடவுங்கள். கனமான புத்தகத்தின் இடையில் வைத்தால் எண்ணெய் பட்ட இடமே சற்று நேரத்தில் தெரியாது!

— எஸ். ஹரிஹரன்.





"அப்பா, தொண்ணூற்றி எட்டு மார்க் குப்பா..."

"வெரிகுட், கணக்குலேயா...?"

"இல்லேப்பா, எல்லாப் பாடத்தையும் சேர்த்து...!"

— காளிதாஸன்.

●● 'இதயத்தைத் திருடாதே படத்திற்குப் பிறகு தமிழில் வாய்ப்புகள் கிடைக்காததால் பாம்பாய்க்குப் போனார் கிரிஜா. இப்போது ரகுராமி ரெட்டியின் டைரக்ஷனில் 'நினைவே என்னை நெருங்காதே' படத்தில் பத்திரிகையாளராக நடிக்கத் தமிழுக்கு மீண்டும் வந்திருக்கிறார். இந்தப் படத்தைத் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே சமயத்தில் ரிலீஸ் செய்யப் போகிறார்களாம். எந்த மொழியில் படம் ஹிட் ஆகிறதோ அந்த மொழியில் தீவிர கவனம் செலுத்தப் போகிறாராம் கிரிஜா! வாய்ப்பு என்றால் இப்படியல்லவா கிடைக்க வேண்டும் என்று வியப்பவர்களுக்கு இன்னொரு வியப்பு — நினைவே என்னை நெருங்காதே படத்தில் ஓர் ஆங்கிலப் பாடலையும் எழுதியுள்ளார் கிரிஜா!



* கிரிஜா: வாய்ப்பும் வியப்பும்...

●● நெருங்குகிறது, ஐயப்ப பக்தர்களின் சீசன்! சினிமாவிலும் ஏராளமான ஐயப்ப பக்தர்கள் இருப்பதால் ஐயப்பன் பற்றிய படங்களுக்கும் குறைவில்லை. கன்னடத்திலிருந்து 'மணிகண்டன்' என்கிற பக்திப் படத்தை டப் செய்துள்ளார்கள். இதில் மணிகண்டனாக நடிக்க முதலில் மூன்று சிறுவர்களைத் தேர்வு செய்தார்கள். மூவருக்கும் மேக்கப் போட்டுக் கையில் ஒரு வில்லையும் கொடுத்து, 'எதிரே இருக்கிற புலி மீது போய் உட்காருங்கள் பார்க்கலாம்' என்று ஒரு நிஜப்புலியைக் கொண்டு வந்து நிறுத்தி, ஒரு போட்டி வைத்தார்களாம். இதில் ஜெயித்தவர் மாஸ்டர் சஞ்சய் குமார். பழைய ஐயப்பன் படங்களில் மணிகண்டனாக நடித்த மாஸ்டர் ஸ்ரீதர் இந்தப் படத்தில் நாரதராகி விட்டார்!

●● அரசியலில் வேண்டுமானால் ஆர். எம். வீ மௌனமாக இருக்கலாம்; சினி

* போட்டியில் வென்ற சஞ்சய்குமார்.



* யமுனா — ராம்கி: தெலுங்கில் நிலைத்த ஹீரோ.



புலிமீது அமர்ந்த கிலி அறியாச் சிறுவன்!

மாவில் அல்ல. மருமகன் தியாகராஜனைத் தயாரிப்பாளராக்கிய ஆர்.எம்.வீ., இப்போது தம்முடைய மகன்களான தமிழழகன், செல்வம், தங்கராஜ் ஆகிய மூவரையும் தயாரிப்பாளராக அறிமுகம் செய்கிறார். இந்தப் புது தயாரிப்பாளர்கள் மணிவண்ணனை டைரக்டராகப் போட்டிருக்கிறார்கள். தமிழழகனே ஒரு டைரக்டர்தானே அவர் ஏன் செய்யவில்லை? "ஏற்கெனவே டைரக்ஷன் கற்றுக் கொண்டதோடு இனியும் கற்றுக் கொண்டு சினிமா உலகமே பிரமிக்கிற மாதிரி ஒரு படம் பண்ணப் போகிறேன்" என்கிறார் தமிழழகன்.

●● பெரும்பாலும் தமிழிலிருந்து தெலுங்குக்குப் போகிற ஹீரோக்களால் அவ்வளவாகத் தாக்குப் பிடிக்க முடிவதில்லை என்கிற விதியை மாற்றியிருக்கிறார் ராம்கி. தெலுங்கில் நிறையப் படங்கள். தெலுங்கில் சூப்பர் ஹிட் ஆன 'கட்டன்னம்' என்கிற படத்தை 'இ.பி.கோ. 84' என்கிற பெயரில் தமிழில் கூட டப் செய்யப் போகிறார்களாம். கிழக்கே போகும் ரயில் சுதாகர் இந்தப் படத்தில் காமெடியனாக நடித்திருக்கிறாராம்.

— எஸ். பாலு.

வி.ஐ.பி. பந்தாவை விரும்பாத எம்.எல்.ஏ.



* எம். எல். ஏ. சந்திரகாச...

"இந்தத் தொகுதி எம். எல். ஏ. சந்திர காச வித்தியாசமானவர். இவரைப் பற்றி எழுதுங்களேன்'' என்று காரைக்கால் கல்கி வாசகர் செல்லூர் கணேசன் யோசனை கூறியிருந்தார். அப்படியென்ன வித்தியாசம் பெரிதாய் இருக்கப் போகிறது என்ற அவநம்பிக்கையோடுதான் போனோம்.

மனிதர் அசத்தி விட்டார்!

காரைக்காலுக்கு அருகில் உள்ளது நெடுங்காடு. பதினோராயிரம் வாக்காளர்களைக் கொண்ட ரிசர்வ் தொகுதி!

நெடுங்காடு கடைவீதியில் பஸ்ஸை விட்டு இறங்குகிறோம்.

''எம். எல். ஏ. எங்கே இருப்பாருங்க?''

''இப்பத்தாங்க பாண்டியிலேர்ந்து வந்தாங்க. வூட்டுக்குப் போயிருப்பாரு போலே...'' என்று பதில் கிடைக்கிறது.

வீடு பக்கத்துக் கிராமம்தான். பருத்திக் குடி. வீடு என்பது வெறும் ஓலைக் குடிசை.



* மரத்தடி மாநாடு

அந்தக் குடிசைக்குக் கார் போக முடியாது. நடந்து போகக் கூட ஒற்றையடிப் பாதைதான்! இப்போதுதான் அந்தப் பாதையில் குறுக்கிடும் ஓர் ஓடையின் குறுக்காக மரப் பாலம் உருவாகிக் கொண்டிருக்கிறது!

சந்திரகாசன் மூன்று முறை சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். நான்கு ஆண்டுகள் புதுவை சட்டமன்றத் துணைச் சபாநாயகராக இருந்திருக்கிறார். ஓர் ஆண்டு சபாநாயகராகவும் பணியாற்றியிருக்கிறார். நினைவு தெரிந்த நாள் முதல் காங்கிரஸ்காரர்.

''நான் மட்டுமில்லீங்க. பருத்திக் குடி முழுவதுமே அப்படித்தாங்க. தலைவர் தாங்க எங்களுக்குத் தெய்வம். அவர் போகச் சொன்ன எடத்துக்குப் போவோமுங்க. என்ன செய்யச் சொல்றாரோ அதைச் செய்வோமுங்க...'' என்று சந்திரகாசன் குறிப்பிடுவது புதுவை மாநிலக் காங்கிரஸ் தலைவரான பி. சண்முகத்தை.

வசிக்கும் குடிசை வீடு, இவருடைய தகப்பனாருக்கு, நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டத்தின்படி வழங்கப்பட்ட 'எல். ஜி. ஆர்' பட்டாவில் கட்டப்பட்டதுதான்.

ஒரு சமயம், சட்டமன்ற உறுப்பினர்கள் முப்பது பேருக்கும், பாண்டிச்சேரி ரெட்டியார் பாளையத்தில் இலவச வீட்டு மனையும், கடன் தொகையும் தருவது என்று ஆட்சியாளர்கள் முயன்ற போது, கட்சிக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி, ''வீட்டு மனை வழங்கக் கூடாது. முப்பது பேருக்கும் வீடு தரட்டும். ஆனால் உரிமையாக்கக் கூடாது. பதவிக் காலம் முடிந்ததும் காலி பண்ண வேண்டும்'' என்று எழுத்து மூலம் குரல் கொடுத்ததோடு, 'கட்சி மேலிடம் வரை மனுக்களும் கொடுத்த எம். எல். ஏ. இவர்.

சட்டமன்ற உறுப்பினருக்குரிய வி. ஐ. பி. விடுதிகளைப் பயன்படுத்திக் கொள்ள உரிமை இருந்தும், பிடிவாதமாக அவற்றை ஒதுக்கி விட்டு, எப்போதும் தம்முடைய குடிசை வீட்டில்தான் வசிக்கிறார்.



* எம். எல். ஏ. இல்லம்

''காலையில அஞ்சு மணிக்குப் புறப்பட்டாப் பாண்டிச்சேரி சட்டசபைக் கூட்டம் முடிஞ்சு கடைசி வண்டியிலே, ராத்திரிப் பதினொரு மணியானாலும் இங்கே திரும்பி வந்துடுவேன். அப்புறம் பம்பு செட்டில் குளிச்சுச் சாப்பிட்டுட்டு வீட்டு வாசல்ல கட்டிலைப் போட்டுப் படுத்தாத்தாங்க தூக்கம் வரும்...'' என்கிற சந்திரகாசு, இதுவரை தொலைபேசி வசதியைக் கூடப் பெற்றுக் கொள்ளவில்லை.

''பருத்திக்குடியிலே என் வீட்டுல மட்டும் டெலிபோன் இருந்தா வித்தியாசமாத் தெரியும்னு வச்சுக்கல்லிங்க. ஆனா, இப்போ, மத்தவங்க கூப்பிடற குரலுக்காகவாவது வச்சுக்கலாம்னு தோணுதுங்க'' என்கிறார் இவர்.

துணை சபாநாயகராகத் தேர்வு செய்யப்படுகிற வரை, காலில் செருப்புக் கூட அணிந்ததில்லை. ''என்னுடைய ஜனங்கள் பெரும்பாலானவங்க செருப்புப் போடற இல்லே... எனக்கு மட்டும் ஏன்'' என்று கேட்பாராம்.

அண்மையில், அமெரிக்கச் சுற்றுப் பயணக் குழுவில் சந்திரகாசுவின் பெயரும் இடம்பெற்றது. அந்த வாய்ப்பை வேண்டாம் என்று உதறினார். அரசுப் பணத்தை விரயமாக்கிப் போகக் கூடாது என்று கருதி அதற்கு மறுத்து விட்டாராம்.

எங்கு செல்வதானாலும் சைக்கிள் தான். காரைக்கால் வட்டாரம் இவருக்கு மிக வசதியான சிறிய பகுதியாக இருப்பதால், சைக்கிள் அல்லது பஸ் போதும் என்கிறார்.

வீட்டில் ரேஷன் அரிசிதான் சாப்பாடு. சிகரெட் உட்பட வேண்டாத எந்தப் பழக்கமும் இல்லாத சந்திரகாசு படித்தது எட்டாம் வகுப்பு வரையில்தான். அப்போதே அரசியலில் ஈர்க்கப்பட்டு, கொடி கட்டுவது, தட்டி கட்டுவது என்று வந்து விட்டார்.

இவருடைய மனைவி ஹையர் செகண்டரி தேர்ச்சி பெற்றவர். இரண்டு முறை, குமாஸ்தா வேலைக்கான போட்டித்தேர்வு எழுதித் தோல்வி கண்டவர். ''உனக்குச் சாமர்த்தியம் இருந்தாப் படிச்சு பாஸ் பண்ணி வேலைக்குப் போ'' என்பதுதான் அப்போதைய சபாநாயகரின் பதிலாக இருந்தது.

தெருவில், பந்தா படை சூழல் இல்லாமல், மக்களோடு ஒருவராக நடக்கும் சந்திரகாசு, பெரும்பாலான நேரங்களில், ஆலமரத் தடியில் ஒரு மதகுக் கட்டையில்தான் இருப்பார். அங்குதான் தொகுதி மக்கள் சந்திப்பது, மனுக்கள் தருவது, எல்லாம்.

''என்னுடைய தொகுதி மக்களில் தொண்ணூறு சதவிகிதம் பேரை எனக்கு நன்றாகவே தெரியும்'' என்று சொல்கிற இந்த எம். எல். ஏ. தொகுதி மக்கள் கோரிக்கைகளுக்காக எங்காவது யாரையாவது பார்க்க வேண்டியிருந்தால், அவர்களுடன் போவதைத் தவிர்த்து விடுவார். சம்பந்தப்பட்டவர்களை நேரே குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொல்லி விட்டுத் தனியாகத்தான் போவார். பஸ்ஸுக்கு டிக்கெட், காப்பிச் செலவு என்று கூட்டிச் செல்பவர்களுக்குச் செலவுதானே... அதைத் தவிர்க்கவே இந்த அணுகுமுறையாம்!


இன்றைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஓர் எளிமையா? நேர்மை, ஒழுக்கம் இவற்றைக் கடைப்பிடிக்கும் ஓர் அரசியல் வாதியைக் காணும் போது இந்திய ஜனநாயகம், செத்து விடாமல் ஆக்ஸிஜன் கொடுப்பவர் இவர்தானோ என்றே தோன்றுகிறது.

— 'யெஸ்.'

புகைப்படங்கள்: **செல்லூர் கணேசன்**

* சைக்கிள்தான் வாகனம்.




ராஜீவ்
சந்திர சேகர்
தேவிலால்
ம்... போடு முத்திரை!
ம்... ரப்பர் ஸ்டாம்பை இங்கே குத்து!
சந்திர சேகர்
துண்டு நீளமா இருக்கிறது வசதியாத்தான் இருக்கு!
வி.பி. சிங்
கருணாநிதி
செய்தி: புதிய பிரதமருடன் மோதல் இராது. — கருணாநிதி
பிரமாதமான ப்ளான் வச்சிருக்கேன்... இதன் படிதான் கட்டணும்!
சந்திர சேகர்
இருக்கிறது நாலு செங்கலு... நான் என்னத்தைக் கட்டி, என்னத்தை வாழறது...!
ராஜீவ்
அமைக்கப்பட வேண்டிய அமைச்சரவை
ஜனதா தளம் (எஸ்) உறுப்பினர்கள்



கல்கி

1990 நவம்பர் 25
மலர் : 49 இதழ் : 17
பிரமோதூத கார்த்திகை 9



ரப்பர் ஸ்டாம்ப் பிரதமர்!

விலைவாசிகளே, குறைந்து விடுங்கள்! ஏனென்றால் சந்திரசேகர் பிரதமராகி விட்டார்! அவர் உயரும் விலைவாசிகள் பற்றிக் கவலை தெரிவித்தும் விட்டார்! இனிமேலும் விலைவாசிகள் குறையாமல் இருக்கலாமா? மரியாதையாகக் குறையாவிட்டால் சந்திரசேகர் சும்மா விடுவாரா? ஆட்சிக் கவிழ்ப்பின் விலை என்ன என்பதை அம்பலப் படுத்தி விடுவார்! அந்த அரசியல் விலைவாசி உயர்வைக் கேட்டு அசல் விலைவாசி உயர்வாகிய நீங்கள் வெட்கப்பட்டுத் தலைகுனிய நேரும்! ஜாக்கிரதை!

லஞ்ச ஊழலே ஒழிந்து போ! போஃபோர்ஸ் லஞ்ச ஊழலே பழைய சரித்திரம் என்றும் அதை சப் — இன்ஸ்பெக்டர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்றும் பிரதமரின் வேலையல்ல என்றும் சந்திரசேகர் கூறிவிட்ட பிறகு, வேறு லஞ்ச ஊழல்களுக்கு இங்கே என்ன வேலை? கண்காணாமல் மறைந்து போக வேண்டியதுதானே? அப்படியே மறையாமல் தலைகாட்டினாலும் இனி லஞ்ச ஊழல் கண்காணிப்பு அதிகாரிகள் அதையெல்லாம் கண்டுகொள்ளலாமா? அதைவிட, அவர்களும் 'லம்ஸம்' வாங்கிக் கொண்டு 'லஞ்ச ஊழல் என்ற நாமதேயமே நாட்டில் இல்லை' என்று தலையில் அடித்துச் சத்தியம் பண்ணிப் பிரதமரின் பாராட்டைப் பெற வேண்டியதுதானே!

'பாரத நாட்டில் முன்னர் ரப்பர் ஸ்டாம்ப் ஜனாதிபதியைத்தானே பார்த்திருக் கிறோம்; ரப்பர் ஸ்டாம்ப் பிரதமர் ஒருவர் கூட இருந்ததில்லையே' என்று வருத்தப்படும் சரித்திர ஆசிரியர்களே, உங்கள் கவலை தீர்ந்தது! இதோ ஒரு ரப்பர் ஸ்டாம்ப் பிரதமர் தோன்றி விட்டார்! புது அத்தியாயம் தொடங்குங்கள்! பக்கம் பக்கமாக ஆசை தீர எழுதுங்கள்!

சந்திரசேகர் பதவிக்கு வந்துவிட்டதால் சத்தாம் ஹுசைன், குவெய்த்தை விட்டு வெளியேறி விடுவார் என்றும், பெட்ரோலியப் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென்று சரியும் என்றும் எதிர்பார்க்கலாம். அப்படி ஒருவேளை நடக்கா விட்டால்தான் என்ன? பிரதமர், பாலப் பருவத்தில் பள்ளிக்குப் பன்னிரண்டு கி. மீ. நடந்தவர் என்பதையும், வளர்ந்தபின் குமரியிலிருந்து பாதயாத்திரையாக நடந்தவர் என்பதையும் நினைவில் கொண்டு நாம் அனைவரும் நடக்கப் பழகிக் கொண்டால் போயிற்று!

வி. பி. சிங் பதவி ஏற்ற போது 'முதல் கோணல்' என்று தலையங்கம் எழுதி, முற்றும் கோணலாக முடிந்ததைச் சுட்டிக்காட்டிய பத்திரிகை ஆசிரியர்களே, நீங்கள் அப்படியெல்லாம் சந்திரசேகர் பற்றி எழுதிவிட முடியாது! அதற்காகத்தான் அவர் ஆரம்பத்திலேயே முற்றும் கோணலாகப் பதவி ஏற்றிருக்கிறார்! எங்கே, "முற்றும் கோணல் முதல் கோணலாக முடிந்த கதை" என்று தலையங்கம் எழுதுவீர்களா, பார்க்கலாம்! ஹெ! ஹெ!

மண்டல் அறிக்கை இனி அமுல்படுத்தப்படாது. நேற்றுவரை தீக்குளிக்கும் தீரத்துடன் இருந்தவர்கள், இனி, சொம்பு சொம்பாகத் தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு, ஜலதோஷம் பிடிக்க மூக்கை உறிஞ்சலாம்! உடனே பரிதாபப்பட்டு அத்தனை பேருக்கும் தமது ஜிப்பா பைக்குள் ஒளித்து வைத்திருக்கும் வேலை வாய்ப்புகளை அள்ளிக் கொடுத்து விடுவார் சந்திரசேகர்!

விசுவ ஹிந்து பரிஷத் 'இம்மியும் விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்று மீண்டும் சொன்னால் என்ன? முஸ்லிம் சகோதரர்கள் முரண்டு பிடித்தால்தான் என்ன? சந்திர சேகர் மந்திரம் போட்டால் ராமஜென்மபூமி பிரச்னை மாயமாய் மறைந்து போகும்! மத்திய மந்திரிசபையையே மாயமாய் மறையச் செய்தவருக்கு இது ஒரு பிரமாதமா?

துணைப் பிரதமர் தேவிலால் இவருக்கும் தலைவலியாக விளங்குவாரோ என்று யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. வலதுகை ரப்பர் ஸ்டாம்பை ராஜீவுக்கும், இடதுகை ரப்பர் ஸ்டாம்பைத் தேவிலாலுக்கும் ஒதுக்கி விட்டால், தீர்ந்தது பிரச்னை! இரண்டு பேரும் மாறி மாறி, இவர் கரங்களை உயர்த்தியும் தாழ்த்தியும் முத்திரைகளைப் போட்டுக் கொண்டு போகலாம்!

நாட்டில் இனி பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடப் போவது நிச்சயம். அப்படி ஒருவேளை ஓடவில்லை என்றால்தான் என்ன? பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுவது போலவும் அதில் ராஜீவும் சந்திரசேகரும் படகோட்டுவது போலவும் வீடியோ படம் எடுத்து, தூர்தர்ஷன் மூலம் காட்டிவிட்டால் ஆயிற்று. அப்பாவி மக்களுக்கு அது போதாதா!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

காசி பில்டர்ஸ் என்றால் ராசியான பில்டர்ஸ்



பிரேம்ராஜ் ரூ.3000/- 'ஏ' குரூப்.

'நான் காசி பில்டர்ஸ் ஹவுசிங் பெனிஃபிட் ஸ்கீம் மூலம் 3 லட்சம் பெறுமான வீட்டை அடைந்தேன். வீடு ரொம்ப பிரமாதமா இருக்கு.'



ஜி.குமார், ரூ.2000/- 'ஏ' குரூப்.

'விக்கிற விலைவாசியில சொந்தமா வீடு கட்றது சாத்தியமில்லாத விஷயம். ஆனா, இப்ப நான் 2 லட்சம் பெறுமானமுள்ள வீட்டுக்கு சொந்தக்காரன்'.



எஸ்.அந்தோனி ரூ.1500/- 'ஏ' குரூப்.

'வீடுகள் எப்படியிருக்குமோன்னு சந்தேகப்பட்டு சென்னை 91-92 ஜவஹர்லால் நேரு சாலை, காசி தியேட்டர் காம்ப்ளக்ஸில் உள்ள காசி பில்டர்ஸ் உரிமையாளர் எம்.கே.மதிவாணனை போய் பார்த்தேன். அவர் கொடுத்த விளக்கங்கள் என்னை தெளிய வைத்தது. வீடுகள் நல்லாயிருக்கு'



ஏ.ஆதிநாராயணன், ரூ.1000/- 'ஏ' குரூப்.

'சொந்தமா வீட்ல இருந்துகிட்டே ஆயிரம் ரூபாயை வாடகை குடுக்கிற மாதிரி தவணையா குடுத்துகிட்டு வர்றோம். கண்ணுக்கு தெரியாம கடன் அடைஞ்சு போகுது.'



ஆர்.சேதுராமன் ரூ.1000/- 'பி' குரூப்.

'சென்னையில வீடு வாடகைக்கு கிடைக்கறது கஷ்டம். அப்படியே கிடைச்சாலும் ஒண்ணு வாடகை அதிகமா இருக்கும் அல்லது வீடு மோசமாயிருக்கும். 'காசி ஹவுசிங் பெனிஃபிட் ஸ்கீம்'ல பணம் கட்டி வந்ததால எனக்கு சொந்தமா சென்னைல வீடு கிடைச்சிருக்கு'



எஸ்.கோவிந்தசாமி ரூ.750/- 'ஏ' குரூப்.

'எங்களைப் போல உள்ளவங்களுக்கு இந்த மாதிரி ஸ்கீம்ல வீடு வாங்கினாத்தான் உண்டு. எங்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு' என்றார் இவர் அப்பா.

PHONE: 4821969 4822206

அடுத்த குலுக்கல் நாள் 17.02.1991.
''B'', ''C'' குருப்களில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

17.2.91-ல் நடைபெறும் குலுக்கலில் நீங்களும் ஒரு வீடு பெறும் அதிர்ஷ்டசாலியாக இருக்கலாம் அல்லவா?

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம் மூலம் பெறுவீர்

இந்த திட்டத்தில் சேர விரும்புவோர் ரூ.15 செலுத்தி நேரிலும், ரூ.25/- ''KASI GROUP HOUSING BENEFIT SCHEME'' என்ற பெயர்க்கு D.D அல்லது M.O. அனுப்பி விண்ணப்பங்கள் பெறலாம்.

காசி பில்டர்ஸ்

காசி A/C தியேட்டர் காம்ப்ளக்ஸ்
91-92, ஜவஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை-95.

"மராத்தியர் அல்லாத உங்களை, எப்படி மராத்தியர்கள் பம்பாயின் போலீஸ் கமிஷனராக ஆக்கியிருக்கிறார்கள்?"

"நேர்மை, நாணயம், எதிலும் நடுநிலை இவற்றோடு பணியாற்றினால் எல்லா மக்களாலும் நாம் விரும்பப்படுகிறோம். இது நான் மகாராஷ்டிராவில் கண்கூடாகக் கண்டது!"

"ஒரு போலீஸ் அதிகாரி நாணயமானவராக இருந்தால், அடிக்கடி மாற்றப்பட்டுத் தொல்லை கொடுக்கப்படுவார் என்று பொதுவான ஓர் எண்ணம் நிலவுகிறதே. இது உண்மையா?"

"மகாராஷ்டிரத்தைப் பொறுத்தவரை ஒருவர் நாணயமானவர் என்றால் பெரிதும் மதிக்கப்படுகிறார்; போற்றப்படுகிறார்!"

"அரசியல் குறுக்கீடு மேலிடத்து நிர்ப்பந்தங்கள் இவை இல்லை என்றா சொல்கிறீர்கள்?"

"அடியோடு இல்லை. இந்த விஷயத்தில் நான் இம் மாநிலத்தவருக்கு மரியாதை கொடுத்தே ஆக வேண்டும். இங்குள்ள



* பம்பாய் போலீஸ் கமிஷனர் எஸ். ராமமூர்த்தி.

தஞ்சைத் தமிழர் பம்பாயின் போலீஸ் கமிஷனர்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மத்துக்குடியைச் சொந்த ஊராகக் கொண்ட எஸ். ராமமூர்த்தி, அண்மையில் பம்பாய் நகரின் போலீஸ் கமிஷனராகப் பொறுப்பேற்றிருக்கிறார். இவர் இந்தப் பொறுப்பேற்கும் முதல் தமிழர் மட்டுமல்ல; முதல் தென்னிந்தியர் என்ற பெருமையும் படைத்தவர்.

அரசியல்வாதிகள் பண்பானவர்கள். நாகரிகம் நிறைந்தவர்கள். அதுவும் அரசாங்க அதிகாரிகளின் உள்ளுணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுக்கத் தெரிந்தவர்கள்."

"பம்பாய் மாநகராட்சி சிவசேனா வசம் இருந்த போதும் உங்களுக்குச் சிரமம் ஏதும் இல்லையா?"

"இங்கு, உங்களுக்கு ஒரு சுவையான நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன், பம்பாயில் நடந்த சிவசேனாவின் ஆண்டு விழாக் கூட்டத்தில் அதன் தலைவர் பால் தாக்கரே என் பெயரைக் குறிப்பிட்டு, 'இங்கு ராமமூர்த்தி போன்ற நேர்மையான அதிகாரிகள் போலீஸில் இருக்கும் வரை நமக்குக் கவலையில்லை' என்று கூறியிருக்கிறார்! இவ்வளவுக்கும் 1969 இல் தென்னிந்தியருக்கு எதிராகச் சிவசேனா நடத்திய போராட்டத்தில், அப்போது பம்பாய் டெபுடி கமிஷனராக இருந்த நான் கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. இருப்பினும் சிவசேனாவினர் அதை மனத்தில் கொண்டு வன்மம் பாராட்டவில்லை!"

"பம்பாயைக் 'குற்றங்களின் தலைநகர்' என்று வர்ணிக்கிறார்களே! அது ஏன்?"

"நீங்கள் ஒரு நகரின் குற்றங்களைக் கணக்கிடும் போது அதன் ஜனத்தொகை, பரப்பளவு, அங்கு மக்கள் வசிக்கும் நிலை, சமூக

பொட்டு யாருக்கு?

'விதவை'க்குப் பொட்டில்லை,
அது வடசொல்லாம்!
'கைம் பெண்'ணிற்கும் பொட்டிரண்டாம்,
அது தமிழ்ச் சொல்லாம்!
அது சரி,
'மனைவி'க்கும் 'துணைவி'க்கும்
பொட்டெங்கே? அவை எந்த மொழி?

கைம்பெண்ணின் பொட்டழித்து
மனைவியாகப் பார்ப்பதற்குத்
தாலியுடன் வருவாரைத்
தேடிப் பார்ப்போம்,
புண்ணியம் நமக்குண்டு!

— சத்திய கிரிராஜன்.

பொருளாதார அடிப்படை இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இதன்படி பார்த்தால் ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் வாழும் பம்பாயில் குற்றநிலை அப்படியொன்றும் பதற்றப்படத்தக்க நிலையில் இல்லை. இங்கு கொள்ளையர்கள் கூட்டமாகச் சென்று வீடுகளை, காலனிகளைச் சூறையாடும் குற்றங்கள் அடியோடு கிடையாது. இன்னும் பம்பாயில் பெண்கள் இரவில் தனியாக நடந்து செல்வதைப் பார்க்கலாம். பொதுவாக பம்பாய் மக்கள் சட்டம் — ஒழுங்கை மதிப்பவர்கள் என்று தான் சொல்ல வேண்டும்.''

''பம்பாய் போலீஸ் துறைக்குச் சவால்கள் எவை?''

''தினமும் எங்களுக்குச் சவால்தான். பொதுவான சவால்கள் என்று சொல்லப் போனால் இரண்டைச் சொல்லலாம். இங்கு 'குண்டர்களின் கோஷ்டிச் சண்டை' (Gang Wars) உண்டு. இங்கு பணப் புழக்கம் அதிகம் என்பதால் 'பாதுகாப்பு அளிக்கிறேன்' என்றும் 'குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறேன்' என்றும் சில கும்பல்கள் உண்டு. இவற்றுக்கிடையே ஒன்றுக்கொன்று போட்டியும், பொறாமையும் அதிகம். இவர்களின் சண்டைகள் கொலைகளில்தான் முடிகின்றன. இவர்களை அடையாளங்கண்டு பூண்டோடு ஒழிப்பதில் இப்போது இறங்கியிருக்கிறோம். இரண்டாவது போதைப் பொருட்கள். உலக அளவில் நடக்கும் இவ் வியாபாரத்தில், துரதிர்ஷ்டவசமாக பம்பாய் ஓர் இடை நகர். இந்த நிலையை ஒழிப்பதையும் ஒரு சவாலாக ஏற்றிருக்கிறோம்!''

சந்திப்பு: **ராஜீவி நரசிம்மன்.**



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-இல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ.300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்பவேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த
தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

****** இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு ******



வெள்ளைய தேவன்

படத்தில் தென்றலாக வீசி இதமாக இருப்பது அந்த இரண்டு இளசுகளின் அறிமுகம். சீமா, ஹரிஷ் என்கிற அந்தப் பொடிசுகள் பால்வடியும் முகத்தோடு கல்மிஷமில்லாமல் பேசிக் காதல் வயப்படுவதும், நிகழ்ச்சிகளின் தீவிரத் தன்மையைப் பற்றிச் சற்றும் உணராமல் கல்யாணம் செய்து கொள்வதும் கருதியுடன் இணைந்து வெளிப்படும் சுநாதம்.

"இந்த நிலைக்குக் காரணமானவனைக் கண்டு பிடித்து அவனைக் கண்டதுண்டமாக வெட்டப் போகிறேன்" என்கிற முரட்டுத்தனமான உறுமல் பேச்சு ராம்கியின் நடிப்புக்கு அழுத்தம் தருகிறது என்றால் —

அப்படிப் பழிவாங்கப் போவதாக அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் வெறும் உறுமலோடு அவர் காலம் கடத்திக் கொண்டே போவது சப்.

தொலைக்காட்சியில் வரும் விளம்பரப் படமொன்றில் மோட்டார் டயர் ஒன்று தன்னந்தனியே காடு, மேடு, வனம், தொங்கு பாலம் என்று எல்லாவற்றிலும் சீறிப் பாய்ந்து படிக்கட்டுகளில் நடநடவென்று இறங்கி வந்து ஒரு பொம்மையின் முன்னால் சரக்கென்று நின்று விடுவதைப் போல, எங்கோ மலை உச்சியில் அமைந்திருக்கும் கோயிலுக்கருகே கொலை செய்யப்படும் தங்கையின் இடுப்பில் செருகப்பட்டிருக்கும் ஒற்றை ரூபாய் நாணயம் அதிலிருந்து விடுபட்டு விழுந்து எக்கச்சக்க வேகத்தில் படிக்கட்டுகளில் உருண்டு உருண்டு உருண்டு வந்து கீழே நின்று கொண்டிருக்கும் ராம்கியின் காலடியில் விழுந்து தங்கைக்கு ஏதோ நேர்ந்து விட்டது என்பதை உணர்த்துவதும்,

பள்ளத்தில் உயிரோடு தள்ளிப் பெரும் பலகையொன்றைப் போட்டு மூடி, அதன் மீது மண்ணைக் கொட்டி, போதாத குறைக்கு அதன் மீது ஒரு கல்லையும் வைத்த பின் அந்தச் சமாதியிலிருந்து சரியான தருணத்தில் கனகாவையும் அவர் தந்தையையும் காப்பாற்ற அவற்றையெல்லாம் தூக்கியெறிந்து மேலே பறந்து ராம்கி வெளிப்படுவதும் எல்லை மீறிய கற்பனை. மிகையின் உச்சம்.

உணர்ச்சி வெள்ளமான ராம்கியின் நடிப்பு, ஆனந்தராஜின் நைச்சியமான வில்லத்தனம், வெளிநாட்டுப் படங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட சில திகில் நிகழ்ச்சிகள், சிறப்பான படப்பிடிப்பு, லயித்துப் போகச் செய்யும் இசை இவையெல்லாம் ப்ளஸ் பாயிண்டுகள். கதையைத்தான் கோட்டை விட்டிருக்கிறார்கள்.

— கி. ஆர். கே.



● சுஷ்மா ராவத்



● ரமா

களப்பணிகளில் இளம் பெண்கள்



● ஜெயா பாண்டே

இதுவரை ஆண்கள் மட்டுமே செய்து வந்த களப்பணிகளை முதல் தடவையாக இளம்பெண்கள் நாலு பேருக்கு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிஷன் கொடுத்திருக்கிறது. நால்வரும் தஞ்சை மாவட்டம் வேங்கைதாங்கலில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படும் இடத்தில் பணியாற்றுகிறார்கள். இவர்களில் ஜெயா பாண்டே, சுஷ்மா ராவத், ரமா ஆகிய மூவரைச் சந்தித்தோம். மூவருமே எம். எஸ். ஸி., பட்டதாரிகள். புவியியல் மற்றும் ரசாயனத் துறையைச் சேர்ந்தவர்கள்.

''உங்கள் வேலை எப்படிப்பட்டது?''

''எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் இடத்தில் போய்ப் பணியாற்ற வேண்டும். டிரில்லிங், ராக்—கட்டிங், சாம்பிள்களை ஆராய்வது, எல்லாம்தான்!'' என்றார் ரமா.

''நீங்கள் அங்கே வேலைக்குப் போய்ச் சேர்ந்ததும், சக ஆண் ஊழியர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்?''

மூவரும் ஒருவரை ஒருவர் சற்றே பார்த்துக் கொண்டனர், சொல்லுவதா, வேண்டாமா என்ற தயக்கத்தோடு! பிறகு ரமா முன்வந்தார்:

''முதலில் அவர்களிடம் அத்தனை சிநேக பாவம் தெரியவில்லை. ஏதடா, இது எல்லாம் ஆண்கள் செய்கிற வேலையாயிற்றே. இவர்கள் எதற்கு இதில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற மாதிரி இருந்தது. பிறகு நாங்களே 'சான'வில் போடவும் ஏழு மீட்டர் உயர டெர்ரிக் ஃப்ளோரில் ஏறி டிரில்லிங்கைப் பார்வையிடவும் பரவாயில்லை, துணிச்சல் இருக்கிறது. கவனமாகவும் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டார்கள்.''

''அதற்குப் பிறகு எங்கள் மீது அசாத்திய அக்கறை எடுத்துக் கொண்டார்கள். ஓவராகக் கவனித்துக் கொண்டார்கள் என்று கூடச் சொல்லலாம்!'' என்றார் ஜெயா பாண்டே.

''எனக்கு நேர்ந்த அனுபவத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்...'' என்றார் ரமா.

''சக்திவேல் என்கிற சக ஊழியர், நான் இரவு ஷிஃப்டில் கஷ்டப்படுவேன் என்பதற்

காக, தமது ஷிஃப்டை முழுக்க முழுக்கப் பதினாலு நாட்களும் இரவு ஷிஃப்டாகவே மாற்றிக் கொண்டார். எனக்கு 12 மணி நேர பகல் ஷிஃப்ட்டாக இருக்கும்படி உதவினார். அதே போல் செல்வராஜ் என்ற சக ஊழியரையும் சொல்ல வேண்டும்.''

ட்ரில்லிங் இடத்தில் வேலை செய்ய, பாதுகாப்புக் கவசம், கையுறை, ஷூ எல்லாம் அணிய வேண்டும். ஏனென்றால் பாதுகாப்பு விஷயத்தில் மிகுந்த கவனம் அனுசரிக்கப்படுகிறது.

''தீப்பிடிக்காத, உடலோடு ஒட்டிய உடை. தொளதொளவென்று இருக்கக் கூடாது'' என்றார் சுஷ்மா.

''பதினான்கு நாட்கள் தொடர்ந்து எண்ணெய்க் கிணறு தோண்டும் பகுதியில் இப்படி வேலை செய்தால், இன்னொரு பதினாலு நாள் தலைமையகத்துக்குத் திரும்பி விடலாம். அப்போது எங்களுக்கு ஓய்வு மாதிரி; வீட்டிலேயே கூட இருந்து கொள்ளலாம்.''

''ஆனால் ஒவ்வொரு நாளும் 12 மணி நேர வேலை!'' என்றார் ஜெயா பாண்டே.

''இந்த வேலை கடினமாக இருக்கும் என்று முன்பே தெரியுமா?''

''தெரியும். ஆனால் கடுமையான காரியங்களைப் பெண்கள் செய்வது என்பது இந்தியாவில் புதிய விஷயம் இல்லையே. எத்தனை பெண்கள் வயல்வெளிகளிலும் கட்டட வேலைகளிலும் உடலுழைப்புத் தருகிறார்கள். நாங்கள் படித்துப் பட்டம் பெற்ற பின்னரும் சரீர உழைப்புக்குப் பயப்படவில்லை என்பதுதான் வித்தியாசம். வேலையை ஒப்புக் கொள்ளுவது என்று மனத்தில் தீர்மானம் செய்து கொண்ட பிறகு, அதைப் பற்றிக் கவலைப்படவில்லை!''

''உங்களுக்குத் திருமணமாகி, உங்கள் கணவன்மார்கள் இந்த வேலை வேண்டாம், விட்டு விடுங்கள் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?''

மூவரும் புன்னகை புரிந்தார்கள்.

''இத்தனை படிப்பு, தேர்ச்சி, அனுபவம் எல்லாம் வீண் போவதற்கல்ல. எங்களோடு எங்கள் வேலையையும் ஏற்கும் கணவன்மார்கள் வரும் வரை காத்திருப்போம்!''

சந்திப்பு: **சித்தார்த்**

புகைப்படம்: **யோகா**

யோசனை தெரிவித்த வாசகர்:
இரா. செண்பகராஜ்.
(3/135, பிள்ளையார் கோயில் தெரு, காரைக்குறிச்சி — 627 417.)



''என்ன மாப்ளே, திரும்பி வந்துட்டீங்க...? ஏதாவது மறந்துட்டீங்களா?''

''நீங்கதானே மாமா, அடுத்த தீபாவளிக்குக் கொஞ்சம் முன்னாடியே வந்துடுன்னு சொன்னீங்க...?''

— காளிதாஸன்.

ஜப்பான்: போட்டியிலும் புதுமை!



காமினோயாமா என்ற ஜப்பானிய நகரில் சோளக்கொல்லை பொம்மைத் திருவிழா நடக்கிறது. அண்மையில் அந்தத் திருவிழாவில் முந்நூறு பொம்மைகள் 'போட்டி' போட்டன. அதில், வைக்கோலால் செய்யப்பட்ட ஒரு சோளக் கொல்லை பொம்மை முதல் பரிசைத் தட்டிச் சென்றது!

ஆதாரம்: 'சன்டே மெயில்'


தகவல்: சேலம் சக்திக்கொடி.

''நம்ம கட்சியில பயங்கர நிதி நெருக்கடி போலிருக்கு!''

''எப்படிச் சொல்றே?''

''எட்டணா கொடுத்து டிக்கெட் வாங்கினாத்தான் மேடையில தலைவருக்கு மாலை போடலாமாம்.''

— வி. கெ. குமார்.



கருவறைச் சாபங்கள்

போட்டிக் கதை — 10

புஷ்பா ராஜ்குமார்

"குருக்களய்யா... குருக்களய்யா..."

"யாருப்பாது?"

"நான்தானுங்க. கோயில் ஆபீசரு உங்கள அவசரமா கோயில் ஆபீஸ்ல வந்து பார்க்கச் சொன்னாருங்க."

"..............."

"நான் வரட்டுங்களா...." அவன் நகர்ந்தான்.

"ஏண்ணா கோயில்ல எதுக்குக் கூப்பிட்டு விட்டிருக்கா?"

"ம்... நேக்கு ஒண்ணும் புரியலையே!"

"சம்பளம் ஏத்தறதைப் பத்திப் போன மாசம் பேசினேன்னு சொன்னேளே அதுக்காகத்தான் இருக்கும்!"

"இருக்கும்... இருக்கும்..."

இடுப்பு வேட்டியை இறுக்கிக் கட்டியபடி படியிறங்கினார்.

"ஏண்ணா இந்தாங்கோ நம்ம பொண்ணு பணம் கேட்டு எழுதின லெட்டர். இதையும் அவாள்ட்ட காமிச்சுட்டு, கூட ஏதாவது கேட்டுப் பாருங்கோ. அடுத்த மாசமாவது காஞ்சிவரம் போய்ப் பெரியவாள தரிசனம் பண்ணிண்டு வந்திடலாம்!" — நீட்டிய கடிதத்தை இரண்டாய் மடித்து இடுப்பில் செருகிக் கொண்டார்.

'அன்புள்ள அப்பா, அம்மா அறிவது: கடவுள் கிருபையாலும், தங்கள் நல்லாசியாலும் நான் நலமுடன் படித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது பள்ளிக்குக் கட்ட வேண்டிய புத்தகப் பணம் எழுபத்தைந்தை எனது தோழியிடம் கடன் வாங்கிக் கட்டியுள்ளேன். அதனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். தாமதமில்லாமல் அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பி வைத்த கோயில் பிரசாதம் பெற்றுக் கொண்டேன்.'

— கடித வாசகங்கள் நெஞ்சில் அலைகளாய் மோதின. "ஒரு பெண்ணைப் படிக்க வைக்கக் கூட முடியவில்லையே ஈஸ்வரா..."

'அப்பா உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?'

'கடவுளுக்குச் சேவை செய்யறதுக்குக் கூலி ஏதும்மா!'

'அய்யோ! அத கேக்கலே... கோயில்ல உங்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கறா?'

'நூறு ரூபாய்.'

'அப்படின்னா ஒரு நாளைக்கு உங்க கூலி மூணு ரூபா. 0.3333333 பைசாதானே' என்று எழுதிக் காண்பித்தான்.

'...............'

'டைலர் கடைல காஜா பையனுக்குக் கூட இந்தச் சம்பளம் கெடையாதுப்பா. இதை விட அதிகம்!'.

'தாயி, கடவுளுக்குச் சேவை பண்றது சம்பளத்துக்காகத்தான்னு நெனச்சுண்டிருக்கியா?'

'இல்லப்பா வயிறுன்னு ஒண்ணு இருக்கே? அது போகட்டும். நான் உங்க பொண்ணு. மெரிட் காலர்ஷிப் வாங்கி டெ்ணத் வரைக்கும் படிச்சிட்டேன். இதுக்கு மேல படிக்கணும்னா என்ன செய்யறது? எப்படிப் படிக்க வைப்பேள்?'

'...............'

'ஒன்பதாவது, பத்தாவது படிக்கும் போது புத்தகம் வாங்கவே வீட்டுல இருந்த பழைய ஓடுகளை வித்துக் கீத்துப் போட்டுட்டேன். இப்ப என்ன செய்யப் போறேன்?'

'படிச்சது போதும் நிப்பாட்டிடு தாயி.'

'அப்பா' — என்று கன்னம் சிவக்க அழுதவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. என்ன செய்வது? ஏழையின் மகளாகப் பிறந்து விட்டாளே!

பத்தாம் வகுப்புப் பாஸ் செய்து, நல்ல மதிப்பெண் எடுத்து, டீச்சர் டிரெயினிங் சேர்ந்து விட்டாள். இப்போது புத்தகத்திற்குப் பணம் அனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதி இருக்கிறாள். போன மாதச் சம்பளத்தோடு நூறு ரூபாய் கடன் கேட்க வேண்டும். மளிகைக் கடன் கொடுத்து விட்டு, மகளுக்குக் கொஞ்சம் பணம் அனுப்பி விட்டு, இந்த மாதமாவது காஞ்சிபுரம் சென்று பெரியவாளைப் பார்த்துத் தரிசித்து விட்டு வர வேண்டும். இந்த மாதம் சம்பளம் ஏற்றித் தரச் சொல்லிக் கோயிலில் கேட்க வேண்டும். அப்போதுதான் அடுத்த மாதமாவது

கொடுப்பார்கள். பலவாறு சிந்தித்துக் கொண்டு அலுவலகப் படியேற, படியில் கிடந்த செருப்புத் தடுக்கித் தடுமாறினார்.

''வணக்கம் சாமி.''

''என்ன குருக்கள் ஆபீஸ் பக்கமே காணோம்!''

''ஆபீஸ் பக்கம் வர்றதில்லை. பூஜை முடிஞ்சதும் நேரா வீட்டுக்குப் போயிடுவேன்.''

''அது சரி. அத இதக் கொஞ்சம் வெட்டிக்கிட்டு ஆபீஸுக்கா வர முடியும். வீட்டுக்குத்தான் போவீரு.''

''என்ன சொல்றேள்... என்ன சொல்றேள்?'' — பதறினார்.

''சொல்றதுக்கென்ன இருக்கு? உள்ளதைத்தான் சொன்னேன்.''

''...............''

''ஆமா கோவில்ல எத்தனை வருஷமா பூஜை பண்றீரு?''

''இருபத்தாறு வருஷமா இருக்கேன்.''

''இருபத்தாறு வருஷத்துல எவ்வளவு கோயில் சொத்தைச் சாப்பிட்டிருப்பீரு?''

''சாமி'' — வேர்த்துக் கொட்ட நடுங்கினார்.

''ஆமா, போன மாசம் எண்ணெய்ச் செலவு மட்டும் ஏன் அதிகமாயிட்டது? உம்ம பொண்ணு வந்து இருந்ததால தலையில தேய்ச்சிக் குளிப்பாட்ட வாங்கிட்டீரா?''

''அய்யா... இல்லாததைப் பேசறேளே... கோயில்ல உள்ள, வெளியேன்னு பிராகாரத்துல காலம் காலமா வெளக்கேத்தற இடத்துலதான் வெளக்கேத்திட்டு வர்றேன்.''

''ஏய்யா... லைட்டுதான் கோயில்ல டொண்டி போர் அவர்ஸ்ஸும் எரியுதே! எதுக்கு அநாவசியமா வெளக்கேத்தறே?''

''..................''

''சந்தனம் மிஞ்சினா எதிலேயோ தடவிக்குவாங்கன்னு சொல்ற மாதிரி, உம்மள யாரு கார்த்திகை மாதம் அகல் விளக்கேத்தி அசிங்கம்புடிச்ச எடங்கள்ள கூட வைக்கச் சொன்னது? இதோ பாரும், உம்ம சம்பளத்துல இருபத்தஞ்சு ரூபா கட் பண்றேன். போன மாசம் நீரு சொந்தத்துக்கு ஆயில் யூஸ் பண்ணினதுக்கு.''

''நானா? நானா எடுத்திண்டு போனேன் இல்ல சாமி, இல்ல... அபாண்டமாப் பொய் சொல்றேளே...''

''கோயில் அதிகாரி நான். நான் சொல்றதைக் கேளும். ஆமா கோயில் குத்தகை நெல்லை பாதிக்குப் பாதி மறைச்சிட்டேன்னு ஊர்ல சொல்லியிருக்கிறீரே உமக்கு எவ்வளவு கொழுப்பு?''

''அய்யா எனக்கு என்ன தெரியும் இங்கே நடக்கிறது? நானா சொன்னேன்? நான் அசிங்கமாச் சொல்வேனா? பெரிய வார்த்தை பேசறேளே!''

''ஆமாய்யா, பேசுவந்தான். உன்னைச் சொன்னா வுட்டுடுவியா? ஏதோ போனாப் போவுதுன்னு பார்த்தா, ஊர்ல போய்த்



தண்டோரா போட்டிருக்கிறீரு. நான் குத்தகை நெல்லைப் பாதிக்குப் பாதி மறைச்சிட்டதாகவும், கோவில நெலத்துல இருந்த மரங்களை வெட்டி வித்துட்டதாகவும். இது எவ்வளவு பெரிய கிரிமினல் குற்றம் தெரியுமா? உம்ம மேல மானநஷ்ட வழக்கு போடலாம்யா. நான் பெரிய மனசு பண்ணி விட்டுட்டேன். இருபத்தாறு வருஷமா ஒண்டியா கோயில்ல இருக்கறீரு. நீரே திறையச் சுருட்டிட்டீருன்னு நான் சொன்னா எப்படி இருக்கும்? எம் பேச்சை ஊர் நம்பாதா?''

''சிவ சிவ.''

''என்னய்யா செஞ்சதையும் செஞ்சுபுட்டு சிவசிவ நொவ சிவ? உம்ம கையில சாவி இருக்குது. எந் நேரமும் கோயில்லேயே இருக்கீரு. எதையாவது தூக்கிட்டுப் போயிருந்தீருன்னா யாருக்குத் தெரியும்?''

கண்களில் ஜலம் பொங்கிற்று. மனசு கதறித் துடித்தது.

''பொம்பள மாதிரி அழுது வேஷம் காட்டிட்டா ஆயிடுமா? காலைலேயும், மாலைலேயும் எதுக்கு வீணாக் கோயிலைத் திறக்கறீரு?''

''முக்காலமும் பூஜை பண்ண வேணாமா?''

''உன்னை எவன்யா முக்காலமும் பூஜை பண்ணச் சொல்றான்? கடவுள் உன்கிட்டே ஓடி வந்து பூஜை பண்ணு, பூஜை பண்ணுன்னு அரிச்சானா? எதுக்கு இதெல்லாம் செய்யறே?''

''சாமி, கோயில் ஆபீசரு நீங்க. நீங்களே இப்படிப் பேசறேளே.''

''நான் பேசாம எவன்யா பேசுவான்? இதோ பாரு உமக்கு வயசாயிடுச்சி. வேலையை விட்டு நின்னுக்கோ. நான் இளம் பசங்களாப் பாத்துப் போட்டுக்கறேன்.''

''சா.....மி.....???''

''என்னய்யா சாமி. உனக்குக் கொடுக்கிற நூறு ரூபாயிலேயும் ஒரு படிச்சவனக் கொண்டாந்து போட்டா காலைல கணக்கு எழுதிட்டு, சாயங்காலம் பூஜை பண்ணிட்டுப் போயிடுவான். இப்ப இங்கே ஆளா கெடக்கலை? காலைத் தூக்கி வச்சாப் படிச்சிட்டு வேலையில்லாத ஐயருப் பசங்க தான்யா மிதிபடறான்.''

''............''

''சரி போ, ஏதோ வயசாயிடுச்சேன்னு இந்தத் தடவை விடறேன்.''

''சாமி கொஞ்சம் பணம்....''

''சம்பளம் கேக்குறீரா? எனக்கே சம்பளம் 5 ஆம் தேதிதான்யா கெடச்சது. கவர்ன்மெண்ட் லட்சணம் அப்படி. எங்கேயோ ஜம்முன்னு மாமூல் வாங்கிட்டு சம்பளம் எதிர்பார்க்காம வாழ்ந்தவன்யா நான். இப்ப இந்தப் பீடை புடிச்ச கோயில்ல தூக்கிப் போட்டுப் பழிவாங்கிட்டானுங்க. இதுல ரெண்டு நெல்லு வித்தா நாலு மரம் வெட்டி வித்தா உடனே அதைப் பெரிசாப் பேசறான்க. ஏய்யா நான் கேக்கறேன், எத்தனை மந்திரி உண்டியல் உண்டியலாத் தூக்கிட்டுப் போனான். எத்தனை அரசியல்வாதி அறங்காவலர்னு சொல்லிட்டுக் கோவில் சொத்தை ஏப்பம் விட்டான். அப்பெல்லாம் உமக்கு... உம்மப் போல ஆளுங்களுக்கு கண்ணு அவிஞ்சி போச்சா? அது கெடக்கட்டும் கழுதை. உமக்கென்ன செலவு? அடுத்த மாசம் சேர்த்து வாங்கிக்கோ.''

''பொண்ணு லெட்டர் போட்டிருக்கா பணம் வேணுமின்னு.''

''இந்தக் காலத்துல ஐயரு பசங்களே படிச்சிட்டு வேலை இல்லாம இருக்கறது தெரியும். இருந்தும் பொட்டப் புள்ளையப் போயிப் படிக்க வைக்கறேன்னு சொல்றீரே பைத்தியம்யா நீ..''

இதற்கு மேல் நிற்பது நல்லதல்ல. படி இறங்கினார். கடவுளே, ஈஸ்வரா உனக்கு இரவு. 'பகலாகப் பூஜை பண்ணிண்டு வர்றேன். என்னையே சோதிக்கறியே. வீட்டுக்குப் போகலாமா? பொண்ணுக்கு எப்படிப் பணம் அனுப்புவது? மனைவி கூறியது போல் காஞ்சிபுரம் சென்று பெரியவரைத் தரிசித்து விட்டு வருவதும் நின்று போய் விடுமோ? கோயிலில் எதற்கு குருக்கள்? குனியச் சொல்லிக் குட்டவா?

கோவில் திருவிழாவிற்கு வண்ண வண்ணமாகப் பத்திரிகை அடித்து, யார் யாரையோ பாட அழைப்பார்கள். ரசிகர் மன்றத் தோரணம் கோயிலில் கட்டப்பட்டிருக்கும். சினிமா காட்டுவார்கள்... சாமி கும்பிடுவது ஒரு வேடிக்கையாய்ப் போயிற்றா! தெய்வத்தின் சந்நிதியில் கால் கடுக்க நின்று பூஜை செய்வது குற்றமோ? அர்ச்சனைக்குச் சீட்டடித்து, அஞ்சு, பத்து வசூலித்து, சாமி கும்பிடுவதையே தொழிலாக்கி விட்டார்களே! சர்வேஸ்வரா...!

''வாங்கோண்ணா எல்லாம் சுபமா முடிஞ்சுதா?''

''............''

''என்ன பேசாம இருக்கேள். ஏண்ணா என்னாச்சி உமக்கு?''

''பெரியவா படம் எடுத்துக் கூடத்துல வையி.''

தலைநிறைய ஜலம் ஊற்றி ஈரத் துணியோடு உள்ளே வந்து, நெஞ்சு மண்ணில் பட பெரியவர் படத்திற்கு முன்னால் விழுந்து வணங்கி...

''சுவாமி... சுவாமி நான் திருடனா? நான் தப்புச் செய்யறேனா? அப்படின்னா என்னைக் கொன்னு போட்டுடும். அந்த சாட்சி



"சாம்பார் கொஞ்சம் தண்ணியா இருக்கு இல்லே...?"

"ஆமாம்... போன பந்தியிலே நல்லாவே இருந்திச்சு..."

— காஞ்சி எஸ். கைபகதீன்.

நாதனை நான் நம்பலை. உம்மை நம்பறேன். அவன் திருடனுக்குப் பாதுகாப்புத் தர்றான். சுவாமி கோயிலெல்லாம் திருடன்கள். பாத்துட்டு இருக்கேளே நியாயமா? கோயிலெல்லாம் பெருச்சாளி கூட்டம்; விட்டுட்டு வேடிக்கை பார்க்கறேளே. பிடிக்க வேணாமா?''

கை தூக்கி ஆசி கொடுத்த பெரியவர் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

''ஏண்ணா என்னாச்சி உமக்கு? வந்தேள்... பேசாம ஏதோ முணுமுணுக்கறேளே, பணம் கெடைச்சுதா?''

''கெடச்சது. நிறையக் கெடைச்சது. வாங்கிண்டு வந்ததைத்தான் ஜலத்தோட விட்டேனே.''

''பொண்ணுக்குப் பணம் அனுப்பறது என்னாச்சு?''

''அனுப்பறேன். அனுப்பறேன்.''

''காஞ்சிவரம் போயிட்டு வருவோம்னது என்னாச்சி?''

''வா, இப்படி வா. இதோ; இதோ; பெரியவா இருக்கா பார்த்துக்கோ. பிராமணனா, ஏழை பிராமணனா பொறந்ததுக்கு நமக்குக் கெடச்ச பாக்கியம் இவ்வளவுதான். வா, வந்து விழுந்து கும்பிட்டுக்கோ.''

உடைந்து, உடைந்து அழ கண்ணீர் கொட்டிற்று. பெரியவர் படத்தை நனைத்தது. ''ஆண்டவா பிராமணனாய் பிறப்பது குற்றமா? கருவறையில் சாபம் கொடுத்துத்தான் உனது கருவறையில் வைத்து எங்களை ஏழ்மையாக்கி வேடிக்கை பார்க்கிறாயோ? கை கொட்டிக் குழந்தை போல் சிரிக்கிறாயோ? பிராமணன் பிறந்தது குற்றமா?'' இரவு முழுதும் அழுதார்.

"எங்கண்ணா கிளம்பிட்டேள் இன்னும் விடியலையே!'' கேள்வி புதுசு. ''ராத்திரி முழுசும் கோயிலுக்குப் போக மாட்டேன்னு சொல்லிண்டு இருந்தேளே!''

''அசடு. நான் போகலைன்னா கோவில் இல்ல. சாமி இல்ல; சாமியத் தூக்கி ஏப்பம் விட்டுட்டுக் கோயில்ல வீடு கட்டிடுவான் மனுஷன்.''

பூஜை முடித்து, மூன்று சோற்றுப் பட்டைகளைத் தட்டில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''வா வேகமா வா'' — ஒரு காகம் தனது கூட்டத்தை அழைத்தது.

ஒரு பட்டையை இரண்டாக, நாலாக, எட்டாக உடைத்துப் போட்டுவிட்டு, இலையில் வைத்து இரண்டு பட்டைச் சோற்றோடு வெளியே வந்தார். ''சாமி சாட்சிநாதா தப்புச் செய்யறேன்... மன்னிச்சுடுப்பா. இதில் காலை உணவை முடிக்கலாம். மதியம் பட்டினி கிடந்து, இரவு இரண்டு பட்டை எடுத்துச் சென்றால் இரவு உணவு முடிந்தது. சம்பளம் மிச்சம். மனசு கணக்குப் போட்டது. சம்பளத்தை மகளுக்குக் கொஞ்சம் அனுப்பி விட்டு, அடுத்த மாதமாவது காஞ்சிவரம் போய் வரலாம்.''

''ஐயரே வாங்க வாங்க. உங்களத்தான் எதிர்பார்த்துட்டே இருந்தேன். பொதுவா ஒத்தப் பாப்பான் எதிரே வந்தா எதுவும் விருத்தியாகாதுன்னு சொல்வாங்க. நான் பத்து வருஷமா உம்ம முகத்துல முழிச்சிட்டுத்தான் விதை போடறேன். நடவு வைக்கிறேன். அறுவடை செய்யறேன். அமோகமா இருக்கு. ராசின்னா அப்படி ராசி ஐயரே. நான் வரட்டுமா?''

''அடடே குருக்களய்யாங்களா. வீட்டுக்குப் போறாப்பல இருக்கு. உமக்கு என்னங்க கவலை? மாதா மாதம் சம்பளம். அர்ச்சனைத் தட்டுல காசு, தேங்காய், பழம். அட இப்பக் கூடப் பாருங்க இந்த விடிகால நேரத்துல கூட கோயில் பட்டைச் சோறு.''

''கோயில் பட்டை சோறு; கோயில் பட்டை சோறு'' — சுவரில் எதிரொலிக்க, ''சாட்சிநாதா இப்படி வந்தா என்னை சோதிக்கிறாய்?''

''இந்தாப்பா.''

''என்ன குருக்களய்யா.''

''வாங்கிக்கோ'' — அவன் கைகளில் போட்டு விட்டு வீட்டை நோக்கி நடந்தார். மகளுக்குப் பணம். காஞ்சிபுரம் போய் பெரியவரைத் தரிசிப்பது கனவாய்... கனவாய்...

''எம் புள்ள குட்டிக்கு இன்னக்கி இது போதும். நீங்க நல்லா இருக்கணும் குருக்களய்யா'' அவன் குரல் காற்றில் மிதந்து கொண்டிருந்தது.



டாக்டர் பதில்கள்:

'கோமா' ஏன் ஏற்படுகிறது?

0 எஸ். ரமேஷ், மதுரை — 16:

o கோமா (coma) என்ற நிலை எதனால், எப்போது, எப்படி ஏற்படுகிறது?

00 டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம், சென்னை — 18:

விழிப்பு நிலை மாறி, மயக்க நிலை ஏற்படுவதுதான் 'கோமா' எனப்படுவது. நல்ல விழிப்பு நிலையில், மூளை எல்லா உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் ஏற்று, அதற்குத் தகுந்தவாறு நம் சரீரத்தை இயக்குகிறது. ஆனால் கோமா நிலையில் இந்த நிலை மாறுகிறது. வலியோ, சூடோ, பாதிப்பதில்லை. மூச்சு மட்டுமே இயங்குகிறது. இரத்த ஓட்டம் இருக்கிறது. இதயம் துடிக்கிறது. உயிருக்குத் தேவையான நிலைகள் இருக்கின்றன. ஆனால் எழுப்பினால் எழுப்ப முடியாது. உணர்வுகள் பாதிக்கப்பட்டிருக்கும். ஊசியினால் குத்தினால் கூட உணர்வு இருக்காது.

இந் நிலைக்கான காரணங்கள்: விபத்தினால் மூளைக்கு ஏற்படும் சேதம்; மூளையில் உள்ள ரத்த நாளங்கள் சேதமடைதல் அல்லது இரத்த நாளத்தில் ரத்தம் உறைதல்; குழாய்கள் உடைந்து இரத்தம் வெளியேறுதல்; கிருமிகளால் மூளை பாதிக்கப்படுதல்; மூளையில் கட்டிகள்; காக்காய் வலிப்பு வருதல்; மின்சாரத் தாக்குதலினால் மூளைக்கு ஏற்படும் கெடுதல்கள்; அலர்ஜியினால் ஏற்படும் கேடுகள்.

0 எஸ். மாதவன், ஆக்கூர்:

o சாப்பிடும் மருந்துக்கும், உடலில் ஊசி மூலம் செலுத்தப்படும் மருந்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

வாயினால் உட்கொள்ளும் மருந்து முதலில் இரைப்பைக்குள்ளும், பிறகு குடல் வழியாகவும் சென்று ஜீரணிக்கப்பட்டு, ரத்தத்தில் சேர்க்கப்படுகிறது. சில சமயங்களில் வாந்தி இருந்தாலோ, குடலில் உணவை ஏற்கும் சக்தி குறைந்திருந்தாலோ மருந்துகள் செவ்வனே ஜீரணமாகி உடலில் சேராது; இந்த நிலை ஏற்பட்டால், ஊசியால் மருந்தைச் செலுத்த நேரிடுகிறது. மருந்தை ஊசி மூலம் செலுத்துவது மூன்று வகைப்படும். 1. தோலுக்குக் கீழே; 2. தசைக்குள்ளே, 3. சிரை வழியே (ரத்த நாளம்)

முதல் முறையில் ஊசி மருந்து உடலில் சேர்வதற்கு அதிக நேரமாகும். (உ.ம்.) ஆஸ்துமாவுக்குக் கொடுக்கும் அட்ரினலின். இரண்டாவது முறையில், மெதுவாக மருந்து வேலை செய்தால் போதும் என்ற நிலையில், தசைக்குள் செலுத்தப்படுகிறது. (உ.ம்.) வைட்டமின் ஊசி. மூன்றாவதாக, சிரையில் ஊசி மருந்தைச் செலுத்தினால், அதிவிரைவாக மருந்தின் சக்தி ரத்தத்தில் பிரதிபலிக்கும். துரிதமாகக் குணம் கிடைக்கும். அத்தோடு, கழிவாகவும் மருந்து வெகு சீக்கிரத்தில் வெளியேறி விடுவதால், உடலுக்குக் கேடு எதுவும் நேராது. முன் ஜாக்கிரதையாக ஒவ்வாமை (அலர்ஜி)யைக் கவனித்துப் பிறகே கொடுக்க வேண்டும்.

தொகுப்பு: எஸ். வி. என்.



ஜலதோஷம் பறந்து போச்சு!
புதிய 15 கிராம்
5 கிராம்
Amrutanjan's Cold Rub
யூக்கலிப்டஸ்
அடங்கிய
அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
குழந்தைகளின்
மென்மையான
சருமத்திற்கு மிகவும்
இதமானது...
அன்னையின்
அன்பான
அரவணைப்பைப்
போல...
அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
ஜலதோஷத்திலிருந்து துரித நிவாரணம்
HTA 7351



சரியான வகையில் கட்டப்பட்ட ஒரு வீட்டிற்கு
சிறந்த முறையில் அமைக்கப்பட்ட
ஒரு தண்ணீர்த் தொட்டி தேவை
கும்மடி பாலிமேர்ஸ் தயாரிக்கும்
ஜி & பி தண்ணீர்த் தொட்டிகள்
மற்றும் மேல் மட்டத் தொட்டிகள்
இந்தியாவில் தயாராகும் தண்ணீர்த் தொட்டிகளில் ஜி & பி தொட்டிகள் மட்டுமே தூய்மையான (ஃபுட் அண்ட் ட்ரக் அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் யூ.எஸ்.ஏ வின் அங்கீகாரம் பெற்ற) உயர்ரக பிளாஸ்டிக்கில் தயாரிக்கப்படுபவை. போட்டி மலிந்த இவ்வுலகில் இதர தயாரிப்புகள் மறு உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக்கில் தயாராகின்றன. உண்மையை உணரும் உங்கள் திறமைக்கு எடுத்துக்காட்டாக, பெருமிதமாக உங்கள் வீட்டில் ஒரு ஜி & பி தொட்டியை நிறுவுங்கள்.
G&P
Good & Proper
ஜி & பி- தரத்தில் உயர்ந்தது.
உறுதியானது.
கும்மடி பாலிமேர்ஸ் (பி) லிமிடெட்,
33, ஹபிபுல்லா சாலை சென்னை-600 017.
தொலைபேசி: 866241/474348
டெலெக்ஸ்: 041-7099 IMC IN
G&P
ஜி & பி தண்ணீர் தொட்டிகள்
வற்றாத நீர் ஊற்றுகள்
உங்கள் அருகாமையில் உள்ள அங்கீகாரம் பெற்ற G&P டீலரை அணுகவும்.

மிதிபட்டுப் போன பூக்கள்

மனோகர் மறுபடியும் கேட்டான். "நீ ஆபீஸ் போகப் போறதில்லே... பிறகென்ன? என் கூட வாயேன்?"

ரவிக்கு எரிச்சல். "எத்தினி வாட்டி சொல்றது? அவரைச் சரியாக் கூட நான் பார்த்ததில்லே... உங்க ஆபீஸ்ல வச்சுப் பார்த்ததோட சரி... நான் வந்து என்ன பண்ணப் போறேன்?"

"இந்த மாதிரி இடத்துக்கெல்லாம் யாரும் கூப்பிட்டுத்தான் போகணும்னு அவசியமில்லை. ரூம்லே இருந்தால் போரடிக்கும். வாடா..., ப்ளீஸ்; போயிட்டு வரலாம்... எனக்கும் கம்பெனியா இருக்கும்!"

அவ்வளவு தூரம் கூப்பிட்டும் போகாவிட்டால் நட்புக்கு மரியாதையில்லை.

கொஞ்ச நேரத்தில் லேசான அலங்காரத்துடன் மனோகர் தயார் ஆனான்.

ரவிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. வேஷ்டி மட்டும் கட்டிக் கொண்டு நேற்றுப் போட்ட சட்டையையே போட்டுக் கொண்டான்.

"பேண்ட் போட்டுக்கிட்டு வந்தால் என்னடா? சட்டை கூட அழுக்காயிருக்கே...!"

"பரவாயில்லே மனோ. எனக்கு என்னவோ போலிருக்கு. டீக்கா ட்ரெஸ் பண்ணிக்கிட்டுப் போற மாதிரி இடமா அது?"

"நீ வந்து பாரு அங்கே... ஒவ்வொருத்தன் என்னவெல்லாம் பண்றான்னு..."

பஸ்ஸிலேயே போகலாம்தான். மனோகர் கேட்கவில்லை. "வண்டி கையிலே இருக்கும் போது பஸ்ஸா...?"

ரவி பில்லியனில் ஏறிக் கொண்டான்.

தெரு முனையிலேயே வீடிருந்தது. தெருவை அடைத்த சேர்கள், நீளப் பெஞ்சுகள், ஓரங்கட்டப்பட்ட வாகனங்கள். அடுத்த நடவடிக்கைகள் குறித்த சம்பாஷணைகள். வாசலில் நிறையச் செருப்புகள் — எந்தப் பேதமும் இல்லாமல் இரண்டறக் கலந்து போய்...

மனோகர் அவனுக்குத் தெரிந்த சகாக்களையெல்லாம் பார்த்துச் சின்னதாக முறுவலித்தான். ஒன்றிரண்டு பேரை ரவிக்குத் தெரிந்தேயிருந்தாலும் அந்த இடத்தில் சினேகம் பாராட்டத் தயக்கமாயிருந்தது அவனுக்கு. அப்போதைக்கு அது தேவையும் இல்லை.

உள்ளே நுழைந்ததும் மெலிதான குரலில் விசும்பல்கள். கேவல்கள், புலம்பல்கள். ஊதுபத்தி வாசனை நெருங்கிய உறவு மாதிரி அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

இன்னும் அருகே போனார்கள். நீளமான நாற்காலியில் ராஜரத்தினம் மல்லாந்திருந்தார். லேசாய், ரொம்ப லேசாய்ப் பிரிந்திருந்த மாதிரி தெரிந்தன இமைகள். ஒருவேளை பிரிக்க முயன்று தோற்றிருப்பாரோ? மூக்குத் துவாரங்களில் இரத்தக் கறையோடு பஞ்சு உருண்டைகள். செத்த பிறகும் அவரிடம் கம்பீரமிருந்தது. அவரின் அதிர்ஷ்டமாயிருக்கலாம். கம்பெனியில் சீனியர் எக்ஸிக்யூட்டிவாய் நிறையப் பேரை ஆளுமை செய்த பரிச்சயமாயிருக்கலாம்.

சிவப்பாய், நல்ல உயரத்தில் அந்தப் பெண் உள்ளிருந்து வந்து தலைமாட்டருகில் உட்கார்ந்து கொண்டு. ஏதோ நினைவுகளில் மூழ்கிப் போனாள்.

"ரவி... அவரோட ரெண்டாவது பொண்ணு... க்வீன் மேரீஸ்ல பி.எஸ்ஸி. பண்றா. வத்சலா..." என்று மனோகர் காதருகில் ஏக உற்சாகமாய்ச் சொன்ன மாதிரி பட்டது.

ரவிக்கு அவமானமாய் இருந்தது. திரும்பி அவனை ஒரு முறைப்புப் பார்வை பார்த்தான். மனோகர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"வாடா, வெளியே போய் இருக்கலாம்... எவ்வளவு நேரம் இப்படியே நின்னுக்கிட்டிருக்கிறது...? புதுசா வர்றவங்களுக்கு வேற இடைஞ்சலா இருக்கும்..." எதையோ தவிர்ப்பதற்குச் சொன்னான்.

வெளியே வந்தார்கள். நெருங்கி நெருங்கி வேண்டியவர்களோடு சகலமும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவரவர்க்குப் பிடித்த டாபிக்கில். புதுசாய் வருகிறவர்களை உபசரணை செய்து கொண்டு, பெண்கள் வந்தால் வெறித்துப் பார்த்துக் கொண்டு, எப்போதடா சனியன் முடிந்து தொலையும் என்ற எதிர்பார்ப்போடு, எதற்காக வந்தோம் என்ற சங்கடத்தோடு என்று பல ரகங்களில் முகம் காட்டிய ஜீவன்கள்.

"போலாமா?"

"எங்கே ரவி...? கொஞ்ச நேரம் பொறுமையாயிரு. இப்ப நாம் மட்டும் வெளியேறிப் போனா நல்லாயிருக்காது..."

ஜியா

எது நன்றாயிருக்காது? அத்தனை பேர் மத்தியில் அந்த வத்சலாவை உற்றுப் பார்ப்பது மட்டும் நன்றாயிருக்குமோ?

மூன்று இளைஞர்கள் சற்றுத் தள்ளியிருந்த டீக்கடைக்குள் நுழைந்து விட்டு வரும் போது, சிகரெட் பிடித்துக் கொண்டு வந்தார்கள். கொஞ்ச நேரத்துக்கு நம்முடைய தேவைகளை அடக்கிக் கொண்டால் தான் என்ன? யாருக்குள்ளும் எந்தப் பாதிப்பும் இல்லை. அவரவர் வட்டங்களிலேயே அவரவரும் நின்று கொண்டு, ஏதோ செய்வதாகப் பாவ்லா பண்ணுகிறார்கள். எல்லோருக்கும் வேடிக்கை பார்க்கப் பிடிக்கிறது!'

உள்ளேயிருப்பவர்களில் எத்தனை பேருக்கு இந்த இழப்பு துக்கம் தருகிறது? ரவிக்கு மறுபடியும் உள்ளே போய் ராஜரத்தினத்தைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. எத்தனை பேரை அவருக்கு அடையாளம் தெரியும்?

''கஜபதி எங்கே...? உள்ளே வாப்பா... பகபதி இருக்காரா...? வாங்க தம்பி நீங்களும்...'' உள்ளேயிருந்து வந்த அந்த உயரமான மனிதர் நாலைந்து பேரைக் கூட்டிக் கொண்டு போனார்.


''என்னப்பா...?'' யாரோ விசாரித்தார்கள்.

''திடும்னு அட்டாக் வந்து செத்ததால ரத்தம் நிறைய வெளியாயிட்டே இருக்கு. எத்தனை தடவை துணி மாற்றினாலும் நனைஞ்சிடுது... ஐஸும் கூட வச்சுப் பார்த்துட்டாங்க. அதனால பாடை கட்டறதுக்கு முன்னாடி ஒரு வாட்டி குளிப்பாட்டிடலாம்னு முடிவு பண்ணியிருக்காங்க...'' துண்டைத் தலையில் கட்டிக் கொண்டே அந்த மனிதரும் உள்ளே போனார்.

''நானும் போயிட்டு வரட்டா மனோ?''

''என்ன ரவி...? அதைப் போயி வேடிக்கை பார்க்கப் போறியா?''

'அப்படியே வெச்சுக்க' என்று சொல்லலாமென்று நினைத்தவன், ''இல்லே, இதுவரைக்கும் இந்த மாதிரி அனுபவம் எனக்





செய்யும் வேலையில் நீயே இன்பம் காண ஆரம்பித்து விட்டால், நீண்ட நேரம் வேலை செய்த போதிலும் உனக்கு களைப்போ சோர்வோ ஏற்படாது. அது உனக்கு வேலை போன்றே தெரியாது. விளையாட்டுப் போல இருக்கும்!

— அப்துல் - ரஹீம்.

தகவல்: புத்தனாம்பட்டி சி. மணி.

இல்லே... அதுதான்...'' என்றான். மனோகர் எதுவும் சொல்லவில்லை.

ரவி உள்ளே போய் வலப்புறமாய் வேட்டியை மறைப்பாய்ப் பிடித்துக் கொண்டு, சுற்றிலும் நிறையப் பேர் நின்றிருந்த இடத்தை அணுகி, எட்டிப் பார்த்தான்.

அண்டாவிலிருந்த தண்ணீரைச் செம்பில் வாரி வாரி ஊற்றிக் கொண்டிருந்தார்கள். கண்கள், முகம், காது, என ஏகத்துக்கும் தண்ணீர். இப்படியா அள்ளி ஊற்றுவார்கள்? யாருக்கும் அவர் மீது இரக்கம் இல்லை?

வயிற்றையும் நெஞ்சையும் அழுத்தி அழுத்திப் பிசைய உதட்டோரமாய், கிட்டிய பற்கள் வழியே உறைந்து போயிருந்த இரத்தம் வெளியேறியது. நிறையப் பேர் முகத்தில் அருவருப்பு. ரவிக்கு அவரைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது. யாரும் அவரை ராஜரத்தினமாய்ப் பார்த்ததாகத் தெரியவில்லை. பிணம், உயிரற்ற வெறும் உடம்பு. மனம் வெறுமையாகிப் போனது.

குளிப்பாட்டியதும், பெயருக்குத் துணியால் ஒற்றி எடுத்தார்கள். உடம்பைப் புரட்டி மாற்று வேட்டி கட்டி, புதுத் துண்டால் உடல் மூடி, கடமையாய்ச் சந்தனம் பூசி, நெற்றியில் குங்குமம் தீற்றி — ம்ஹூஉம். அவருக்குப் பிடித்திருந்ததா என்று யாரும் ராஜரத்தினத்திடம் கேட்கவில்லை. 'உனக்கு இவ்வளவுதான்' என்று கறாராய்ப் பண்ணுவது மாதிரி பட்டது.

மறுபடியும் ஹால். கழற்றிய மாலைகள் மீண்டும் கழுத்தில்... எல்லாச் சுமைகளை உதறியும், உதற முடியாத உபத்திரவங்கள். திடுமென்று அந்த அம்மாள் வீலென்று அலறினாள். அவர் மனைவியாயிருக்க வேண்டும். அவ்வளவுதான். கடைசி கடைசியாய்ப் பார்த்துக் கொண்டு வீட்டிலிருக்க வேண்டியதுதான். இது அவரின் பிரத்தியேகப் பயணம். 'கடைசி வரைக்கும் கண் கலங்காமல் பார்த்துப்பேன்' என்ற வசனமெல்லாம் காலாவதியாகிப் போகும் அவலம்.

வெளியில் பாடை தயாராய். 'தண்ணி' அடித்து வந்து விகல்பமில்லாத மனத்தோடு எல்லோருக்காகவும் ஆட்டம் போடும் மனிதர்கள். ஆடி அடங்கும் வாழ்க்கையைச் சொல்லாமல் சொல்லும் சூத்திரதாரிகள்.

தாரை, தப்பட்டைகளை முழக்கி, வேட்டுப் போட்டார்கள். கொண்டாட்டமா? கௌரவமா?

'வருகிறார் வருகிறார் பராக் பராக்' என்று ஊருக்கு வரவு உணர்த்தும் கட்டியமா?

கழுத்தில் தூக்கு மாட்டிக் கொண்ட பானையைத் தூக்கிக் கொண்டு ஒருத்தர் முன்னால் நடக்க, விசில்கள்... மாலையை உதறித் தூவப்பட்ட பூக்கள், எல்லாவற்றையும் மிதித்து நசுக்கிக் கொண்டு நடந்த கால்கள்... கொஞ்சம் கொஞ்சமாய்க் கூட்டம் நகர்ந்து, விலகிக் கண்களிலிருந்து மறைந்து போனது.

''என்னடா ரவி... அப்படியே உறைஞ்சி போயி நின்னுட்டிருக்கே, வா போகலாம்... என்னோட ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் வெயிட் பண்ணிட்டிருக்காங்க. போற வழியிலேயே ஆரியபவன்லே சாப்பிட்டுட்டு, மீனாட்சி பாரடைஸ் போயிடலாம்... ரிலீஸ் படத்துக்கு டிக்கெட்டெல்லாம் ரிஸர்வ் பண்ணிட்டாங்க. நான் கூட ஒரு மணிக்கு மேல ரூம்ல போயி என்னடா பண்றதுன்னு யோசிச்சுக்கிட்டிருந்தேன்... பசங்க ரொம்ப பிளான் போட்டுப் பண்றாங்கப்பா எல்லா விஷயத்தையும்...''

''......''

''என்ன ரவி, நான் பேசிக்கிட்டேயிருக்கேன். நீ பாட்டுக்கும் குத்துக்கல்லா நின்னுட்டிருக்கே, டயமாச்சி, வாடா...''

''......''

''என்ன ஆச்சு உனக்கு?''

''நான் வரலேடா மனோ...'' — அவன் குரல் அவனுக்குக் கேட்டிருக்குமா என்பதே சந்தேகம். ''எனக்கு மனசே சரியில்லே... எப்படிடா உன்னால இயல்பா — எதுவுமே நடக்காத மாதிரி...''

''அட, லூஸுப் பயலே... இதெல்லாம் சகஜம்டா. வாழ்க்கையிலே அவரு செத்துப் போயிட்டாருங்கிறதுக்காக நாம இப்படியே இருந்துட முடியுமா...? நம்ம வேலை தலைக்கு மேலே இருக்குப்பா...''

ரவி நகரவில்லை. கொஞ்ச நேரத்தில் மனோகர் போய் விட்டான். 'மிதிபட்டுப் போனவை பூக்கள் மட்டுமல்ல, மானுடமும்தான்' என்று உரக்கக் கத்த வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

சிவகாமியின் சபதம்

முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

ஓலைத் திருட்டு

வஜ்ரபாஹு சாவதானமான குரலில், "தம்பி, பொறு! வேலைக் கைப்பற்றுவதற்குப் பதிலாகப் பொறுமையைக் கைப்பற்று. நாங்கள் பேய் பிசாசு இல்லை. 'பிசாசு சொப்பனம் கண்டீரா?' என்று என்னைப் பரிகாசம் செய்தாயே! நீ பிசாசு சொப்பனம் கண்டு அலறிய அலறலில், இந்த விடுதியிலுள்ள எல்லாரும் அல்லவா எழுந்திருக்க வேண்டியதாயிற்று?" என்றான்.

பரஞ்சோதி, தான் அத்தகைய கனவு கண்டது உண்மை என்ற எண்ணத்தினால் வெட்கமடைந்து, ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். பிறகு, "பொழுது விடிந்து விட்டதா? புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டு எழுந்தான்.

"அழகுதான்! இப்போது அர்த்த ராத்திரி. விடுதியில் பத்திரமாய்ப் படுத்திருக்கும் போதே இப்படிப் பயந்து உளறுகிறவன், நடுநிசியில் தனி வழியே எப்படிப் போவாய்? அப்படிப் போவதாயிருந்தால், 'அம்மா!' 'அம்மா!' என்று கனவிலே அலறினாயே, அந்தப் புண்ணியவதி எங்கே இருக்கிறாள் என்றாவது சொல்லி விட்டுப் போ! பிள்ளையின் கதியைப் பற்றி அன்னைக்குச் செய்தியாவது சொல்லி அனுப்புகிறோம்" என்றான் வஜ்ரபாஹு.

இந்த வார்த்தைகள் எல்லாம் கூரிய முட்களைப் போல் பரஞ்சோதியின் உள்ளத்தில் சுரீல் சுரீல் என்று தைத்தன.

"நீங்கள் நேற்றுச் சாயங்காலம் பயங்கரமான கதைகளைச் சொன்னீர்கள் அல்லவா? அதனால்தான் சொப்பனம் காணும்படி ஆயிற்று" என்று பரஞ்சோதி சமாதானம் சொன்னான்.

"போகட்டும்! இனிமேலாவது சற்று நேரம் நிம்மதியாய்த் தூங்கு. இந்தத் தீபம் இங்கேயே இருக்கட்டும்" என்றான் வஜ்ரபாஹு என்னும் வீரன்.

அவ்விதமே தீபத்தை வைத்து விட்டு, வஜ்ரபாஹுவும் விடுதித் தலைவனும் அங்கிருந்து சென்றார்கள்.

அவர்கள் போன பிறகு, பரஞ்சோதி கண்களை மூடிக் கொண்டு தூங்கப் பார்த்தான். ஆனால் தூக்கம் வரவே இல்லை. புரண்டு புரண்டு படுத்தான். எழுந்து உட்கார்ந்தான். மறுபடியும் படுத்தான். அப்படியும் தூக்கம் வரவில்லை. அவர்கள் வைத்து விட்டுப் போன தீபம், ஒரு பக்கம் அவனுடைய கண்களைக் கூசச் செய்தது. விளக்கை அணைத்து விடலாமா என்று ஒருகணம் நினைத்தான். உடனே, வேறு ஒரு நினைவு பளிச்சென்று தோன்றியது. எழுந்து உட்கார்ந்து, தலைமாட்டில் துணியைச் சுற்றி வைத்திருந்த, மெல்லிய சிறு மூங்கிற் குழாயை எடுத்தான். அதற்குள்ளிருந்த ஓலைக் கற்றையை வெளியில் எடுத்துத் தீபம் வைத்திருந்த இடத்துக்கு அருகிலே சென்று உட்கார்ந்தான்.

ஓலையைப் பிரித்து வைத்துக் கொண்டு, உற்றுப் பார்த்தான். ஆகா! என்ன ஏமாற்றம்! அதில் ஏதோ எழுதியிருந்தது! மிக நெருக்கமாக எழுதியிருந்தது! ஆனால், என்ன எழுதியிருந்தது? அதுதான் தெரியவில்லை. அதில் எழுதியிருந்தது தமிழ்

அமரர் கல்கி

எழுத்து அல்ல; ஸம்ஸ்கிருதமோ, பிராகிருதமோ, பாலி பாஷையோ தெரியவில்லை. ஆகா! கல்வி ஒருவனுக்கு எவ்வளவு அவசியமானது! தாய்ப் பாஷை ஒன்று மட்டும் தெரிந்தால் கூடப் போதாது. ஒரு தேசத்தில் வழங்கும் மற்ற பாஷைகளும் தெரிந்திருக்க வேண்டும். இத்தனை காலமாகக் கல்வி பயிலாமல் — தமிழைக் கூட நன்றாய்ப் பயிலாமல் காலங் கழித்து விட்டதை நினைத்துப் பரஞ்சோதி அப்போது வருத்தப்பட்டான்.

'இத்தனை காலங்கழித்துக் காஞ்சிக்குக் கல்வி பயிலுவதற்காகக் கிளம்பி வந்தோமே? அதாவது நடந்ததா? நாம் வந்த சமயத்தில்தானா இந்த யுத்தக் குழப்பங்கள் எல்லாம் வர வேண்டும்? இந்த ஆபத்தான காரியம் நம் தலையிலேயா சுமர வேண்டும்?' — இப்படி எண்ணமிட்டுக் கொண்டேயிருந்த போது, பரஞ்சோதிக்குத் தூக்கம் வருகிறாற் போல் இருந்தது. கண்ணிமைகள் கனத்துத் தாமாகவே மூடிக் கொள்ளப் பார்த்தன. தீபத்தடியிலிருந்து எழுந்து, ஏற்கெனவே படுத்திருந்த மேடைக்குப் போகப் பரஞ்சோதி எண்ணினான். ஆனால், அந்த எண்ணத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. தூக்க மயக்கம் அவனை மீறி மேலோங்கிற்று. அப்படியே தரையில் படுத்தான். சிறிது நேரத்தில் நினைவற்ற நிலையை அடைந்தான். அவன் கையிலிருந்து நழுவிய ஓலை தரையில் கிடந்தது.

சற்றுப் பொறுத்து, அறைக் கதவு மெதுவாகத் திறந்தது. வஜ்ரபாஹு ஓசைப்படாமல் உள்ளே வந்தான். தரையில் கிடந்த ஓலைச் சுருளை எடுத்துக் கொண்டு அறையின் கதவை மீண்டும் சாத்தி விட்டு வெளியேறினான்.

வெளியேறிய வஜ்ரபாஹு இரண்டு மூன்று அறைகளைக் கடந்து சென்று, விடுதியின் ஒரு மூலையில் இருந்த பெரிய அறைக்குள் புகுந்தான். அங்கே குத்துவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் அருகில் உட்கார்ந்து, பரஞ்சோதியிடமிருந்து அபகரித்துக் கொண்டு வந்திருந்த ஓலையைக் கவனமாகப் படிக்கலானான்.

முதலில் சற்று நேரம் அவன் ஏட்டையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய புருவங்கள் நெரிந்தன; நெற்றி சுருங்கியது. சில சமயம் மேலே நிமிர்ந்து, கூரையை நோக்கியவண்ணம் யோசித்தான். சில சமயம் கையை நெரித்துக் கொண்டு, பூமியை நோக்கிய வண்ணம் சிந்தித்தான். சற்று நேரம், தீபத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். கடைசியாக, அவனுடைய முகம் பளிச்சென்று மலர்ந்தது. உடனே, விரைவாகவும் உற்சாகத்துடனும் அந்த ஓலைக்கட்டிலிருந்த நாலு ஏடுகளையும் படித்து முடித்தான்.

பிறகு, பக்கத்தில் வைத்திருந்த வெற்று ஓலையில், நாலு எடுத்து, அதே அளவில் கத்திரித்து வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினான். துரிதமாக எழுதி முடித்துப் பரஞ்சோதி கொண்டு வந்திருந்த ஓலையையும் இதையும் ஒப்பிட்டு நோக்கினான். பரஞ்சோதியின் ஓலையை அவ்விடமே பத்திரப்படுத்தி வைத்து விட்டுத்தான் எழுதிய ஓலையுடனே பரஞ்சோதியின் அறையை நோக்கிச் சென்றான். அங்கே பரஞ்சோதி இன்னும் தீபத்துக்குப் பக்கத்தில் மயங்கிக் கிடப்பதையும் தீபம் அணையும் தறுவாயில் இருப்பதையும் பார்த்தான். அறையில் அப்போது இலேசான புகை — ஒருவித அபூர்வமணம் கமழ்ந்து கொண்டிருந்த புகை சூழ்ந்திருந்தது. மூக்கைத் துணியினால் மூடிக் கொண்டு வஜ்ரபாஹு அவ்வறைக்குள் நுழைந்தான். ஓலை முன்னே கிடந்த இடத்திலேயே தான் கொண்டு வந்த ஓலையைப் போட்டு விட்டுத் தீபத்தில் பற்றி எரிந்து கொண்டிருந்த திரியை உள்ளுக்கு இழுத்து, எண்ணெயில் நனைத்து அணைத்தான். இவ்வளவும் அதிசீக்கிரமாகச் செய்து விட்டு, மறுகணமே அந்த அறையை விட்டு வெளியேறினான்.

மீண்டும் தன்னுடைய அறைக்குச் சென்று, வஜ்ரபாஹு, பரஞ்சோதியிடமிருந்து தான் அபகரித்த ஓலையை இன்னொரு தடவை நன்றாகப் படித்துப் பார்த்து விட்டு, அதை ஏடு ஏடாக எடுத்து, விளக்கின் ஜுவாலையில் காட்டித் தகனம் செய்தான். அப்படித் தகனம் செய்து கொண்டிருந்த போது, அவனுடைய உள்ளம் தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தது என்பதை அவனுடைய முகக்குறி காட்டியது.

நாலு ஏடுகளையும் எரித்துச் சாம்பராக்கிய பிறகு, இன்னும் நாலு வெற்று ஏடுகளை எடுத்து, எழுத்தாணியினால் எழுதத் தொடங்கினான். முன்போல் இம்முறை இவன் வேகமாகவும் இடைவிடாமலும் எழுதவில்லை. இடையில் நிறுத்தி நிறுத்தி, யோசித்து யோசித்து எழுதினான். அவன் எழுதி முடித்து, ஓலை ஏடுகளைக் குழாயில் போட்ட போது, பலபலவென்று கிழக்கு வெளுத்தது. உச்சி வானத்துக்குச் சற்று மேற்கே காணப்பட்ட பாதி மதி, பிரகாசத்தை இழந்து, பாண்டு வர்ணம் அடைந்து கொண்டிருந்தது. விண்மீன்களும் ஒளி

குன்றத் தொடங்கின. பட்சிகளின் தனிக் குரல்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கேட்கலாயின.

பரஞ்சோதி கண் விழித்துப் பார்த்த போது, அறைக்குள்ளே, பலகணி வழியாக, உதய நேரத்தின் இளம் வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அருகில், தரையில் கிடந்த ஓலையை அவன் ஆர்வத்துடன் தாவி எடுத்துக் கொண்டு, அதை உடனே குழாயில் போட்டு, இடுப்பிலும் செருகிக் கொண்டான். முதல் நாள் இரவில் அவன் பயங்கரக் கனவு கண்டது, வஜ்ரபாஹுவும் விடுதித் தலைவனும் வந்து, விளக்கு வைத்து விட்டுப் போனது, தூக்கம் பிடியாமல், விளக்கண்டை வந்து, ஓலையைப் படிக்கத் தொடங்கியது, கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்தது — ஆகிய எல்லாம் அவனுடைய நினைவுக்கு வந்தன. இன்னமும் அவன் தலை, இலேசாகச் சுற்றிக் கொண்டிருந்தது. வயிற்றிலும் கொஞ்சம் சங்கடம் இருந்தது.

ஏதோ ஓர் அபூர்வமான வாசனை, அவ்வறையில் சூழ்ந்திருப்பதையும் அவன் உணர்ந்தான். ஆனால், இதிலெல்லாம் அவனுடைய கவனம் அதிக நேரம் நிற்கவில்லை. 'ஓலையைத் தரையில் போட்டு விட்டு, இவ்வளவு நேரம் தூங்கி விட்டோமே, என்ன அசட்டுத்தனம்!' என்கிற எண்ணத்தினால் ஏற்பட்ட வெட்கம், மற்ற நினைவுகளையெல்லாம் போக்கடித்தது. அதே சமயத்தில் குதிரையின் காலடிச் சப்தம் காதில் விழவே, விழுந்தடித்து எழுந்திருந்து, வாசற்புறம் சென்றான். அங்கே விடுதித் தலைவனும் காவலர்களும் நின்று, சற்றுத் தூரத்தில் போய்க் கொண்டிருந்த குதிரையைப் பார்த்த வண்ணம் இருப்பதைக் கண்டான்.

''ஓஹோ! வஜ்ரபாஹுவா போகிறார்? அதற்குள்ளே புறப்பட்டு விட்டாரா?'' என்று பரஞ்சோதி வினவியதைக் கேட்டு அவர்கள் அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

குதிரை கண்ணுக்கு மறைந்த பிறகு, ''ஐயா! வஜ்ரபாஹு என்கிறவர் யார்? உங்களுக்குத் தெரியுமா?'' என்று பரஞ்சோதி காவலர்களைப் பார்த்து கேட்டான்.

''உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றல்லவா நினைத்திருந்தோம்!'' என்று காவலர்களில் ஒருவன் கூறினான்.

''இன்னாரென்று தெரியாமலா நேற்றிரவு அவருக்கு அவ்வளவு மரியாதை செய்தீர்கள்?''

''காரணமில்லாமல் மரியாதை செய்யவில்லை. அவரிடம் சிங்க முத்திரை போட்ட இலச்சினை இருந்ததே. உனக்குத் தெரியாதா?''

''சிங்க இலச்சினையென்றால் அதில் என்ன விசேஷம்?''

''வெகு முக்கியமான இராஜாங்கக் காரியமாகப் போகிறவர்கள் சிங்க இலச்சினை வைத்திருப்பார்கள்!''

காவலர்களில் ஒருவன், ''அவர் யாராக இருக்கும்?'' என்று மற்றவர்களைப் பார்த்துக் கேட்டான்.

''அமைச்சர்களில் ஒருவராயிருக்கலாம்'' என்றான் ஒருவன்.

''சேனாபதி கலிப்பகையை நீக்கி விட்டு வேறொரு சேனாபதியைச் சக்கரவர்த்தி அனுப்பப் போவதாகக் கேள்வி. புதிய சேனாபதியாக இருந்தாலும் இருக்கலாம்'' என்றான் ஒருவன்.

''சேனாபதியை மாற்றுவதற்கு என்ன காரணம்? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் விடுதித் தலைவன்.

''வேறு காரணம் வேண்டுமா, என்ன? வாதாபி சைனியம், வடபெண்ணையை நெருங்கி விட்டதாகக் கேள்வி. அப்படியிருக்க, நம் சேனாபதி, வடக்கு மண்டலத்துச் சைனியத்தை, இருந்த இடத்திலேயே வைத்துக் கொண்டிருப்பது போதாதா?''

''சக்கரவர்த்தியிடம் யோசனை கேட்கச் சேனாபதி கலிப்பகை, காஞ்சிக்கே போயிருக்கிறாராமே?''

''அதனால்தான் சக்கரவர்த்திக்குக் கோபமாம். 'நீர் சேனாபதி பதவி வகித்தது போதும்' என்று சொல்லி விட்டாராம்!''

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த பரஞ்சோதி, ''ஐயா! என் குதிரை எங்கே? நானும் கிளம்ப வேண்டும்'' என்றான்.

பரஞ்சோதியைப் பற்றி அவர்கள் இன்னும் சிறிது விசாரித்து விட்டு, ''நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டார்கள்.

''வடபெண்ணைக் கரையிலுள்ள பௌத்த மடத்துக்குப் போக வேண்டும். இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?'' என்று பரஞ்சோதி வினவினான்.

அவர்கள் வஜ்ரபாஹு சென்ற திசையைக் காட்டி, ''இந்த வழியே போனால் உச்சி வேளையில் வடபெண்ணையைச் சேரலாம். அங்கிருந்து கரையோடு மேற்கே போக வேண்டும். போனால், பாபாக்னி நதி, வடபெண்ணையுடன் கலக்கும் இடத்தில், பௌத்த மடம் இருக்கிறது!'' என்று கூறி அவனுடைய குதிரையையும் கொடுத்தார்கள்.

பரஞ்சோதி குதிரை மீதேறிக் கிளம்பிய போது, 'அடடா! வஜ்ரபாஹுவும் இதே

வழியில் போகிறவராயிருக்க, சற்று முன்னாலேயே எழுந்து அவருடனே கிளம்பாமல் போனேனே! அவருடன் போயிருந்தால் வழிப் பிரயாணம் எவ்வளவு உற்சாகமாக இருந்திருக்கும்? களைப்பே தெரியாமல் கதை கேட்டுக் கொண்டே ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்திருக்கலாமே?' என்று எண்ணமிட்டான்.

முப்பத்து நாலாம் அத்தியாயம்

மடாலயம்

பரஞ்சோதிக்கு, முன் அத்தியாயங்களில் கூறிய ஆச்சரியமான அனுபவங்கள் நேர்ந்து கொண்டிருந்த அதே தினம் மாலை நேரத்தில், காஞ்சி மாநகரில் அவனைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. பல்லவ குலந் தழைக்க வந்த குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மரும் சைவந் தழைக்க வந்த திருநாவுக்கரசு சுவாமிகளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாமல்லபுரத்திலிருந்து திரும்பி வந்த அன்றிரவு மகேந்திர சக்கரவர்த்தி தம் செல்வப் புதல்வரை அழைத்துக் கொண்டு மாறுவேடத்துடன் கோட்டைக்கு வெளியே சென்றார். குதிரைகளை ஒரு மறைவான இடத்தில் நிறுத்தி விட்டு மங்கலான நட்சத்திர வெளிச்சத்தில் மதிலைச் சூழ்ந்திருந்த அகழியின் கரையோரமாக அவர்கள் நடந்து சென்றார்கள்.

திடீரென்று அகழியில் படகு செலுத்தும் சப்தம் கேட்டு நரசிம்மர் அளவற்ற வியப்புக்கு உள்ளானார். அவரைச் சப்தம் செய்ய வேண்டாமென்று சமிக்ஞை காட்டினார் மகேந்திரர். இருவரும் அருகில் இருந்த புதரில் மறைந்து கொண்டார்கள்.

ஆம்; படகு ஒன்று அகழியில் சென்று கொண்டிருந்தது. அதை ஓட்டியவன் சப்தம் அதிகமாகக் கேளாதபடி சர்வ ஜாக்கிரதையாகத் துடுப்புகளைப் போட்டுக் கொண்டிருந்தான். படகு அக்கரையில், அதாவது, மதில் ஓரத்தில் போய் நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கினார்கள். அந்தச் சிறு படகை அவ்விருவருமாக இழுத்துக் கரையேற்றினார்கள். மதிலின் பக்கத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ஒரு புதரின் மறைவில் அதைத் தள்ளினார்கள்.

மதிலண்டை சென்று அவர்கள் நின்றது ஒருகணம்! அடுத்த கணத்தில் இருவரும் மாயமாய் மறைந்தார்கள். ஒரு பிரம்மாண்டமான சிலந்திப் பூச்சியானது தன் அருகில் வந்த இரண்டு கொசுக்களை ஒரு நொடியில் நாக்கை நீட்டி விழுங்கி விட்டு பழையபடி சலனமற்றிருப்பது போல், அந்தக் காஞ்சிக் கோட்டையானது தன்னை நெருங்கிய இருவரையும் கண்ணிமைக்கும் நேரத்தில் விழுங்கி விட்டு மறுபடியும் அசைவற்றிருப்பது போலத் தோற்றமளித்தது.

இதையெல்லாம் பார்த்ததனால் குமார சக்கரவர்த்திக்கு உண்டான பிரமிப்பு நீங்குவதற்கு முன்னால், அங்கு இன்னொரு வியப்பான சம்பவம் ஏற்பட்டது. பக்கத்திலிருந்த வேறொரு புதரிலிருந்து ஓர் ஆள் திடீரென்று கிளம்பி வந்தான். அவன் சக்கரவர்த்திக்குத் தண்டம் சமர்ப்பித்து விட்டுப் பணிவுடன் நின்றான்.

அவனைப் பார்த்துச் சிறிதும் வியப்புறாத மகேந்திரர், "சத்ருக்னா! இந்தச் சுவரிலுள்ள கதவு எங்கே திறக்கிறதென்று ஊகிக்கிறாய்?" என்று கேட்டார்.

"இராஜ விஹாரத்தில் புத்தர் சிலைக்குப் பின்னால் திறக்கலாம், சுவாமி!" என்றான் சத்ருக்னன்.

"சுவரில் கதவு வைத்தவன் மிகவும் கெட்டிக்காரனாக இருக்க வேண்டும்; இல்லையா?"

"கதவு வைத்தவனைக் காட்டிலும் மேலே வர்ணம் பூசியவன் கெட்டிக்காரன் பிரபு! பகலில் இவ்விடமெல்லாம் வந்து பார்த்தேன். கதவு ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை."

"ரொம்ப நல்லது. சத்ருக்னா! நாளைக்கு நான் வடதிசைக்குப் பிரயாணப்படுகிறேன்."

"பிரபு! நானும் ஆயத்தமாயிருக்கிறேன்."

"இல்லை; நீ என்னுடன் வர வேண்டாம். மறு கட்டளை பிறக்கும் வரையில், இந்த நாகநந்தியை நீ தொடர வேண்டும்..."

"தொண்டை நாட்டை விட்டு அவர் போனால்..."

"அப்போதுந்தான்."

"சோழ நாடு, பாண்டிய நாடு சென்றால்..."

"பின்னோடு போக வேண்டும். யாரிடமாவது பிக்ஷு ஓலை ஏதாவது அனுப்பினானானால்...?"

"என்ன செய்ய வேண்டுமென்று தெரியும், சுவாமி! ஆனால் செங்காட்டங்குடி வாலிபனிடம் அவர் அனுப்புகிற ஓலை...?"



"அதை நானே பார்த்துக்கொள்கிறேன். எந்த முகாந்திரத்தினாலும் நாகநந்தியைத் தவற விடக் கூடாது. ஏதாவது விசேஷம் இருந்தால் எனக்குச் செய்தியனுப்ப வேண்டும்."

"ஆக்ஞை, பிரபு!"

சக்கரவர்த்தியும் நரசிம்மரும் அங்கிருந்து அரண்மனைக்குத் திரும்பியபோது, "இராஜ விஹாரத்தை உடனே மூடிக் கோட்டை மதிலிலுள்ள துவாரத்தையும் அடைத்து விட வேண்டாமா?" என்று மாமல்லர் கேட்டார்.

"கூடாது குழந்தாய், கூடாது. அதற்குக் காலம் வரும்போது செய்யலாம். இப்போது பகைவர்களின் சூழ்ச்சிகளை அறிவதற்கு அந்த இரகசியக் கதவு நமக்கு உதவியாக இருக்கும்" என்று சக்கரவர்த்தி மறுமொழி கூறினார்.

சக்கரவர்த்தி வடதிசைக்குப் பிரயாணமான பிறகு, காஞ்சிக் கோட்டைக்குள்ளே மாமல்லருக்குப் பொழுது போவது மிகவும் சிரமமான காரியமாயிருந்தது. ஆயனர் வீட்டில் புத்தர் சிலைக்குப் பின்னால் புத்த பிக்ஷுவும் பரஞ்சோதியும் ஒளிந்திருந்ததை மகேந்திரர் ஊகித்தறிந்தது, மதில் சுவரில் இருந்த இரகசியக் கதவை அவர் கண்டுபிடித்தது முதலிய காரியங்களினால் சக்கரவர்த்தியிடம் குமாரருக்கு ஏற்கெனவே இருந்த மதிப்பு பன்மடங்கு அதிகமாயிருந்தது. ஆகவே, காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போகக் கூடாது என்ற தந்தையின் கட்டளையை மீறும் எண்ணமே அவருக்கு உதிக்கவில்லை.

ஆனால், இராஜ்யத்தில் பெரிய பெரிய காரியங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, மகத்தான யுத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்த போது, கோட்டைக்குள்ளே ஒரு காரியமுமின்றி அடைந்து கிடப்பது அவருக்குப் பரம சங்கடத்தை அளித்தது.

கழுக்குன்றத்தில் பல்லவ சைனியங்கள் திரண்டு கொண்டிருக்கின்றனவே, அங்கே போய்ப் படைகளைப் பார்க்கவாவது தந்தையிடம் அனுமதி பெறாமல் போனோமே என்று மாமல்லர் ஏக்கமடைந்தார். அப்பால் மாமல்லபுரம் போகவும் அவரிடம் அனுமதி பெற்றிருந்தால்....?

ஆம், எத்தனையோ எண்ணங்களுக்கிடையில் சிவகாமியைப் பற்றிய நினைவும் மாமல்லருக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அவள் நீட்டிய தாமரைக்கும் மானுக்கும் மத்தியில் தாம் வரைந்திருந்த வேலை அவள் பார்த்தாளோ, இல்லையோ? பார்த்திருந்தால், அதன் பொருளைத் தெரிந்து கொண்டிருப்பாளா? அதனால் திருப்தியடைந்திருப்பாளா?

தந்தையிடம் நாம் வாக்குக் கொடுத்திருக்கும் விஷயம் அவளுக்குத் தெரியாதல்லவா? ஆதலின், தன்னைப் பார்க்க வரவில்லையே என்று அவளுக்குக் கோபமாகத்தான் இருக்கும். அவள்தான் இங்கு ஏன் வரக் கூடாது?... ஆனால், அவள் எப்படி வருவாள்? ஆயனருக்குத்தான் தந்தை அவ்வளவு கடுமையான கட்டளையிட்டிருக்கிறாரே. வேலையை விட்டு விட்டு அவர் வர முடியாதல்லவா?

இவ்விதம் குமார சக்கரவர்த்தியின் உள்ளம் பலவித சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது. செய்வதற்கு வேலை ஒன்றும் இல்லாதபடியால் அவருடைய மனவேதனை அதிகமாயிற்று.

இந்த நிலைமையில் திருநாவுக்கரசு சுவாமிகள் காஞ்சிக்குத் திரும்பி வந்து விட்டார் என்று அறிந்ததும் மாமல்லர் அவரைத் தரிசித்து விட்டு வரலாமென்று எண்ணினார். சுவாமிகளிடம் தெரிவிக்கும்படி சக்கரவர்த்தி கூறியிருந்த செய்தி ஒன்று இருந்தது. எனவே, ஒரு நாள் மாலை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்கருகிலிருந்த நாவுக்கரசர் மடாலயத்துக்கு அவர் சென்றார்.

நாவுக்கரசர் குமார சக்கரவர்த்தியை அன்புடன் வரவேற்றுத் தாம் சென்றிருந்த ஸ்தலங்களின் மகிமையைப் பற்றிக் கூறினார். சக்கரவர்த்தி வடநாடு சென்றிருப்பது பற்றியும், பல்லவ இராஜ்யத்தில் யுத்தம் வந்திருப்பதைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பின்னர் சுவாமிகள் கூறினார்: "மாமல்லரே! சக்கரவர்த்தியிடம் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்ள எண்ணியிருந்தேன். அவர் இல்லாதபடியால் தங்களிடம் சொல்லுகிறேன். இந்த இடத்திலிருந்து நமது மடத்தை அப்பாற்படுத்தித் திருமேற்றளியில் அமைத்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஏகாம்பரர் கோயில் நகருக்கு மத்தியிலே இருப்பதால் இங்கே அமைதி கிட்டுவதில்லை. மேலும், இங்கே நம்முடைய சீடர்களுக்கும் பக்கத்திலுள்ள கடிகை ஸ்தானத்தில் வடமொழி பயிலும் மாணாக்கர்களுக்கும் ஓயாமல் வாக்குவாதமும் போட்டியும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆரியம், தமிழ் இரண்டையும் அளித்த எம்பெருமான் ஒருவரே என்று அவர்களுக்கு எவ்வளவோ சொல்லியும் பயனில்லை. இளங்காளைப் பருவமல்லவா? அப்படித்தான் கொஞ்சம் முரட்டுத்தனம் இருக்கும். ஏகாம்பரநாதர்



''எனக்கு வரப் போற மனைவி எதையுமே நாசுக்கா கேட்கக் கூடியவள்னு தோணுது.''

''எப்படிச் சொல்றே?''

''எனக்கு மாவாட்டத் தெரியுமான்னு கேட்கிறதுக்குப் பதிலா, 'காசில்லாமல், ஹோட்டல்ல சாப்பிட்ட அனுபவம் உண்டா'ன்னு கேட்டாளே!''

— சீர்காழி. வி. ரேவதி.



ஆசிரியர்: மாணவர்களைக் கண்டாலே உதறலா இருக்கு!

நண்பர்: ஏன்?

ஆசிரியர்: நாட்டு நடப்பைப் பற்றிக் கேள்வி கேட்டால் கல்லெடுத்து அடிக்கவே வர்றாங்க!

— கே. ஜி. எஃப். பழனிச்சாமி.

கோயிலில் கூட்டம் போட்டிருக்கும் காபாலிகர்களின் தொல்லையும் பொறுக்க முடியவில்லை. அதனால் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் சந்நிதிக்குப் போய் விடலாமென்று பார்க்கிறேன். இவ்விடத்தைக் காட்டிலும் அங்கே அமைதியாயிருக்கிறது.''

சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்த குமார சக்கரவர்த்தி கூறினார்: ''சுவாமி! முன்பு ஏகாம்பரர் கோவிலிலிருந்து இந்தக் காபாலிகர்களையெல்லாம் துரத்தி விட வேண்டுமென்று சொன்னேன். தாங்கள்தான் வேண்டாம் என்றீர்கள். தங்கள் விருப்பத்தின்படி திருமேற்றளியில் மடத்தை அமைத்துக் கொள்வதில் ஆட்சேபமில்லை. ஆனால், சக்கரவர்த்தி தங்களிடம் தெரிவிக்கச் சொன்ன விஷயத்தைத் தெரிவிக்கிறேன். பிறகு, தங்கள் உசிதம் போல் செய்யலாம். யுத்தம் தொண்டை நாட்டுக்கே வந்து விடலாமென்றும், இந்தக் காஞ்சி நகரம் முற்றுகைக்கு உள்ளாகலாமென்றும் பல்லவேந்திரர் கருதுகிறார். யுத்தம் ஒருவிதமாக முடியும் வரையில் தாங்கள் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் தீர்த்த யாத்திரை செல்வது நலம் என்ற அவருடைய அபிப்பிராயத்தைத் தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். அதுவரையில் நமது மடத்தை மூடி வைத்து விடுவது உசிதம் என்றும் சக்கரவர்த்தி கருதுகிறார். இதைப் பற்றி யோசித்து தங்கள் சித்தம் போல் முடிவு செய்யலாம்.''

நாவுக்கரசர் சிறிது நேரம் சிந்தனை செய்து விட்டு, ''சக்கரவர்த்தியின் யோசனை எனக்கும் சம்மதமாகத்தான் இருக்கிறது. ஆனால், முன்னமே தெரியாமல் போயிற்று. திருமேற்றளியில் மடத்திருப்பணி ஆரம்பிப்பதற்காக ஆயனரை வரும்படி நான் சொல்லியனுப்பியிருக்கிறேன்... ஒருவிதத்தில் அதுவும் நல்லதுதான். நீண்ட யாத்திரை கிளம்புவதற்கு முன்னால் ஆயனச் சிற்பியாரை ஒரு தடவை பார்த்து விட்டுப் போகலாம்'' என்றார்.

ஆயனர் வருகிறார் என்று கேட்டதும் மாமல்லரின் உள்ளத்தில் குதூகலம் உண்டாயிற்று. ''ஆயனர் எப்போது வருவார், சுவாமி?'' என்று ஆர்வத்துடன் கேட்டார்.

''ஒருவேளை இன்று மாலையே வரக்கூடும்'' என்று நாவுக்கரசர் பெருமான் கூறியதும், ஆயனர் வரும் வரையில் தாமும் அங்கே இருப்பது என்று மாமல்லர் தீர்மானித்துக் கொண்டார். ''சுவாமி! திருச்செங்காட்டங்குடியிலிருந்து தங்களுக்கு ஓலை கொண்டு வந்த வாலிபனை ஆயனர் நாகார்ஜுன பர்வதத்துக்கு அனுப்பியிருக்கிறாரே, தெரியுமா?'' என்று கேட்டார்.

''அது என்ன? எனக்கு ஒன்றும் தெரியாதே?'' என்று சுவாமிகள் சொல்ல, நரசிம்மர் பரஞ்சோதியைப் பற்றித் தாம் அறிந்திருந்த விவரங்களைக் கூறினார்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, வாசற்புறமிருந்து உள்ளே ஒரு சீடன் விரைவாக வந்து, ''ஆயனர் வருகிறார்!'' என்று அறிவிக்க, எல்லாருடைய கண்களும் வாசற்புறம் நோக்கின.

(தொடரும்)

இண்டர்வியூவல் காத்துக் கொண்டிருந்த போது, கல்யாணிக்கு இந்த வேலையாவது கிடைத்து விட்டால் நன்றாகஇருக்கும் என்று தோன்றிற்று. பி. எஸ். ஸி., தகுதிக்கேற்ப வேலை தேடித் தோற்று, தளர்ந்து, எஸ். எஸ். எல். ஸி. தகுதிக்குரிய வேலை கிடைத்தால் கூடப் போதும் என்ற முடிவுக்கு எப்போதோ வந்தாகி விட்டது.

இந்த இண்டர்வியூ தனியார் கம்பெனி ஒன்றின் குமாஸ்தாவிற்கானது. குமாஸ்தா வேலை என்றால் மானேஜருக்குரிய வேலையும், பியூனிற்குரிய வேலையும் அடக்கம். விற்பனையாளர்களையும் வாடிக்கையாளர்களையும் கவர்வது முக்கியம். அதே சமயம் தலைமை அலுவலகம் குறித்துத் தரும் இலக்கையும் அடைந்தாக வேண்டிய சவாலான வேலை. ஆனால் சம்பளம் எழுநூறு ரூபாய்க்கு மேல் எதிர்பார்க்க முடியாது. எழுநூறு ரூபாயில் என்னென்ன பண்ணலாம்?

தங்கை கன்யாவுக்கு நல்ல புடைவையாக எடுத்துத் தரலாம். பாவம், ஒரே ஒரு நீலக் கலர் ஷிஃபானை பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு

இங்கே கதவுகள் யாருக்கோ திறக்கின்றன...



வேலைக்கு அப்ளிகேஷன் போடப் பணம் கொடுக்கலாம். அம்மாவைக் கூட நல்ல டாக்டரிடம் அழைத்துச் சென்று, காட்டலாம். எனக்கு?

காதில் ஏதோ இருக்கிறது; அப்பா உயிரோடு இருந்த போது தங்கைக்கும் அவளுக்கும் சேர்த்து பண்ணிப் போட்டது! கழுத்தில்தான் எதுவுமேயில்லை. கவரிங் நகையைப் போட்டால் ஒத்துக் கொள்ளாமல் அரிப்பு வந்து விடுகிறது. எல்லோரும் காதையும் கழுத்தையும் பார்த்த பிறகுதானே முகத்தையே பார்க்கிறார்கள். அது கூட மூக்குத்தி இருக்கிறதா என்று பார்ப்பதற்காக இருக்கலாம்!

இருபத்தாறு முடியப் போகிறது கல்யாணிக்கு. வெள்ளைக் குதிரையில் வந்த ராஜகுமாரர்கள் எல்லோரும் தங்கள் சம்புக்தைகளைக் கவர்ந்து கொண்டு போய் விட்டார்கள். அவளது ராஜகுமாரன் குதிரையை விற்று விட்டு நடந்து வருகிறானோ என்னவோ!

கனவுகள் வடிந்து விட்டன கல்யாணிக்கு. அவளுக்கிருக்கிற ஒரே வருத்தம், தங்கைக்கான வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறோமே என்பதுதான். அவளும், கன்யாவும் ஜாலியாகப் பேசிச் சிரித்து வருடங்களாகி விட்டன. கன்யாவுக்கு விவரம் தெரியாத வரை 'அக்கா அக்கா' என்று சுற்றி வந்தாள். தன் வயதை மீறி அவளைக் கேலி பேசினாள். கன்யாவின் கனவிலும் ராஜகுமாரர்கள் வரத் துவங்கிய போது அக்கா அந்நியமாகிப் போனாள். ஒருமுறை அவள் ஆண்களுக்கான ஒரு விளம்பரத்தை லயித்துப் பார்த்துக் கொண்டிருந்த போது, வெளியே போய்த் திரும்பியிருந்த கல்யாணி தற்செயலாக அந்தப் புத்தகத்தை எட்டிப் பார்த்தாள். அக்கா பார்த்து விட்டதைக் கன்யாவும் பார்த்து விட்டாள். குற்ற உணர்வோடு புத்தகத்தை மூடினாள். கல்யாணி எதுவும் பேசவில்லை. உள்ளறைக்குப் போய் மேசையில் கவிழ்ந்து கொண்டாள். அவளும் ஒரு காலத்தில் இந்த மாதிரி லயித்திருந்தவள்தான்.

அம்மாவும் அப்படியே அழுத்தம். குழந்தைகளுக்கும் அவளுக்குமிடையே மௌனத் திரை விழுந்திருந்தது. அவள் முகத்தில் கவலை தெரியாது. இருப்பினும் அதில் மலர்ச்சியும் இருக்காது. வழி சரியாகத் தெரியாத போது பயணத்தைத் துவங்கி என்ன செய்வதென்ற வேதாந்த விரக்தி.

இந்த எழுநூறு ரூபாய் எல்லாவற்றையும் தீர்க்காவிட்டாலும் கல்யாணிக்கு வாழ்க்கையின் மீது ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். தங்கைக்கும் அம்மாவுக்கும் புதிய கனவுகளை விதைக்கும்!

கல்யாணி இண்டர்வியூவிற்கு வந்திருந்தவர்களைப் பார்த்தாள். தனித்துவம் மிக்க முகம் எதுவும் தென்படவில்லை. அவளுக்கு நம்பிக்கை துளிர்த்த சமயம், புயலாய் ஒருத்தி உள்ளே வந்தாள். நம்பிக்கை லேசாகத் தளர்ந்தது. இந்த வேலைக்கு அழகு ஒரு தகுதியென்றால் அந்தப் புதியவளுக்கு வேலை நிச்சயம்.

அவள் நேராக ஹீல்ஸ் ஒலிக்க, கல்யாணியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள். அவளது. செய்கைகளில் அலட்சியமும் பார்வையில் லேசான தற்பெருமையும் இருந்தது. லிப்ஸ்டிக் பூசியிருந்தாள். கன்னத்தில் சிவப்பு நிலா இருந்தது.

''ஐ' ஆம் மாதவி. பி. ஏ. எக்னாமிக்ஸ். நீங்க?''

''கல்யாணி. பி. எஸ். ஸி., மாத்ஸ்.''

''ரொம்ப நேரம் வெய்ட் பண்றீங்களா? இந்த இண்டர்வியூவில வெய்ட் பண்றதெல்லாம் போர். இல்லே?''

கல்யாணி லேசாகப் புன்னகை செய்தாள்.

''பி. எஸ். ஸி., மாத்ஸ் படிச்சுட்டு இந்த வேலைக்கு ஏன் வர்றீங்க கல்யாணி?''

''ஏன்? வரக் கூடாதா?''

''நான் — ஜஸ்ட் லைக் தட் — டைம் பாசிங்க்காக வந்தேன். போன வருஷம் டிகிரி முடிச்சேன். வீட்ல உடனே கல்யாணம் பண்ணிக்கங்கறாங்க. இவ்ளோ சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு அடுத்த வருஷமே வயித்தைத் தள்ளிக்கிட்டு நிக்கறதுல இண்ட்ரெஸ்ட் இல்லே. சும்மா இருக்கறதுக்கும் போர் அடிக்குது. அதான் ஜாலியா வந்தேன். இந்த செவன் ஹண்ட்ரட் அட்லீஸ்ட் பாக்கெட் மணிக்காவது உதவும். இல்லையா?''

''எனக்குக்கூட இன்னும் மூணு மாசத்துல கல்யாணம். அது வரைக்கும் பொழுது போகணுமேன்னுதான் வந்தேன்'' என்றாள் கல்யாணி!

பியூன் வந்து அழைத்த போது கல்யாணி உள்ளே போனாள். 'மே ஐ கமின் சார்' எனும் போது குரல் நடுங்குவதை உணர்ந்தாள். முதுகுப்புறம் லேசாக நனைந்தது. அமரச் சொன்னார்கள்.

அறையில் மொத்தம் மூன்று பேர் இருந்தார்கள். மூவரிடத்திலும் ஒருவித மிடுக்கான தோற்றம் இருந்தது. உலகம் அவர்களது மேசை மீது கிடந்தது. அவளது ஃபைலை அலட்சியமாகப் பார்த்தார்கள். ஒருவர்.

அஷோக்ராஜா

அருள்வாக்கு



சப்த விசேஷத்தோடு அர்த்த கௌரவமும் வேதத்துக்கு அளவிட முடியாததாக இருக்கிறது. வேதக் கருத்துக்களைப் பார்த்துப் பார்த்து இதர மதஸ்தர்களும், வெளிநாட்டு அறிவாளிகளும்கூட ஆச்சர்யப்படுகிறார்கள். காவிய ரீதியில் இருக்கிற அழகு, சமூக வாழ்வு முறைகளை நுட்பமாகச் சொல்லியிருக்கிற அழகு, அத்யாத்ம தத்துவங்கள், நன்னெறி உபதேசங்கள் (moral instructions), ஸயன்ஸ் கருத்துக்களும் கூட வேதங்களில் கொட்டிக் கிடக்கிறது என்று ஆச்சர்யப்படுகிறார்கள்.

சப்த சலனமான மந்திரங்களுக்கெல்லாம் அர்த்தம் இருக்க வேண்டும் என்பதே இல்லை. பிரகிருதத்தில் (நடைமுறை வாழ்க்கையில்) பார்த்தாலும், வார்த்தையோ அர்த்தமோ இல்லாமலே ஒரு ராகத்தை ஆலாபனம் பண்ணிக் கேட்கிற போது, அதன் வெறும் சப்தம் மட்டுமே நமக்கு ஆனந்தம், துக்கம் முதலான உணர்ச்சிகளைத் தருகிறது. வாத்திய ஸங்கீதத்தினால் ஏற்பட்ட vibration களினாலேயே கறிகாய்ச் செடிகளைத் தூண்டி யதேஷ்டமாகக் காய்க்க வைத்திருக்கிறோம் என்று ஸமீபத்தில் கூட ஒரு யுனிவர்ஸிடியில் பரிசோதனைகள் பண்ணித் தெரிவித்திருக்கிறார்கள். சப்தத்துக்கு சிருஷ்டி சக்தி உண்டு என்பதற்கு இது ஒரு proof. அது ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கேயும் வாத்ய ஸங்கீதம் என்பதாலேயே வார்த்தையோ, அர்த்தமோ முக்கியமில்லை என்று தெரிகிறது.

வேதத்தில் என்ன விசேஷம் என்றால் அதன் சப்தத்துக்கே தனியாகச் சக்தி இருப்பது மட்டுமின்றி, வார்த்தைகளாகவும் அதற்கு மிக உயர்ந்த அர்த்தம் இருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

'கல்யாணி' என்று வாய் விட்டுப் படித்தார். கேள்வி கேட்டார்கள்.

கல்யாணி சுலபமாகப் பதிலளித்தாள். தெரியாத கேள்விக்கு ஒரே ஒரு விநாடி தயங்கி விட்டுத் 'தெரியாது' என்றாள். கடைசியாக இரண்டு மூன்று முறை ''தெரியாது'' என்று பதில் சொல்ல நேர்கையில் லேசாகக் கலவரப்பட்டாள். நம்பிக்கை உடைகிற மாதிரி இருந்தது. கண்ணீர் துளிப்பதற்குத் தயாரானது.

''நீங்க போகலாம் மிஸ் கல்யாணி.''

கல்யாணி போகவில்லை. சீட்டை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

''நீங்க போலாம்மா.''

கண்ணீர் சரசரவென்று இறங்கிற்று. நம்பிக்கை சிதறி இறைஞ்சுதலாகி விட்டது.

''தயவு செஞ்சு இந்த வேலையை எனக்குக் கொடுங்க சார். ஆறு வருஷமா ஒரு நல்ல வேலைக்கு முயற்சி பண்ணிப் பண்ணி... என்னால இனிமே முடியாது சார். கல்யாணத்துக்கு நிக்கற என் தங்கைக்கு இடைஞ்சலா, அம்மாவைக் கூட நல்லா கவனிக்கக்க முடியாம, உள்ளுக்குள்ளே குமுறிக்கிட்டிருக்கேன் சார். இந்த எழுநூறு ரூபாய்லேர்ந்துதான் என்னோட வாழ்க்கையே தொடங்கணும். ப்ளீஸ் சார்... எனக்கு வேற வழி தெரியல. எனக்கு நானே பாரமாயிட்ட இந்தக் கொடுமையை இனி மேலும் தாங்க சக்தி இல்லே சார். ப்ளீஸ்...''

''ச்சு. என்னம்மா இது? அதான் ரிசல்ட் வீட்டுக்கு வரும்னு சொன்னோமேம்மா. எழுந்து வீட்டுக்குப் போங்க. நாங்க உங்க அப்ளிகேஷனை கன்சிடர் பண்றோம்.''

கல்யாணி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஆசுவாசமானாள். வருத்தமும் விரக்தியும் உள்ளுக்குள் வியாபிக்க, லேசாக அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''ஸாரி சார்.''

''என்னது? கல்யாணிக்குத்தான் அப்பாயிண்ட்மெண்டா?''

''என்னோட லிஸ்ட்படி கல்யாணி தான் ஃபர்ஸ்ட்.''

''ஆனா என்னோட மார்க்படி மாதவி தான் முதல்ல வந்திருக்காங்க.''

''என்னைப் பொறுத்தவரைக்கும் ரெண்டு பேரும் ஈக்வல்.''

''அப்போ என்ன பண்ணலாம்?''

''ஃபேமிலி பேக்ரவுண்டை உத்தேசிச்சுக் கல்யாணிக்கு இந்த வேலையைத் தரலாம் கறது என்னோட ஒபீனியன்.''

''நோ நோ. ஃபேமிலி பேக்ரவுண்டை எல்லாம் ஒரு ப்ளஸ் பாயிண்டாவே

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது. இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.

வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

செரிலாக் காரணம், செரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், செரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு வயது முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு செரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.

ஆகவே, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள செரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு மற்றும் விட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -51, புது தில்லி-110 049

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.

Mudra D: NES: 0020 TAM

கன்சிடர் பண்ண முடியாது. அப்படி கன்சிடர் பண்றதா இருந்தா கல்யாணியோட ஃபேமிலியை விட மோசமான ஸ்டேட்டஸ்ல நாலைஞ்சு பேர் இருக்காங்க.''

''நமக்கு எஃபிஷியன்ஸிதான் முக்கியமே தவிர, மத்த எந்த விஷயமும் இல்லே.''

''எபிஷியன்ஸின்னு பாத்தா மாதவிதான் பெஸ்ட்.''

''என்னோட ஒபினியனும் அதுதான்.''

''நோ. ஐ'வில் ரெக்கமெண்ட் ஒன்லி கல்யாணி. அந்த மாதிரி ஏழைப் பொண்ணுக்கு லைஃப் கொடுத்தா கம்பெனிக்கு ரொம்ப சின்ஸியரா இருப்பாங்க. அந்த மாதவி ரொம்ப அலட்சியமா பிஹேவ் பண்ணினா.''

''திறமையைப் பொறுத்தவரைக்கும் ரெண்டு பேருமே ஈக்வலா இருந்தாலும் அவங்க பேசிக் நேச்சரையும் பார்க்க வேண்டியிருக்கு. கல்யாணி திறமையாப் பதில் சொன்னாலும், கடைசில அழுதது அவளோட தன்னம்பிக்கைக் குறைவைத்தான் காட்டுது. தன்னோட திறமை மேல நம்பிக்கை இருக்கறபட்சத்துல அவ அப்படி அழுதிருக்க வேண்டாம். தவிர, அழுது காரியம் சாதிக்க நினைக்கற பொண்ணால கவலையைச் சவாலா எடுத்துக்கத் தெரியாது. அவகிட்ட நாம வேலை வாங்கவும் முடியாது. சிம்பதிங்கறது எல்லாச் சமயத்திலேயும் நிலைக்காத விஷயம்.''

''மாதவ் வேலையிலேயும் அலட்சியமா இருக்க மாட்டாங்கறது என்ன நிச்சயம்?''

''மாதவி அலட்சியமா இருந்தாலும் திறமைக் குறைவானவ இல்லே. அலட்சியம்கறது மிதமிஞ்சிய தன்னம்பிக்கையால வர்றது. ஸோ, எந்த வேலை கொடுத்தாலும் துணிஞ்சு முயற்சி பண்ணுவாங்கறது நிச்சயம். இதெல்லாம் மாதவிக்கு ப்ளஸ் பாயிண்ட். இந்த மாதிரி பொண்ணுகிட்டே வி கேன் ட்ரா மோர் வொர்க். எந்த பிரச்னையையும் மாதவியால சுலபமா எதிர்நோக்க முடியும். என்ன சொல்றீங்க?''

''நீங்க சொல்றது கரெக்ட்டாகத்தான் இருக்கும்.''

''ஸோ, மாதவி ஈஸ் அப்பாயிண்டட். ரெண்டு பேருக்கும் சரிதானே?''

''ம். ஓகே சார்.''

அடுத்த மாதத்திலிருந்து மாதவி பொழுதுபோக்குவதற்காக ஆபீஸ் போய்க்கொண்டிருந்தாள்.


மீண்டும் மீண்டும் இண்டர்வியூவில் காத்துக் கொண்டிருந்த போது கல்யாணிக்கு இந்த வேலையாவது கிடைத்து விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றிற்று...











COUNT DOWN — 7

விரலிடுக்கில் தப்பினான்!

ஜீப் அந்த ஆட்டோவை இருநூறடி இடைவெளியில் தொடர ஆரம்பித்தது.

ஆட்டோ கடற்கரைச் சாலையில் வேகம் பிடித்தது. பின்னிரவில் கடற்காற்று சீறிக் கொண்டிருந்தது. தங்கள் பிரகாசக் கண்களை எரிய விட்டு, வாகனங்கள் சீறிப் பாய்ந்தன. கடலோரச் சிலைகள் குளிரில் விறைத்து நின்றன.

மணிமாறன் தன் வசமிருந்த பையைத் திறந்தான். நடராஜரின் பேப்பர் கிரீடத்தைத் தொட்டுப் பார்த்தான். நாளைக்கு விடிவதற்குள் சிலையை லக்ஷ்மி ரூபாவிடம் திருப்பிய பின், அவன் வேலை ஓரளவு முடிந்ததாகி விடும். பாகிஸ்தானுக்குத் தகவல் அனுப்பி விட்டு, அவன் இந்தப் பரந்த சென்னையை விட்டு ஒதுங்கி விடுவான்.

கண்ணகி சிலையருகே, பாரதியார் சாலையில் ஆட்டோ திரும்புகையில் எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு கார்களுக்குப் பின்னே வந்து கொண்டிருக்கும் அந்த ஜீப்? அதை எங்கே பார்த்திருக்கிறேன்?

ஹாஸ்டல் காம்பவுண்டிலிருந்து குதித்து இறங்கிய போது, 'இருட்டில் இதே ஜீப் நின்றிருக்கவில்லை?

மணிமாறனின் ரத்தம் சிலிர்த்தது. கழுத்தை வளைத்துத் திரும்பிப் பார்த்தான்.

> சில மீன்கள் தூண்டிலில் மாட்டிவிடும்.
> சில மீன்கள் பெரிய வலை விரித்தால் தான் சிக்கும்.
> பதில் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்விகள் இவைதாம்:
> எந்த மாதிரியான வலையை தீர்மானிப்பது?
> எங்கே?
> தவிர்க்கக் கூடிய ஓட்டைகளை எப்படி முன்னெச்சரிக்கையாய் அடைப்பது?
>
> — ஜே. பி. லிப்பின் காட்.

"அழகப்பன்." அச்சுதன் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தவனின் தோளைத் தொட்டான். "ஜீப்பை ஆட்டோவின் பின்னே இடதுபுறம் திருப்பாதே. அவன் நம்மைப் பார்த்து விட்டான் என்று நினைக்கிறேன் நேரே போ."

"ஆனால்..." அழகப்பன் தயங்கினான். "அவன் தப்பி விடுவானே?"

"தப்ப மாட்டான்... அதை நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அவன் உஷாராகி விட்டால் அவனுடைய இருப்பிடமே நமக்குத் தெரியாமல் போய் விடும் அபாயம் இருக்கிறது. நேரே போ..."

ஜீப் மாநிலக் கல்லூரியின் அருகே கடந்த போது "ஸ்டாப்" என்றான் அச்சுதன்.

நின்ற ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினான். சாலை ஓரத்தில் இருந்து புறப்பட்ட ஒரு ஆட்டோவில் தாவி ஏறினான். "சின்ன இடைவெளி விட்டு ஆட்டோவை ஃபாலோ பண்ணு" என்றான் அழகப்பனிடம்.

ஆட்டோவின் மீட்டர் கொடியை மடக்கினான். "ஆட்டோவைத் திருப்பு" என்றான்.

மணிமாறனின் விறைத்த நரம்புகள் தளர்ந்தன. ச்சே, அநாவசியமாகப் பயந்து விட்டேன். ஜீப் நேர் சாலையில் போய் விட்டது. என்னைத் தொடரவில்லை. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் நுழைந்ததும் ஆட்டோவை நிறுத்தி இறங்கிக் கொண்டான். லக்ஷ்மி ரூபா கொடுத்த பையைத் தூக்கிக் கொண்டு லாட்ஜ் இருந்த சந்திற்குள் நுழைந்தான்.

குறுகலான சந்தின் பெரும் பகுதியை அடைத்து ஓர் எருமை படுத்திருந்தது. இரண்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் பிளாட்பாரத்தில் முன்னங்கால்களைத் தூக்கி வைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. நடைபாதைக் குடும்பத்தின் அலுமினியப் பாத்திரத்தில் உலைநீர் கொதித்தது. ஈரச் சுள்ளிகளின் அடர்த்தியான புகையில் குழந்தைகள் தூங்காமல் இருமிக் கொண்டிருந்தன.

லாட்ஜுக்குள் மணிமாறன் நுழைந்தான்.

நுழையுமுன் சந்தின் முனை வரை பார்த்தான். சந்தேகப்படும்படி யாரும் இல்லை.

ரிசப்ஷனில் இருந்த நரைத்த பிடி மனிதரிடம் சாவி வாங்கிக் கொண்டு மாடியேறினான்.

அச்சுதன் அழகப்பனைக் கொக்கி விரலால் கூப்பிட்டான். ஜீப்பும், அவனு

அஞ்சனா மைக்கேல்ராஜ்



டைய ஆட்டோவும் சாலையிலேயே நின்றிருந்தன.

"நீ இங்கே வாசலைக் காவல் காத்தபடி நில்" என்றான் ரகசியக் குரலில். சொல்லிவிட்டு மணிமாறன் நுழைந்த அதே லாட்ஜுக்குள் நுழைந்தான்.

ரிசப்ஷன் மனிதரின் முகத்துக்கு நேரே ஆள் அடையாள அட்டையை நீட்டினான். தில்லியில் வெடிகுண்டு பயம் காரணமாக ஒவ்வோர் அரசு ஊழியரும் வைத்திருக்க வேண்டிய சாதாரண அடையாள அட்டை அது என்பதை அந்த ஆள புரிந்து கொள்ளு முன், அதை மடக்கி பாக்கெட்டி-' வைத்தான். "போலீஸ்" என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான். "சற்று முன்பு பயணப்பையுடன் ஒருத்தன் நுழைந்தானே, அவன் எந்த ரூம்?"

அவனுடைய அதிகாரக் குரல் அவர் பிடியை அவசரமாக அணைத்தது.

"மாடில மொத ரூம். நம்பர் பதினேழு."

அச்சுதன் படிகளில் ஏறினான்.

இதவிடுக்கில் சிக்கிக் கொண்ட பல்லியின் காரணமாக, கதவை சரியாகச் சாத்த முடியாமல், திறந்து மறுபடியும் மூட முனைந்த மணிமாறனின் காதில் அந்த வார்த்தைகள் விழுந்தன.

"மாடில மொத ரூம். நம்பர் பதினேழு."

தன் அறை எண்ணை யாருக்குச் சொல்கிறான் இந்த லாட்ஜ் ஆள்?

நெற்றி வரை வெளியே செலுத்திப் படிகளின் இறக்கத்தில் பார்த்தவன் அதிர்ந்தான். முதுகுப்புறமிருந்து பார்த்தாலே நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடிந்தது — அச்சுதனை!

மணிமாறன் மின் கம்பியை மிதித்தவன் போல அதிர்ந்தான்.

கதவைச் சட்டெனச் சாத்தினான்.

வாலுடைய நிழல் போல எவ்வளவு நெருக்கமாக வந்து விட்டான் அச்சுதன்!

அவனுக்குப் பதற்றத்தில் மூச்சிரைத்தது. கட்டிலில் உட்கார்ந்தான். மின்சார வேகத்தில் சிந்தித்தான்.

கதவு தட்டப்பட்டது.

அச்சுதன் பதற்றமில்லாமல் மறுபடி கதவைத் தட்டினான்.

யாரோ ரூம்பாய் என்று நினைத்து மணிமாறன் திறக்கப் போகிறான். திறந்ததும், அதிரப் போகிறான்.

கதவு தாள் நீங்கியது. திறந்தது.

"கம் இன்" என்றது மணிமாறனின் குரல். அடுத்த கணம் கனமான ஒரு பை ஊஞ்சல் போல் ஆடி வந்து அச்சுதனின் முகத்தைத் தாக்கியது. அதன் அடிப்புறம் இருந்த உலோகக் குமிழ் அச்சுதனின்

மூக்குப் பாலத்தை உடைத்தது. முழு பாரமும் பாக்ஸிங் வீரனின் முஷ்டி போல் பறந்து வந்ததில் அச்சுதன் பின்புறம் தூக்கியெறியப்பட்டு மல்லாந்தான். அவனை மிதித்து இரண்டு கால்கள் ஓடின.

அச்சுதன் விதிர்த்து எழுந்து, கைக்குட்டையை மூக்கில் பொத்திப் படிகளில் சரிந்து இறங்கினான். சரேலென அவன் பாதையில் குறுக்கிட்டான் அழகப்பன்.

''ஸார், நீங்களா? ஓடி வரும் சப்தம் கேட்டு மணிமாறன் என்று நினைத்து விட்டேன்.''

''மணிமாறன் இறங்கி வரவில்லை?''

''இல்லையே.''

''இல்லையே'' என்று எதிரொலித்தான் ரிசப்ஷன் ஆசாமியும். அச்சுதன் வெளியே ஓடினான். அண்ணாந்து பார்த்தான்.

நீல வானத்தின் பின்னணியில் மணிமாறன் நிழலாகப் பக்கத்துக் கட்டடத்தின் உச்சியில் குதித்து இறங்குவது தெரிந்தது.

''அழகப்பன்!''

அழகப்பன் அந்தக் கட்டடத்தின் மறுபுறம் நோக்கி அடுத்த இணையான சந்திற்கு ஓடினான்.

அச்சுதன் ஒவ்வொரு கட்டடத்தின் முன்பும் ஓடி நின்று, மணிமாறனை எதிர்பார்த்தான். ரத்தம் உதட்டில் புளித்தது.

அந்தப் பிரதேசம் முழுவதையும் ராணுவம் சூழ்ந்தால் ஒழிய, இந்த நள்ளிரவில், ஒத்துழைக்காத இருள் பின்னணியில், அடர்த்தியாய்க் கட்டடங்கள் நெருங்கி நிற்கும் இந்த கான்க்ரீட் தோப்பில் மணிமாறனைக் கண்டுபிடிப்பது என்பது குப்பைத் தொட்டியில் குண்டூசி தேடுவது போலத்தான் என்று அச்சுதன் கசப்பாக உணர்ந்தான்.

அடுத்த தொண்ணூறு பதற்றமான நிமிடங்களில் மணிமாறனின் நிழலைக் கூட கண்டுபிடிக்க முடியாத வேதனையுடன் லாட்ஜுக்குள் மறுபடி நுழைந்தான் அச்சுதன்.

சாந்தினி மஞ்சள் நிறத்தில் சூரிதார் அணிந்திருந்தாள். மஞ்சள் அவள் நிறத்தை எதிரொலித்தது. விமானப் படிகளில் அவள் பறவை இறகு போல் இறங்கிய போது, அச்சுதனின் உள்ளே சிறகுகள் படபடத்தன.

அச்சுதன் மானசீகமாக அவளுக்கு அவனுடைய கேரள மண்ணின் வெண்பட்டு முண்டை உடுத்தினான். நெற்றியில் சந்தனக் கீற்று. ஈரம் நனைந்து, பரந்த பின்னலற்ற கூந்தல். வலது மூக்கின் மையத்தில் வைரப் பொட்டு. கால் விரல்களில் மெட்டி. மணிக்கட்டில் ஒலியெடுக்கும் தங்க வளையல்கள். சிவந்த அதரங்கள். மெலிதாகப் பிளந்து வெண்பற்களில் சூரியனைப் பழிக்கும் புன்னகை.

விமானப் படிகளில் அவள் கொலுசு ஒலிக்க இறங்கி, அவன் அருகே வந்து நின்று, ''என்டே ப்ரியதமா, சுகந்தன்னே?'' என்று விளிக்கிறாள். அச்சுதன் பதில் சொல்லாமல் கண்களை அழுந்த மூடித் திறந்து, அவளுடைய சுகத்தைப் பிரஸ்தாபிக்கிறான். அவள் அவனுடைய கையைத் தேடி விரல்களை நெறித்துக் கோத்து...

''எந்தா சாரே, சுகந்தன்னே?''

அச்சுதன் ஒரு குலுக்கலுடன் நிஜத்திற்குக் கொண்டு வரப்பட்டான்.


''எவ்வளவு காலமானாலும் எனக்காகக் காத்துக்கிட்டிருப்பேன்னு நீ சொல்றதை நான் எப்படி நம்பறது, சாந்தி?''

''ஏன், அதை நம்பறதுல உங்களுக்கு என்ன கஷ்டம்?''

''நான் ஐந்து நிமிஷம் லேட்டா வந்ததுக்கே நீ எனக்கு வாங்கி வைச்சிருந்த கண்டலைக் காலி பண்ணிட்டியே!''

— சீர்காழி. வி. ரேவதி.





''அந்த ஜோக் எழுத்தாளரைப் பார்த்ததிலேர்ந்து ஒரே சிரிப்பும் குஷியுமா இருக்கியே...! ஏதாவது ஜோக் சொன்னாரா?''

'''ஜோக் எழுதறதை விட்டுட்டேன்'னு சொன்னார்.''

— ராஜு நிலா.

கொச்சு வேலாயுதம்! அவனுடைய தில்லி சமையல்காரன்! அவன் இங்கே எப்படி?

"என்ன அச்சுதன், உன் பார்வையில் நானாவது தென்படுகிறேனா, இல்லையா?" கர்னல் அருள்தாஸின் குரல் மிடுக்காக அவனை நிமிர்த்தியது.

அவனுடைய எலும்புகள் வெட்கத்தில், லஜ்ஜையில் இறுகின. குறுகின.

"கர்னல், நான்.."

"அச்சுதன்.. இளைத்து விட்டீர்கள்?" என்றாள் சாந்தினி. "மூக்கில் என்ன பிளாஸ்டர்?"

"ஆமாம், இரண்டு நாளில் இளைத்து விட்டான்!" கர்னலின் குரலில் கேலி இருந்தது. "உனக்கு மெட்ராஸில் நல்ல சாப்பாடு கிடைக்காது என்று இவனுக்கு பயம். அதனால் கொச்சு வேலாயுதத்திற்கு அடித்தது யோகம். அவனுக்கும் சேர்த்து பிளேன் டிக்கெட் எடுக்க வேண்டியதாகி விட்டது."

"என்டே கை கொண்டுண்டாக்கிய புட்டும், நூலப்பவும் கழிக்காத, ஸாரு மெலிஞ்சு போயோ?" என்றான் கொச்சு வேலாயுதம், அச்சுதனைப் பார்த்து.

"ஏய், சும்மா வா..." என்றான் அச்சுதன் போலியாய் மிரட்டி.

ஜீப்பில் பின் இருக்கையில் சாந்தினியின் மூச்சு புலப்படும் நெருக்கத்தில் உட்கார்ந்து பயணித்த போது, அச்சுதனின் இதயம் ஒரு புறம் துள்ளிக் கொண்டிருந்தது. மறுபுறம் குன்றியிருந்தது.

"எனி நியூஸ், அச்சுதன்?" கர்னல் கேட்டு விட்டார்.

"கெட்ட செய்திதான், கர்னல். நேற்று விரலிடுக்கு வழியே தப்பி விட்டான்.."

"தப்பி விட்டானா?"

"ஆம், கர்னல்... திருவல்லிக்கேணியில் லாட்ஜ் ரூம் எடுத்திருந்தான். அவனுடைய ரூமை முழுவதும் அலசிப் பார்த்து விட்டேன். உபயோகமில்லாத குப்பைகள் தான் கிடைத்தன."

"லக்ஷ்மி ரூபா?"

"அவளைப் பிடித்து வைத்திருக்கிறோம். அவளுடைய அப்பா திருச்சியில் எலக்ட்ரானிக் இன்ஜினியர். அவர் அவளிடம் மணிமாறன் வருவான், அவனுக்கு உதவு என்று சொல்லியிருந்தாராம்."

"அவளுடைய அப்பா?"

"அரெஸ்ட் செய்து மெட்ராஸிற்குக் கூட்டி வருகிறார்கள். இன்று மதியம் வந்து விடுவார்."

கர்னல் அருள்தாஸ் மௌனமாயிருந்தார்.

அந்த மௌனம் அச்சுதனை வதைத்தது.

"ஸாரி கர்னல்" என்றான், தாழ்ந்த குரலில்.



"வாழ்க்கையில நிறைய மேடு பள்ளங்களைப் பார்த்தவன் சார் நான்...!"

"அப்படியா...! என்ன செய்யறீங்க...?"

"ஆட்டோ டிரைவரா இருக்கேன்...!"

— ஏ. ஆர். வீரராகவன்

ஜீப்பின் உறுமலில் அந்த வார்த்தைகள் கூட சரியாக ஒலிக்கவில்லை.

நீலக்கடலின் அலைகள் கரையை மோதி மாய்ந்து கொண்டிருப்பதை ஜன்னல் வழியே பார்த்தபடி சாந்தினி உட்கார்ந்திருந்தாள்.

அடுத்த அறையில் கர்னல் தம் சக்கர நாற்காலியை நகர்த்தி நாற்காலியில் உட்கார்ந்திருந்த லக்ஷ்மி ரூபாவை நெருக்கி நிறுத்தினார்.

"ஏன் இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட நினைத்தாய், பெண்ணே.."

லக்ஷ்மி ரூபாவின் பாவம் மிகுந்த கண்களில் இப்போது பயமும், கண்ணீரும் கலந்திருந்தன. "என் அப்பா சொன்னதைத் தான் செய்தேன்..." என்றாள். குரல் நடுங்கியது.

ஜன்னல் வழியே தெருவைப் பார்த்துக் கொண்டிருந்த அச்சுதன் விறைத்தான்.

"கர்னல், கார் வந்து விட்டது. லக்ஷ்மி ரூபாவின் அப்பாவை அழைத்து வருகிறார்கள்."

ஜன்னலோரம் சக்கர நாற்காலியை நகர்த்தி பார்வையை வெளியே எறிந்தார் கர்னல்.

காரிலிருந்து இறங்கிய லக்ஷ்மி ரூபாவின் தந்தையைப் பார்த்தும் அவருடைய நெற்றிப் புருவங்கள் முடிச்சிட்டன.

"இவனா?" என்றார் குரலில் ஆச்சரியத்துடன்.

(தொடரும்)

சொல்லும் செயலும்

அஃக்கன்

அய்யனார் கோவிலைத் தாண்டி ஊருக்குள் வந்து கொண்டிருந்த அம்பலக்காரரின் மாட்டுவண்டியைப் பார்த்ததும், செங்கைத் தோட்டத்துக்குப் போய்க் கொண்டிருந்த வீராயி சட்டென்று திரும்பி, வண்டியின் ஏர்க்கால் சட்டத்திலிருந்த சிதம்பரத்தைப் பார்த்துத் தலையை நொடித்தபடி வந்தாள்.

"என்ன சின்னவுகளே! டவுனுக்குப் போயிட்டு வர்றீகளா? வெறுங்கையை வீசிட்டு வராம, ஏதாச்சும் மல்லிப்பூ, கதம்பம் ஒரு மொளம் வாங்கிக்கிட்டு வரப் படாதா...? க்கும்..." என்று அவரைப் பார்த்துத் தன் நீண்ட கருவிழிகளை ஒரு சுழற்றுச் சுழற்றினாள், வீராயி.

அவள், வண்டியின் முன்புறம் உட்கார்ந்திருந்த சின்னப் பண்ணையாரைப் பார்த்தாளே ஒழிய, உள்ளே இருந்த வெள்ளைச்சாமியைக் கவனிக்கவில்லை.

தன் 'வாடிக்கை'யின் சேஷ்டையைப் பார்த்ததும், சற்றே திடுக்கிட்டவனாய், சிதம்பரம் சட்டென்று தன் வலதுகைச் சுட்டு விரலை உதடுகளின் குறுக்கே வைத்து, 'ஏதும் பேசாதே' என்று உள்ளே பார்க்கும்படி ஜாடை செய்தான்.

வெள்ளைச்சாமியைக் கண்டதும், சட்டென்று முகபாவத்தை இயல்பாக்கிக் கொண்டு, "வாங்க சின்னத்தம்பி! சவுக்கியமுங்களா...? பட்டணத்துப் படிப்பெல்லாம் முடிஞ்சிருச்சா?" என்று, ஒதுங்கிக் கிடந்த மார்புச் சேலையையும், தலையிலிருந்த கூடையையும் சரி செய்து கொண்டு, மரியாதையாக அவனிடம் பேசினாள் வீராயி.

சில வினாடிகளுக்கு முன்பு, தன் சித்தப்பாவுக்கும் வீராயிக்கும் இடையே நடந்த சில்மிஷத்தை அவன் கவனிக்காமலில்லை.

இது ஒன்றும் புதிதில்லை அவனுக்கு. தங்கள் பண்ணையில் வேலை செய்யும் பெண்களோடு சித்தப்பா 'பழகும்' விஷயங்களை அவன் பல தடவை அரசல்புரசலாகக் கவனித்திருக்கிறான்.

அவனுடைய சித்தப்பா சிதம்பரம் மட்டுமல்ல — அந்தக் கிராமத்தில் வசதி வாய்ந்த ஆண்கள், கூலி வேலை செய்யும் பெண்களோடு கேலியாகப் பேசுவதும், சிலர் அதையும் தாண்டி 'நெருக்கமாகப்' பழகுவதும் அவனுக்குத் தெரியும். ஜாதி வித்தியாசம் கடந்து நடக்கும் இந்த 'விவகாரங்கள்' அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில், ஒரு பிரச்னையாகவே உருவெடுப்பதில்லை. இலைமறை காய்மறையாக நடக்கும் இதை யாருமே — சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே — சீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை!

அந்த ஊரிலே பண்ணையாரின் மூத்த மகன் வெள்ளைச்சாமிதான் காலேஜ் போய்ப் 'பெரிய படிப்பு' படித்து முதன் முதலாகப் பட்டம் வாங்கியவன்.

அதனால் அந்த ஆண்டு, சுதந்திர நாள் கொண்டாட்டத்தில் ஒரு புதுமை செய்தார், பள்ளிக்கூட வாத்தியார்.

வழக்கமாக, அந்த ஊர்ப் பண்ணையார் அல்லது பெரியவர் யாராவது வந்து, தேசியக் கொடியை ஏற்றிக் கட்டிவிட்டு, ஒரு தட்டிலிருக்கிற மிட்டாய்களை எடுத்து, அங்கே கூடியிருக்கிற குழந்தைகளுக்கு விநியோகிப்பார். மிட்டாயிலே சுதந்திரத்தைப் பார்த்துவிட்டு, விடுமுறை கிடைத்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து ஓடுவார்கள் பிள்ளைகள்.,

அந்த ஆண்டு, கிராமத்தின் முதல் பட்டதாரியான வெள்ளைச்சாமி, பள்ளிக்கூடத்தில் கொடியேற்றி வைத்துப் பேச வேண்டும் என்று ஆசிரியர், பண்ணையார் வீட்டுக்கு வந்து அழைத்தபோது, கருப்பையா அம்பலக்காரருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

தம் மகன் கொடியேற்றி வைப்பதைக் கண்குளிரக் காண வேண்டும் என்ற துடிப்பில், அம்பலக்காரர் சுதந்திர நாளன்று காலையிலேயே பள்ளிக் கூடத்துக்கு வந்து உட்கார்ந்து விட்டார். ஊரில் மற்றவர்களும் திரண்டு கூடி விட்டார்கள். எல்லோருக்குமே, தங்கள் ஊர்ப் பட்டதாரியின் பேச்சைக் கேட்க ஆவல்!

அந்தக் கிராமத்தின் 'வரலாறு காணாத கூட்டத்தில்', வெள்ளைச் சாமி பி. ஏ. கொடியேற்றி வைத்துப் பேசினான். கல்லூரியில் படித்த பாடங்களையும் கேட்ட பேச்சுக்களையும் அப்படியே நினைவுக்குக் கொண்டு வந்து கொட்டினான்.

சுதந்திர இந்தியாவில் 'ஜாதி மதங்களைப்

பாரோம்; வேதியராயினும் ஒன்றே; அன்றி வேறு குலத்தவராயினும் ஒன்றே; ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை. ஜாதியில் இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே...' என்றெல்லாம் பாரதியாரின் பாடல்களை அள்ளி வீசி, உணர்ச்சி கொப்புளிக்க முழங்கினான்.

ஊரில் எல்லோரும் — அர்த்தம் புரிந்ததோ இல்லையோ — ஜோராகக் கை தட்டினார்கள். மிட்டாய் விநியோகத்திற்குத் தாமதம் ஆகிறதே என்ற பரிதவிப்பு இருந்தாலும், குழந்தைகளும், பெரியவர்களைப் பின்பற்றிக் கை தட்டினார்கள்.

நகரங்களில் மாமூலான 'சுதந்திர தின உரை', அந்தக் கிராமத்திற்குப் புதிது ஆகையால், எல்லோரும் இப்போது, வெள்ளைச்சாமியை மேலும் ஒரு படி அதிக மரியாதையுடன் பார்க்க ஆரம்பித்தார்கள்.

விழா முடிந்து, வெள்ளைச்சாமி வீட்டுக்கு வந்த போது, வாசற்படியிலேயே அவனை நிறுத்தி வைத்து, திருஷ்டி சுற்ற வந்து விட்டாள் தாய் தெய்வானை.

"என்ன ஆத்தா, இதெல்லாம்?" என்று திகைப்புடன் நெளிந்தான் வெள்ளைச்சாமி.

"இன்னிக்குப் பள்ளிக் கூடத்திலே பிரமாதமாப் பேசினியாமே. ஊர்ச் சனங்க எல்லார் கண்ணும் இன்னிக்கு உன் மேல தானாம்..." என்று உடலெல்லாம் மகிழ்ச்சி பிரவகிக்கச் சொல்லி, திருஷ்டி சுற்றினாள் தாய்.

"யாரு உன்கிட்டே சொன்னது?" என்று அவன் விசாரித்த போது, தெய்வானைக்குப் பின்னாலே, ஒரு தூண் மறைவில் நின்று கொண்டிருந்த ஒரு முகம் பளிச்சென்று மின்னல் வெட்டியது.

"தோ, அங்கினே நிக்கிறாளே வள்ளி, அவதான்... அடியே, இங்க வா..." என்று தெய்வானை கூப்பிட்டதும், மறைவிடத்திலிருந்து, வட்ட முகத்தை முதலிலும், வாளிப்பான உடலை அடுத்தும் காட்டியபடி வெளியே வந்தாள் வள்ளி.

"இந்தப் பொண்ணு யாருனு தெரியுதா? நம்ம முனியாண்டி இருக்கானே, அவனோட பொண்ணு."

வேலைக்காரர்களிலே — ஏன், அந்தக் கிராமத்திலேயே — சற்று வித்தியாசமான மாநிறம், துருதுரு என்று துள்ளிச் சுடர்



தெறிக்கும் கரிய நீண்ட கண்கள். அளவெடுத்து வைத்தது போல் கச்சிதமான உடலமைப்பு — பார்த்த மாத்திரத்தில் எந்த ஆணின் உள்ளத்திற்குள்ளும் சரேல் என்று பாய்ந்து, கவனத்தைச் சுவீகரித்துக் கொள்ளும் ஒரு கவர்ச்சி...

"நீ மீட்டிங்குக்கு வந்திருந்தியா?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான் வெள்ளைச்சாமி.

மூகத்தில் நாணம் பொங்கிச் சிவக்க, தலையை மட்டும் ஆட்டினாள் வள்ளி.

மறுநாள் — மாலை நேரத்தில் பொழுது போக்குவதற்காக, கரும்புத் தோட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் வெள்ளைச்சாமி.

கரும்புத் தோட்டத்துக்கு நடுவில் இருந்த 'பம்ப் செட்' அறையிலிருந்து தண்ணீர் பாய்ந்து வருவதைப் பார்த்து, வேகமாக அதை நோக்கி நடந்தான் வெள்ளைச்சாமி.

'இந்த மாலை நேரத்தில் யார் பம்ப் போட்டிருக்கிறார்கள்?'

கிட்டே வந்ததும், உள்ளே யாரோ குமாய்த் தண்ணீரில் குளித்துக்கொண்டிருப்பதுபோல் தெரிந்தது.

"யாரங்கே?" என்று அதட்டியவனாய், விருட்டென்று அறைச் சுவரைத் தாண்டி உள்ளே போக, அங்கே தன்னிச்சையாகக் குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண், திடுக்கிட்டுப் பயந்து, மார்பின் மேல் கட்டியிருந்த பாவாடையைப்பிடித்தபடி, திரும்பி, சுவரைத் தாண்டி வெளியே காலடி எடுத்து வைக்க, ஓரத்தில் படிந்திருந்த பாசி வழுக்க, "ஆத்தா!" என்று அலறியவாறு கீழே சாய, சட்டென்று ஓடி அவளைப் பிடித்துத் தாங்கிக் கொண்டான் வெள்ளைச்சாமி.

வலையில் பிடிபட்ட இளமானைப் போல், மருண்டு அவனை ஏறிட்டுப் பார்த்த அந்தப் பெண் — வள்ளிதான்!

இரண்டு மாதம் கழித்து, ஒரு நாள் இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, முகப்பில் இருந்த வேப்ப மரத்திற்கு அடியில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து, மனைவி வக்கணையாய் மடித்துக் கொடுத்த வெற்றிலையை அவர் மென்று கொண்டிருந்த போது, பண்ணையாள் முனியாண்டி தலை முண்டாகத் துணியை இடுப்பில் இறுகக் கட்டியபடி, மெதுவாக அவர் முன்னால் வந்து நின்றான்.

"என்ன முனியாண்டி, வீட்டுக்குப் போகலே...?"

"இல்லே, எசமான்! ஒரு முக்கியமான விசயம்..."

"என்ன? சொல்லு..." என்று வெற்றிலைச் சாறை உள்ளே விழுங்கிக் கொண்டு, அவனை ஏறிட்டுப் பார்த்தார் அம்பலக்காரர்.

"எம் பொண்ணு வள்ளிக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாய்ப் பார்த்து ஏற்பாடு பண்ண நெனச்சேன்..." என்று அவன் தொடங்கியதுமே குறுக்கிட்டாள் தெய்வானை.

"ஆமா... இந்த ஊர்லே வள்ளி ரொம்ப சமத்துப் பொண்ணு... உங்க சாதியிலே, மத்த பொண்ணுகளுக்கு மாதிரி, பார்த்தேன், பேசினேன்னு சாதாரண எடமாப் பார்த்து அவளைக் கட்டி வச்சிடாதே... நல்லாப் படிச்ச மாப்பிள்ளையாய், யோக்கியமான மாப்பிள்ளையாய்ப் பார்த்து ஏற்பாடு பண்ணு..."

"நீங்க சொல்றது மாதிரிதான் வள்ளியும் நெனைக்குதுங்க. அதுக்காக, ரொம்ப உசந்த எடமாய், எங்களுக்கு எட்டாத எடமாப் பார்த்து வச்சிருக்குங்க..." என்று, மேலே எப்படிச் சொல்வது என்ற தயக்கம் வந்து தடுக்க, தைரியத்தைத் திரட்டிக் கொண்டிருந்தான் பண்ணையாள்.

"அது யாருடா, உனக்கு எட்டாத இடம்?"

"அது... நம்ம வீட்டிலே... நம்ம சின்னத் தம்பியை நெனைச்சுக்கிட்டிருக்குங்க..." என்று அவன் சொன்னதும், அம்பலக்கார

யார்தான் நாங்கள்?

●● இலங்கையிலிருந்து வந்த அகதி ஒருவர் தமது மகனைப் பள்ளியில் சேர்க்க வந்தார். அப்போது அவர் மகனின் பெயரை எழுதிய பின்னர், 'இலங்கைத் தமிழ் அகதி' என்று எழுதப்பட்டது. அப்போது அவர், "என் மகனை இலங்கைப் பள்ளியில் சேர்க்கும் போது 'இந்தியத் தமிழர்' என்று எழுதினார்கள். இங்கு 'இலங்கைத் தமிழ் அகதி' என்று எழுதுகிறீர்கள். இந்த நிலையில் எங்கள் சொந்த நாடுதான் எது?" என்று மிகவும் நொந்து போய்க் கேட்ட போது, சுற்றியிருந்தவர்கள் அனைவரும் நெகிழ்ந்து போய்விட்டார்கள்.

— கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை.



ரும் தெய்வானையும் திடுக்கிட்டுப் போனார்கள்.

"என்னடா சொல்றே?" என்று வெடித்தார் கருப்பையா.

"நானும் இப்படித்தாங்க கோவமாய்க் கேட்டேன், அதுகிட்டே... ஆனா அது உறுதியாய்ச் சொல்லுதுங்க... நம்ம சின்னத் தம்பிக்கும் அதுக்கும் கரும்புத் தோட்டத்திலே ரெண்டு மாசமாப் பழக்கமாம். 'ரொம்பப்' பழக்கமாம்... அவரு என்னைக் கட்டிக்குவாரப்பான்னு சொல்லுது அது..."

பொட்டில் அடி வாங்கியதுபோல், பொறி கலங்கிப் போய் அமைதியாகி விட்டார் அம்பலக்காரர். உடம்பின் ரத்தநாளமெங்கும் ஆத்திரம் ஊற்றெடுத்துப் பரவி எரிச்சலாய்ப் பொங்கி இறுகியது...

முனியாண்டி அபாண்டமாய்ப் பேசமாட்டான் என்பது அவருக்குத் தெரியும். அதிலும், வள்ளி, இந்த 'விஷயத்தில்' பொய் சொல்ல மாட்டாள் என்பதும் அவருக்குப் புரிந்தது.

"தெய்வானை...! அவனைக் கூப்பிடு..." என்று அவர் அலறியதும், மனைவி உள்ளே போய், தூங்கிக் கொண்டிருந்த மகனை அழைத்துக் கொண்டு வந்தாள்.

இந்த அகால நேரத்திலே அப்பா கூப்பிடுகிறாரே என்ற பரபரப்புடன் வேகமாக முகப்புக்கு வந்த வெள்ளைச்சாமி, அங்கே முனியாண்டியைப் பார்த்ததும், நெஞ்சம் திடுக்கிட்டுத் துடிக்க, நின்றான்.

"ஏண்டா, இந்த முனியாண்டி சொல்றது நெசந்தானா?" என்ற அம்பலக்காரரின் கடுமையான தொனியின் ஒலிவீச்சில் அதிர்ந்து போனான் மகன்.

என்ன சொல்வது என்றுபுரியாமல், தலைகுனிந்தபடி நின்றான் அவன்.

"என்னடா பேசாமலிருக்குறே...? நீயும் இவன் பொண்ணும் கரும்புத் தோட்டத்திலே நெருக்கமாப் பழகினது நெசந்தானான்னு கேக்கிறேன்..." என்ற கருப்பையாவின் குரல், பஞ்சாயத்து மேடையில் முழங்குவது போல், துல்லியமாகக் கேட்டது.

"ஆமாப்பா...!" என்று பலவீனமான ஸ்தாயியில், பாதி வார்த்தையும், பாதி தலையாட்டலுமாகப் பதில் சொன்னான் மகன்.

"அந்தப் பழக்கத்தை வச்சு, நீ அவளைக் கட்டிக்குவேன்னு அந்தப் பொண்ணு சொல்லியிருக்குதே, அதுவும் நெசந்தானா?"

சட்டென்று தலையை நிமிர்த்திக் கொண்டான் வெள்ளைச்சாமி: "இல்லே... அப்படி நான் அதுகிட்டே சொல்லலே... இந்த ஊரிலே எல்லோரும் — நம்ம சொந்தக்காரங்க எல்லோரும் — பழகுற மாதிரிதான், நானும் அந்தப் பொண்ணுகிட்டே சும்மாப் பழகினேன். நம்ம வீட்டிலே..." என்று, சித்தப்பாவை உதாரணமாகக் காட்டலாமா, வேண்டாமா என்ற யோசனையோடு, சிறிது தயங்கிய மகனின் உள்மன வோட்டத்தை ஊகித்துக் கொண்டார் கருப்பையா.

"டேய்! இந்த ஊரிலே, வேலைக்காரப் பொண்ணுகளோட பழகுற மத்தவங்களுக்கும், உனக்கும் வித்தியாசம் இருக்கு... அவங்களும் சரி, அவங்களோட பழகுற பொண்ணுகளும் சரி, ஒவ்வொருத்தரும், தான் என்ன சாதி, அவங்க என்ன சாதி என்கிற வித்தியாசத்தைப் புரிஞ்சுகிட்டுத்தான் பழகுறாங்க... அதனாலே, அந்தப் பழக்கம், இங்கே ஒரு பிரச்னையாக எழும்புறதில்லே... ஆனா நீ ரொம்பப் படிச்சவன். சுதந்திர நாட்டிலே தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதின்னு இல்லே; எல்லோரும் சமம்னு படிச்சுப்புட்டு, அதை நாலு பேர் முன்னாலே கூட்டத்திலே பேசினவன்... உன்னைப் பொறுத்த வரையில், சாதி வித்தியாசம் இல்லே; எல்லாரும் ஒண்ணு என்கிறது தான் உன் படிப்போட அர்த்தம். அதனாலே நீ, இங்கே இருக்கிற மத்தவங்களை உதாரணங்காட்டிப் பேசப்படாது..."

"அப்பா...! நான் அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற எண்ணத்தோட பழகலே..."

"ஆனா, அந்தப் பொண்ணு, உன் படிப்பையும் பேச்சையும் நெசம்னு நம்பி, நீ கல்யாணம் கட்டிக்குவேன்னு நெனைச்சுக்கிட்டிருக்கிறாளே, அதுக்கு என்ன சொல்றே?"

"அப்படி, நான் அவளைக் கட்டிக்குறேன்னு ஒரு தடவையாவது சொன்னேன்னு அந்தப் பொண்ணு ஊர்க் கூட்டத்திலே வந்து சொல்லட்டும்..." என்று தம் மகன், விவகாரத்தைச் சம்பிரதாயபூர்வமாக்க முயல்வதைப் பார்த்ததும், குறுக்கிட்டார் கருப்பையா.

"டேய்! உன் அப்பன், கூட்டத்திலே இருந்தால்தான் அம்பலக்காரர்னு இல்லே; அம்பலக்காரர் இருக்கிற இடமே, ஊர்க் கூட்டம்மாதிரிதான்... நான் இப்போ தீர்ப்புச் சொல்றேன் — நீ அந்தப் பொண்ணைத் தான் கட்டிக்கணும்... வெள்ளைச்சாமி! இது அம்பலக்காரரின் தீர்ப்பு மட்டுமில்லே; உன் அப்பனோட தீர்ப்பும்தான்... இனிமே நீ என் மகனாக இருக்கியோ இல்லையோ, இந்த வீட்டிலே வள்ளிதான் என் மருமகள்..." என்று தீர்மானமான பிரகடனமாய் அந்தக் கிராம அம்பலக்காரரின் பேச்சு ஒலித்த போது, சத்தியத்தின் சந்நிதியில் நின்ற மற்ற சாதாரண ஆத்மாக்களின் நெஞ்சங்கள் படபடத்து, சிறிது நேரத்தில் அமைதியாய் அடங்கிப் போயின...

தலைவலியையும் மறந்து அனைவரும் சிரித்து விட்டோம்!

— கௌசி திரௌபதி, திருவண்ணாமலை.



"இந்தப் பொண்ணு வேண்டாம்மா, குண்டா டபுள் ஃபிகரா இருக்கா."

"யோசிச்சுச் சொல்லுடா, சம்பளம் ஃபோர் ஃபிகரில் வாங்கறாளே!"

— பி. ராமன், சென்னை.

நீதிபதி: உனக்கு என்ன வயதாகிறது?

குற்றவாளி: அறுபது வயசுங்க.



"கொள்ளும் புல்லும் கணக்கெழுது!"



● டி. வி. யில் 'உச்சி வெயில்' பார்த்துவிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு நண்பர் வந்தார்.

"என்ன சார் 'உச்சி வெயில்' எப்படியிருந்தது?" என்று நான் கேட்க.

"மண்டை காஞ்சிடுச்சு" என்றார் அவர்!

நீதிபதி: நாற்பதுன்னு குறிப்பிட்டிருக்கே?

குற்றவாளி: அது வழக்கு ஆரம்பமான போது இருந்த வயசுங்க எசமான்!

— எஸ். சுகந்தி, சென்னை – 33.



● காலாண்டுத் தேர்வின் போது ஒரு மாணவன்

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

'பிட்' வைத்து எழுதிக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனைப் பிடித்து விடவே, "இது முதல் தடவை செய்யும் குற்றம். மன்னிச்சுடுங்க சார்!" என்று கெஞ்சினான். பரிதாபப்பட்டுவிட்டுவிட்டார் ஆசிரியர். அதே பையன் மீண்டும் ஒரு தேர்வில் காப்பி அடித்து அதே ஆசிரியரிடம் சிக்கினான். "என்னடா, இன்னிக்கு என்ன சொல்லித் தப்பிப்பே?" என்றார். அவன் "கடைசிக் குற்றம் மன்னிச்சுடுங்க சார்!" என்றானே பார்க்கலாம்!

— வி. முத்துக்குமார், பொள்ளாச்சி — 2.



கணவன்: நேற்று வரைக்கும் தனிக்கட்டையா இருந்தேன். இத்தனை நாளா நானே சமைச்சு நானே சாப்பிட்டுக்கிட்டு இருந்தேன்...!

மனைவி: இப்பதான் நான் வந்திட்டேனே... ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்!

— வி. கிருஷ்ணகுமார், சென்னை.

● மூன்று பெரியவர்கள் பேருந்தில் பேசிக் கொண்டது:

ஒருவர்: பெட்ரோல், டீசல் தட்டுப்பாடா இருப்பதாலே எல்லா அரசு அலுவலகங்களுக்கும் குதிரை வாங்கிக் கொடுத்து விடலாமே!

அடுத்தவர்: அந்தக் குதிரைக்குப் பதில் மண் குதிரையை நிறுத்திவிட்டு, அசல் குதிரையை விற்றுக் காசாக்கிப் போடுவாங்க நம்ம ஆளுங்க!

இன்னொருவர்: அப்படிச் செய்தாலும் பரவாயில்லையே! அந்த மண் குதிரைக்குக் கொள்ளும் புல்லும் வாங்கிப் போட்டதாக் கணக்கும் எழுதிடுவாங்களே!

— நாஞ்சில் க. நாகராஜன், பரமக்குடி.





கணவன்: ஏன் குழந்தையை அழ விடறே. வேணுங்கிறதை வாங்கிக் கொடேன்...

மனைவி: இந்தக் கடையில் எந்தப் பொம்மையும் வேண்டாமாம். எஸ். ஆர். பொம்மைதான் வேணுமாம்... அடம் பிடிக்கிறான்!

— நா. பாலு, தேவகோட்டை.



● திருமணமாகாத தமிழ்ப் பேராசிரியரிடம் ஒரு மாணவர், "என்ன சார்! ரொம்ப மெலிஞ்சிட்டீங்க? சாப்பாடெல்லாம் சரியாச் சாப்பிடுவதில்லையா? அல்லது ஓட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லையா?" என்று கேட்டார்.

அதற்குப் பேராசிரியர், "கல்யாணத்துக்குப் பிறகு "ஊதை" ஆரம்பிச்சிடுவேன்" என்றார்.

உடனே ஒரு மாணவன், "உடம்பைச் சொல்றீங்களா, அடுப்பைச் சொல்றீங்களா சார்?" என்றதும் ஆசிரியர் உள்பட மாணவ மாணவியர் அனைவரும் சிரித்து விட்டோம்.

— என். நாகராஜன், தேனி.

சிகரங்களை நோக்கி...

6

நிலா நனைத்த பாறையில் நின்றது நின்றபடியே நின்றான் அவன்.

என்னது...? இது தற்கொலைப் பாறையா? நான் வாழ வரச் சொன்னது தற்கொலைப் பாறைக்கா?

''ஆமாம்'' என்றாள் அந்த மனித தேவதை.

சற்றே அதிர்ந்தான்.

''இருக்கட்டுமே! தற்கொலைப் பாறையிலிருந்தே
வாழ்க்கையைத் தொடங்கலாமே!
இடுகாட்டில் என்ன, மரம் முளைக்கக் கூடாதா?

''இடுகாட்டில் மரம் முளைக்கலாம்; ஆனால்
அந்த நிழலில் பிணங்கள் இளைப்பாறுவதில்லை திருஞானம்.''

கோபம் அவன் உதடுகளை உடைத்தது.

''நீ யார்?
நிலா வெளிச்சத்தை அழுக்குப் படுத்த வந்த நீ யார்?
என் கனவுகள் மீது கல்லெறிய வந்த நீ யார்?''

புல்வெளியில் பூக்கள் விழுவது போல் அவள் அதிராமல் பேசினாள்:

''நானும் உங்களைப் போல் நகரத்தின் தொப்பூழ்க் கொடியைத் துண்டித்துவிட்டு சப்தங்களால் காயப்படுத்தப்படாத பிரதேசத்தில் சஞ்சரிக்க வந்தவள்தான்.

நானும் அவ்வப்போது கற்பனையில் கர்ப்பம் தரிப்பவள்தான்.

மழை நீரில் கைகழுவி, மேகங்களில் துடைத்துக் கொண்டு, பூக்களுக்குள் உறங்கி, பனித்துளியில் முகங்கழுவ ஆசைப்படுகிறவள்தான்.

ஆனால், உங்களைப் போல் நானொன்றும் முழுக்க முழுக்கக் கனாக்காரியில்லை. மழையில் குளிப்பேன்; ஆனால் என் அமிர்தாஞ்சனம் நனையாமல் பார்த்துக் கொள்வேன்.

நானும் நிலாவை ரசிப்பேன்; ஆனால் நிலாவுக்காக வாழ்க்கையை நிறுத்தி வைக்கமாட்டேன்.

வாழ்க்கை என்பது ரயில் பயணம்.
ரசனை என்பது ரயிலுக்கு வெளியே தெரியும் மரங்கள்.
ஜன்னல் வழியே மரம் பார்த்து ரசிப்பேனே தவிர
ரசனைக்காக ரயிலை விட்டுக் குதித்துவிட மாட்டேன்.
என்னை மன்னிப்பதாயிருந்தால் உங்களைப் பற்றி ஓர் உண்மை
சொல்வேன்.''

''மன்னித்தேன். சொல்!''

''நீங்கள் ரோஜாவை நேசிக்கத் தெரிந்த நிஜமான கலைஞன். ஆனால் முட்களை மறந்துவிட்ட முட்டாள்.''

அவள் புத்திசாலி; ஏற்கெனவே மன்னிக்கப் பட்டு விட்டாள்.

ஆனால் அவனோ நிலவில் சிவந்தான்.

''என் மரியாதையின் சட்டையை நீ உரித்து விட்டாய்.''

''இல்லை; சட்டையிலிருந்த கறையைத்தான் சலவை செய்தேன்.''

''கறையா? எது கறை? பூவுக்கு மகரந்தம் கறையா?

கண்ணில் கண்மணி என்ன கறையா?

என் நெஞ்சில் நான் சுமந்திருக்கும் கலை என்ன கறையா?''

''ஆத்திரப்படுகிறீர்கள். நான் இன்னும் பரிமாறவே
இல்லை. அவசரத்தில் இலையைத் தின்று ருசியில்லை என்கிறீர்கள்.

வாழ்க்கைக்குக் கனவு தேவைதான்; பாலில் நுரை மாதிரி.

ஆனால், உங்கள் தம்ளர் முழுக்க நுரை; அதுதான் குறை.

வைரமுத்து

''வாழ வந்தேன்; வாழச் சொல்கிறேன்.
மனிதனுக்குள்ளிருக்கும் விலங்கைத்
தோண்டியெடுத்துத் தூர எறியத்
துடிக்கிறேன்.

வீடு என்ற கல்லறைக்குள் வாழும்
மனிதர்களே! வெளியே
வாருங்கள் என்று அழுது அழுது
அழைக்கிறேன்.
பிழையா பெண்ணே? இது பிழையா?''

''பிழைதான். ஆனால் சிந்தனைப்
பிழையில்லை;
செயற்பிழை.

மக்களுக்குக் குடிநீர் தரவேண்டும் என்ற
கொள்கையில் பிழையில்லை. ஆனால்
குடிநீருக்காகக் கடல்நீரைத் திருப்பி
விடுகிறீர்களே
அது பிழை.

நீங்கள் நிஜங்களைச் சாகடித்துவிட்டு
நிலாவுக்காக அழுகிறீர்கள்.''

''இல்லை; நான் நிலாவுக்காக அழவில்லை.
நிலாவை நிராகரித்தவர்களுக்காக
அழுகிறேன்.
வாழ்க்கையைவிட்டு, பாதாளத்தில் கிடப்ப
வர்களுக்காகப் பதறி அழுகிறேன்.''

''உண்மை. அவர்கள் வாழ்க்கையைவிட்டுப்
பாதாளத்தில் கிடக்கிறார்கள்.
நீங்கள் வாழ்க்கையை விட்டு வானத்தில்
இருக்கிறீர்கள்.''

''நானா? நானா வானத்தில்
வசிக்கிறேன்.''

''நீங்கள் மட்டுமில்லை. வாழ்க்கைக்கு
அந்நியமாகிப் போன லட்சக்கணக்கான
இளைஞர்கள் கவடுகளை மட்டும் பூமியில்
பதித்துவிட்டு வானத்தில்தான் வசித்துக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களின்
கனவுகள் வாழ்க்கையாகாததால்
வாழ்க்கை கனவாகிவிட்டது.
கிழிந்த தலையணையில் படுத்துக் கொண்டு
கிளியோபாட்ராவை அணைக்கிறார்கள்.
செருப்பில்லாத பாதங்களோடுதான்
அலைகிறார்கள்; ஆனால் காலில் நட்சத்
திரங்கள் குத்துகின்றன.
குடிசையில் தலைவைத்து தாஜ்மகாலில்
கால் நீட்டுகிறார்கள்.
கற்பனாவாதத்துக்
கலைப் படைப்புகளில் ஊறி — தன்னை
ஐம்பத்தாறு தேசத்து அரசகுமாரனாய்
வரித்துக் கொண்டு — ஆனால் இந்தச் சமூகம்
தன் கிரீடத்தைத் திருடி அடகுவைத்து





விட்டதாய் அழுதுகொண்டு —
சாக்கடைகளின் நிரங்களில் மூக்கைப் பிடித்துக் கொண்டு
ஆகாய கங்கையைப் பற்றி அறுசீர்விருத்தம் எழுதி — உறவுகளை,
தான் புரிந்து கொள்ளாததற்காய் வருந்தாமல்
உறவுகள் தன்னைப் புரிந்து கொள்ளாதற்கு மட்டும் வருத்தப்பட்டு — சித்தம் கெட்டு செயலற்று நதியோடு செல்லும் குமிழாகவே போய்க்
கொண்டிருந்தால் திசைகள் உங்களைக் கண்டு
திரும்பிக் கொள்ளும் திருஞானம்.''

''என் பெயரை உன் நாவிலே எழுதிக் கொண்டிருப்பவனே!
எப்படித் தெரியும் என் பெயர் உனக்கு?

''இந்த மலையூத்தில் புதிதாய் ஒரு பூ மலர்ந்தாலும் — எங்கள் தலைக்கு மேலே புதிதாய் ஒரு பறவை போனாலும்
என்னால் சரியாக இனங்காண முடியும்.
நீங்கள் தேயிலைத் தோட்டத்தில் பாடித் திரிந்த போதே
ஓர் ஆடு கசாப்புக் கடையில் கச்சேரி செய்கிறதே என்று கவலை கொண்டேன்.
இந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவனைப் பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.
ஒரு நல்ல சிற்பி, கண்ணீர்த் துளிகளைச் சிலைகளாய்ச் செதுக்க நினைக்கிறானே என்று நினைத்துக் கொண்டேன்,
பாவம் நீங்கள். நிஜத்திற்கும் உங்களுக்கும் 93 மில்லியன் மைல் — அதாவது பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம்.''

''நானென்ன கற்பனாவாதியா?
நிலவு நிஜமில்லையா? பூமியைச் சலவை செய்யும் அந்த நிலவு பொய்யா?
நிலாவை நீ பார்ப்பதே இல்லையா?''

''பார்க்கிறேன். நிலாவை மாதம் ஒரு முறை பார்க்கிறேன். நிஜத்தை மாதமெல்லாம் பார்க்கிறேன்.''

''என்ன நிஜம் பார்க்கிறாய்? எதை நிஜம் என்கிறாய்?

அவள் முறைத்தாள்.

கடலில் மிதக்கும் நட்சத்திரங்களாய்ப் பட்டுத் தெறித்தது அவள் பார்வை.

அழகாக முன்னேறினாள்.

அவனுக்கும் அவளுக்குமுள்ள இடைவெளி குறைத்தாள்.

அவன் விடும் மூச்சு அவள் மார்பு தொடும் தூரத்தில் மையம் கொண்டாள்.

''வாருங்கள் திருஞானம்!
நிலா விழுவதற்குள் நிஜம் பார்ப்போம்.
வாழப்படாத வாழ்க்கை பாக்கி உள்ளது என்றீர்களல்லவா! நீங்கள் வாசிக்காத வாழ்க்கையும் பாக்கி உள்ளது. கனாக்களின் பரண்களை
விட்டு யதார்த்தத்தின் தரைக்கு இறங்கி வாருங்கள்.''

தூக்கத்தில் நடப்பவனாய் அவளை அவன் பின்தொடர்ந்தான்.

●

''அது என்ன...? அந்தக் கூரை சரிந்த வீட்டில் ஒரு குழந்தையின் கூக்குரல்?''

அவன்தான் கேட்டான்.

''வாழ்க்கை சங்கீதத்தால் மட்டும் நிரப்பப்பட் டிருக்கவில்லை திருஞானம்.
கண்ணீராலும்
அழுகையாலும் நிரப்பப்பட்டிருக்கிறது.
அந்தக் குழந்தை ஒன்றும் தாய்ப்பாலுக்காக அழவில்லை.''

''பிறகு...?''

''தாய்க்காகவும் தந்தைக்காகவும் அழுகிறது.
அந்தக் குழந்தையின் தந்தை நேற்று அதிகாலை அஸ்தமித்து விட்டார்.
ஈமச்சடங்கு
செய்யப் பணமில்லை. உறவினர்கள் அவர் மனைவிடம் — ''அறுக்கத்தானே போகிறாய்.
தாலியில் மிச்சமிருக்கும் தங்கத்தைக் கொடு; விற்று ஈமச்சடங்கு செய்யலாம்''
என்றார்கள். மறுத்தாள். என் கணவன் உடல்
எரிக்கப்படும் வரை அறுக்கமாட்டேன் தாலியை
என்று அடம் பிடித்தாள். உறவினர்கள் வற்புறுத்தி இழுத்தார்கள். கழுத்திலிருந்து தாலி வெளியேறுவதற்குள் அவள் உடம்பிலிருந்து உயிர் வெளியேறி விட்டது.
வறுமையில் 'சென்ட்டிமெண்ட்'.
அதோ! விழி தெரியாத பாட்டியின் இடுப்பில்
வழிதெரியாத குழந்தை அழுகிறது.
இவர்களைத்தான் நீங்கள் அழைத்தீர்கள்.
தற்கொலைப் பாறைக்கு நிலாவை ரசிக்க.''

●

''அந்த மூங்கில் வீட்டுக்குள் என்ன சத்தம்?''

யாரோ அடிபடும் ஓசை கேட்கிறதே!
மனைவியைக் கணவன் அடிக்கிறானா?''

''இல்லை. கணவனை மனைவி அடிக்கிறாள்.''

''ஏன்?''

''அவன் குடித்து விட்டான்.''

''ஓ! அதற்காகவா?''

''இல்லை. அவன் பங்கையும் சேர்த்துக் குடித்து விட்டான் — அதற்காக.''

''என்னது...?''

''முன்பெல்லாம் அவன் குடிப்பதை அவள் கண்டித்துக் கொண்டிருந்தாள். அவனை அடக்க முடியாத அவள் ஒருநாள் சாராயத்தை
அவனுக்குப் புகட்டிவிட்டாள். அன்று முதல் இருவரும் வாழ்வில் பாதிப் பாதியானார்கள்.
இப்போது அவர்கள் வீட்டில் அடுப்பு அணைந்துவிட்டது. இருவரின் வயிற்றிலும் திரவத் தீ எரிந்து கொண்டிருக்கிறது.
நீங்கள் வெண்ணிலாவை ரசிக்க
வெற்றிலை பாக்கு வைத்தது
இவர்களுக்குத்தான்.''

திருஞானம் மௌனமானான்.

●

''அது யார்? அந்தக் குடிசையின்
ஒட்டுத் திண்ணையில் ஓர் உருவம்?''

''ஓ! அவனா? வாழ்க்கைப் பந்தயத்தில்
ஓடிஓடி நுரைத்துப் போன குதிரையாய்
நரைத்துப் போன ஒரு கிழவன்.''

''ஏன் நடுக்கம்? மரணம் கண்டு பயமா?''

''இல்லை! இல்லை! எமன் வாகனம் மலையில் ஏற மறுக்கிறதே என்றுதான் அவனுக்குக் கவலை. அவன் நடுங்குவது பயத்தால் அல்ல; தியாகத்தால்.''

''என்ன தியாகம்?''

''குளிர் தாங்கும் ஒரே ஒரு கோணிப்பையை வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளிக்குப் பொன்னாடையாய்ப் போர்த்து விட்டான்.
இப்போது சிறகுகளைக் கொடுத்துவிட்டு கூட்டுக்கு வெளியே குளிரில் தவிக்கிறது குருவி.
இவரைக் கைத்தாங்கலாய் அழைத்துப் போகலாமா திருஞானம் — நிலா பார்க்க?''

திருஞானம் பேசவில்லை.

●

''அது என்ன...? அந்தக் கடை முன்னால் நீண்ட வரிசை நிற்கிறது?''

''மண்ணெண்ணெய் ரேஷன்!
உழைப்பாளிகள் பகலை விற்பவர்கள்.
அதனால் இரவில் மண்ணெண்ணெய் விற்க ஏற்பாடு.
மண்ணெண்ணெய் கிடைத்து விட்டதல்லவா?
இருண்டு கிடக்கும் குடிசைகளுக்குள்
இனிமேல்தான் நிலா வரும்.

சொல்லுங்கள்.

பூமியில் சிம்னி இல்லாதவர்கள்
நிலாவை நேசிக்க முடியுமா?''

திருஞானம் உறைந்து போனான்.
பதில் சொல்ல யத்தனித்தான்.
தொண்டை வரை வந்த வார்த்தைகள்
வழுக்கி வழுக்கி மீண்டும் புறப்பட்ட
இடத்துக்கே போய்விட்டன.

துக்கமும் வெட்கமும் அவனை மாற்றி மாற்றிப் பந்தாடின.



வந்தவர்: என்னப்பா இது? 'தினசரி பகல் ரெண்டு மணியிலேர்ந்து மூணு மணி வரைக்கும் தர்ம தரிசனம்'னு போர்டுல போட்டிருக்கு?

பியூன்: ஆமாம் சார்... அந்த ஒரு மணி நேரம் மட்டும் மாமூல் எதுவும் கொடுக்காம அதிகாரியை இலவசமாப் பார்க்கலாம்.

— வி. கி. குமார்.

அவன் உதடுகள் இப்போது மந்திரம் போல் அசைந்தன.

''பூக்களோடு தாவரங்கள் முடிந்து
போவதில்லை.
கனவுகளோடு வாழ்க்கை கலைந்து
போவதில்லை.
நான் வருகிறேன்.''

அவன் தீபத்திலிருந்து வெளிச்சம்
புறப்படுவதுபோல்
புறப்பட்டான்.

''நில்! ஒன்று கேட்க மறந்தேன்...''

''என்னது?''

''உன் பெயரென்ன?''

உதடுகள் குவிய உச்சரித்தான்:

''ஒவியா.''

— இன்னும் செல்வேன்.



அரசு புறக்கணித்தாலும் அர்ச்சுனன் விடவில்லை!

அன்புடையீர்,

கல்கி 7.10.90 இதழில் ''குடிநீர் வழங்குவது எம். எல். ஏ. வேலையல்ல'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் அத்துடன் இணைந்ததாக எனது பேட்டியும் வெளியாகியுள்ளது. பேட்டி பற்றிய எனது கடிதமும் ஆசிரியர் குறிப்பும் 21.10.90 இதழில் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் படிக்கும் எவருக்கும் எம். எல். ஏ. என்ற முறையில் நான் எதுவுமே தொகுதி மக்களுக்குச் செய்யவில்லை என்பது போன்ற எண்ணமே உருவாகும். ஆனால் உண்மை அதுவல்ல.

மேட்டூர் காவிரிநீர்த் தேக்கத்திலிருந்து ஆத்தூருக்கும் அதற்கிடைப்பட்ட பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் குடிநீர் கொண்டு செல்லும் பணி ரூ. 40 கோடி செலவில் திட்டமிடப்பட்டு, உலக வங்கியின் கடன் பெற்று, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தாரமங்கலம் தொகுதியின் மத்தியில் இந்தக் குழாய் பதிக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு, எனது தொகுதியில் மட்டும் சுமார் பத்து கிலோ மீட்டர் தூரம் தென்னை போன்ற மரங்கள் வெட்டப்படுகின்ற நிலை ஏற்பட்டது. இதனால் நிலம் ஆர்ஜிதம் செய்து, குழாய்கள் பதிக்கும் வேலை தடைப்பட்டது. மற்ற பகுதிகளில் ஏறத்தாழ நெடுஞ்சாலையின் ஓரத்திலேயே குழாய்கள் பதிப்பதால் பிரச்னை எழவில்லை.

எனவே, எனது தொகுதியில் குழாய் பதிக்கும் பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தகுந்த நிவாரணத் தொகை கிடைக்க வழி செய்தேன். அதுமட்டுமின்றிக் குழாய் பதிக்கப்பட்டுள்ள பகுதிக்கு இருபுறமும் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எல்லாக் கிராமங்கள், குக்கிராமங்களுக்கும் இதே குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்க அதிகாரிகளிடம் முறையிட்டோம். அரசும் அதை ஏற்றுக்கொண்டது. ஆதலால் யாரும் கோர்ட்டுக்குப் போய் நிலம் ஆர்ஜிதம் செய்து, குழாய் அமைப்பதற்குத் தடையுத்திரவு பெறவில்லை. இவ்வாறு பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளேன். இதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய குடிநீர் தாமதப்படாமல் கவனித்துக் கொண்டிருக்கிறேன். குழாய்கள் விரைவாகப் பதிக்கப்படுகின்றன. விரைவில் குடிநீர்ப் பிரச்னை தீரும்.

வேறு எந்தத் தொகுதிக்கும், ஒரே ஆண்டில் இரண்டு பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக்கப்படவில்லை. நான் மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும், பிறகு சட்டமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தி, மல்லிகுந்தம் நடுத்தரப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், தொளசம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப்பள்ளியாகவும் உயர்த்த உத்தரவு பெற்றிருக்கிறேன். மல்லிகுந்தம் பள்ளியை உயர்த்தியதோடு மூன்று கட்டடங்கள் கட்டவும் பொதுமக்களின் நிதி உதவியோடு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் குறித்த நேரத்தில் வராததைத் தணிக்கை செய்து, பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, முடிந்தவரை ஆசிரியர்கள் ஒழுங்காக வர வழிவகை செய்துள்ளேன்.

சட்டமன்றத்தில் அதிகமான கவன ஈர்ப்புதீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்ததோடு, அதிகமான கேள்விகளும் கேட்டிருக்கிறேன். ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் தாரமங்கலத்தில் புதிய பஸ் ஸ்டாண்ட் கட்ட அமைச்சரிடம் ஒப்புதல் பெற்றுள்ளேன்.

எல்லாக் குக்கிராமங்களுக்கும் ஆழ்துளைக் கிணறு அமைக்கக் குடிநீர் வடிகால்வாரிய அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் எடுத்துக் கூறி ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, குடிநீர் பிரச்னை தற்போதைக்குச் சமாளிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால் அரசால் புறக்கணிக்கப்படும் நிலையில் இருந்தும் கூடத் தொடர் முயற்சிகளால் தொகுதி மக்களின் தேவைகளை முடிந்தவரை தீர்த்துவைத்துள்ளேன்.

—க. அர்ச்சுனன்,
சேலம்.

அந்த மாணவன் பெயர் சுந்தரம். படித்துக் கொண்டிருந்தது வடசென்னை தியாகராயா கல்லூரியில். பி. காம். மாலைக் கல்லூரி. காரணம், பகல் நேரத்தில் வேலை செய்து சம்பாதித்தால்தானே சாப்பாட்டுக்கும் படிப்புக்கும் தேவையான பணம் கிடைக்கும்! என்ன வேலை? ஓர் ஓட்டலில் சர்வர். அந்த ஓட்டல் முதலாளியும், அவன் படிப் பார்வத்தைக் கண்டு சந்தோஷப்பட்டார். அந்த மாணவர் இன்றைக்கு அரக்கோணத்திலுள்ள இரண்டு ஓட்டல்களுக்குச் சொந்தக்காரர். அண்மையில் தில்லி தேசிய நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்ட 'உச்சி வெயில்' படத்தின் தயாரிப்பாளரும் கூட.



* சுந்தரம்

பால் வியாபாரத்திலிருந்து படத்தயாரிப்பு வரை

தாம் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னுக்கு வந்ததை விவரிக்கிறார்.

"எனக்குப் பிடித்த சப்ஜெக்ட் அக்கவுண்டன்சிதான். சாதாரணமாகவே, என் சக மாணவர்களின் அக்கவுண்டன்சி சந்தேகங்களை நான்தான் தீர்த்து வைப்பேன். எனவே, எனக்கு ஒரு புதிய ஐடியா தோன்றியது. 'பள்ளிக்கூட மாணவர்களுக்கு அக்கவுண்டன்சி டியூஷன் சொல்லிக் கொடுத்தால் என்ன? உடனே அதைச் செயல்படுத்துவதில் முனைந்தேன். ஒரு மாணவனுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின், இன்னும் சிலர். நான் வசித்த லாட்ஜ் அமைந்திருந்த திருவொற்றியூர் நெடுஞ் சாலையில், கையில் அக்கவுண்டன்சி புத்தகத்துடன் எந்த மாணவன் நடந்து போனாலும், நானும் கூடவே போய், 'அக்கவுண்டன்சி கஷ்டமான பாடமா?' என்று கேட்பேன். பெரும்பாலான மாணவர்கள் 'ஆமாம்!' என்றுதான் சொல்லுவார்கள். அவர்களிடம், 'நான் டியூஷன் சொல்லித் தரட்டுமா?' என்று கேட்டு, அவர்களைச் 'சரி' என்று சொல்ல வைத்து விடுவேன்!

"ஒருவழியாக முதல் வகுப்பில் டிகிரி முடித்த பின், இப்படி டியூஷன் சொல்லித் தருவதையே, முழு நேரமாக வைத்துக் கொண்டால் என்ன? என்று தோன்றியது. மாதம் அறுநூறு ரூபாய் வாடகையில், தண்டையார்ப்பேட்டையிலேயே வசதியாய் ஓர் இடத்தைப் பார்த்து, 'சுந்தர் இன்ஸ்டிடியூட் ஆஃப் காமர்ஸ்' ஆரம்பித்தேன். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து இரவு பத்து, பதினொன்று வரை கூட சளைக்காமல் பாடம் சொல்லிக் கொடுத்தேன். நல்ல வருமானம் வந்தது. ஆனாலும் ஓட்டல் நடத்த வேண்டும் என்ற எனது ஆரம்ப கால லட்சியம் மட்டும் மனத்தின் அடித்தளத்தில் இருந்து கொண்டே இருந்தது" என்கிறார் சுந்தரம்.

அந்த லட்சியம் எப்படி வந்தது?

சுந்தரம் விளக்கம் தருகிறார். "எங்கள் அப்பா மாணிக்க முதலியார், அக்கா தங்கை இருவரையுமே கலியாணம் செய்து கொண்டார்; இருபத்தி நாலு குழந்தைகள்! (இப்போது இருப்பவர்கள் பதினெட்டுப் பேர்தான்!) அந்தக் காலத்தில், அரசாங்கக் காண்ட்ராக்டுகள் எடுத்து, நன்றாய்ச் சம்பாதித்தார். அதே போல் கண்டபடி செலவும் செய்வார். விமானத்திலே பெங்களூர் போய், ரேஸ் ஆடுவார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! அதனால் என் ஓரிரு அண்ணன்களைத் தவிர யாரையும் ஒழுங்காய்ப் படிக்க வைக்கவில்லை. என்னை எஸ். எஸ். எல். சி. வரைதான் படிக்க வைத்தார். ஆனால் எனக்கு மேலே படிக்க வேண்டும் என்று தணியாத ஆர்வம்.

"அந்தச் சமயத்தில், என் அப்பா, அரக்கோணத்தின் சுற்றுப்பட்டு கிராமங்களிலிருந்து, பால் சேகரித்துச் சென்னையின் பிரபல ஓட்டல்களுக்கு சப்ளை செய்து வந்தார். அப்பாவுக்கு உதவியாக, நான் முதல் நாள் இரவே கிராமத்துக்குப் போய், அங்கேயே படுத்துக் கொண்டிருந்து விட்டு, அதிகாலையில் பால் சேகரித்துக் கொண்டு, சென்னை வந்து, ஓட்டல்களுக்குச் சப்ளை செய்யும் வேலையைக் கவனித்து வந்தேன்.

"ஒருநாள் என் நெருங்கிய உறவினர் இறந்து போய் விட, அன்றைக்குப் பால்

அனுப்ப முடியவில்லை. மறுநாள் பால் கொண்டு போன போது, ஓட்டல்காரர், ''ஏண்டா நேற்று பால் வரலை?'' என்று கடுமையான குரலில் கேட்ட போது, நான் விஷயத்தைச் சொன்னேன். ஆனால் அவர், ''யார் செத்தாலும் எனக்குக் கவலை இல்லை! பால் ஏன் வரலை? இந்த மாதம் பணம் கிடையாது!'' என்று கூறி என்னை ஓங்கி அடித்து விட்டார்! அப்போதே என் மனத்தில், நாமும் எப்படியாவது ஓர் ஓட்டல் முதலாளியாகி விட வேண்டும் என்று ஒருவித வெறியே ஏற்பட்டது!

''எஸ். எஸ். எல். சி.க்கு மேல் வீட்டில் படிக்க வைக்க முடியாது என்று சொல்லி விட்டதால் நான் பால் வியாபாரத்திலேயே முழுமையாக அப்பாவுடன் வேலை செய்த ஒரு வருட காலத்தில், நான் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. வீட்டில் சாப்பாடே இருக்காது. தெரு ஓரங்களிலும், குப்பை மேடுகளிலும் விளையும் கீரைகளைப் பறித்து வந்து வீட்டில் சமைப்பார்கள்.

''நான் பால் எடுத்துக் கொண்டு, சென்னைக்கு வருகிற ரயில் பயண நேரத்தை, வீணாக்காமல், ஓர் உருப்படியான திட்டம் தீட்டிச் செயல்படுத்தினேன். அரக்கோணத்தில் ஒரு டீக்கடையில் சொல்லி, நாலு இட்லி, ஒரு வடை கொண்ட பொட்டலம் ஒன்று ஐம்பது காசு என்று வாங்கி, அவற்றை ரயிலில் ஒன்று அறுபது காசு என்று விற்பேன். தினமும் அதனால் பத்து ரூபாய் வருமானம்!

''இதே போல் சிறுகச் சிறுகப் பணம்

ஆர்வத்திற்கு அணை போட்ட அரசுத் துறை...

வட்டமேஜை

• 'அக்டோபர் 30' தலையங்கம் கண்டேன். அதில் ஒவ்வோர் இந்துவையும், முஸ்லிமையும் ஏன் நாட்டு நலனில் அக்கறை கொண்ட அனைவரையும் ஒரு கணம் சிந்திக்க வைத்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள்.

மாப்பிள்ளைக்குப்பம், சி. முருகேசன்.

• பல சிக்கலான பிரச்னைகளுக்குச் சரியான தலையங்கம் எழுதும் தாங்கள், இப்பிரச்னையில் ஒரு சார்பு மனத்துடன் முஸ்லிம் மக்களுக்குப் பரிந்து எழுதியிருப்பதைக் கண்டு வேதனை அடைகிறேன். இனியேனும் இதனைத் தவிர்த்து நடுநிலையான முறையில் தலையங்கம் எழுதுங்கள். ஹிந்துக்கள் அமைதியைத்தான் விரும்புகிறார்கள். ஆனால் உரிமைகளை இழக்கத் தயாராக இல்லை.

புளியங்குடி, வ. ஆறுமுகராஜன்.

• ''ஆரோக்கிய பானங்களால் ஆபத்தா?'' என்ற கட்டுரை படித்தேன். பைகார்பனேட்டுகள் அடங்கிய பானங்களை அருந்துவதால் நாம் இயற்கையாக உண்ணும் காய்கறிகள், கீரைகள், இவைகள் மூலம் பெறும் வைட்டமின்கள், தாது உப்புக்கள் இவை உடலில் உட்கிரகிக்கப்படாமல் போகும் அபாயம் இருக்கிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சென்னை — 40, எஸ். அனந்தராமன்.

• 'சுஜாதா விஜயராகவனின் 'இளையதலைமுறை' கவிஞர்பாரதிதாசனின் 'அறிவை விரிவு செய்; அகண்டமாக்கு! மானிட சமுத்திரம் நானென்று கூவு' என்னும் கவிதை வரிகளை நினைவூட்டியது.

மதுரை — 1, 'இளையவ்' ஹரிஹரன்.

• ''தோல்வியை விரட்டிய விஜயரங்கன்'' உண்மைக் கதை படித்தேன். விழிகளில் ஒளி இழந்தாலும் மனத்தில் கவலை கொள்ளாமல், உறுதி கொண்ட உள்ளத்தோடு சிறப்பாக வாழ்ந்து வரும் அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரு தன்னம்பிக்கை மனிதனைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள உதவிய உங்களுக்குப் பாராட்டுக்கள்.

நிலாப்பிரியன், நந்தியநல்லூர்.

• வண்ண மீன்கள் வளர்ப்பதால், ஏற்படும் லாபத்தையும், பயனையும் பொருளாதார ரீதியில் விளக்கிக் கூறி, சுய தொழில் செய்ய விரும்பும், ஒவ்வோர் இளைஞருக்கும் பிரகாசமான எதிர்கால நல்வாழ்க்கைக்கு, அடிகோலி விட்டீர்கள், நன்றி!

ஈரோடு — 1, இ. மனோஜ்குமார்.

• ''வண்ண மீன்கள் வளர்ப்பதில் என்ன லாபம்?'' நல்ல உபயோகமான கட்டுரை. கடந்த சில மாதங்களுக்குமுன் நான் சென்னை வந்திருந்த போது, சென்னை மீன் காட்சியகத்தில் ஒரு குறிப்பு இருந்தது. மேலும், விவரம் அறிய, காஞ்சிபுரம், செங்கல்பட்டு அரசு அலுவலக விலாசத்தில் தொடர்பு கொள்ளச் சொல்லி... ஆனால் கடிதம் போட்ட எனக்கு இதுநாள் வரை எந்தப் பதிலும் வரவில்லை. ஆர்வத்திற்கு அணை போட்டு விட்டது அரசுத் துறை அலுவலகம்!

திருச்சி — 3, 'ஆங்கரை ஆனந்-

• 'வன்மம்' மிகவும் சிறந்த சிறுகதை. பிச்சமூர்த்தியைப் போன்ற உண்மையான தலைமையாசிரியர் இன்று எங்கோ ஆயிரத்தில் ஒருத்தர் தான் இருக்கிறார்!

தக்கோலம், அ. முஸ்தபா.

• ''கருணாநிதிக்குச் சில யோசனைகள்'' என்ற தலைப்பில் வெளியான மாணவர் கட்டுரை ஏரே மூச்சாக, அடுக்கடுக்கான குற்றப் பத்திரிகைத் தாக்குதல் சமர்ப்பித்தது போல் காணப்பட்டது. அவரது நல்ல திட்டங்களில் ஒரு சிலவற்றை வேனும் குறிப்பிடத் தவறியது வருத்தத்தக்க விஷயம்!

சென்னை — 23, கி. ராமதாஸ்.

சேர்த்து, பி.யூ.சி.யில் சேர்ந்தேன். பால் வியாபாரத்தில் ஈடுபட்டபடியே, படிப்பையும் கவனித்துக் கொண்டேன். நன்றாகப் படித்தது மட்டுமின்றி, பேச்சுப் போட்டி முதலியவற்றிலும் ஆர்வமாய்ப் பங்கேற்பேன். இப்படித்தான் நான் டிகிரி வரை படித்த கதை தொடர்ந்தது...

"நான் எழுத்தாளர் ஜெயகாந்தனின் தீவிர வாசகன்! எனக்குக் கஷ்டம் வரும் போதெல்லாம் அவருடைய எழுத்துக்களைத் தான் படிப்பேன். அவைதான், என்னைச் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்றும், எந்தத் தொழிலுமே சுளுமானதில்லை என்றும் எண்ண வைத்தன... ஒரு லட்சிய நோக்கும் விடாமுயற்சியும்தான் என்னை இன்று இரு ஹோட்டல்களின் முதலாளி யாக்கியிருக்கிறது."

சுந்தரம், 'உச்சி வெயில்' படத்தை எடுக்கச் சினிமா உலகில் நுழைந்த விவரம் பற்றி கல்கி 7.10.90 இதழில் ஏற்கெனவே வெளியாகியிருக்கிறது. படத்தை வியாபார ரீதியில், ரிலீஸ் செய்ய முடியவில்லை. நல்ல வேளையாக தேசிய ஒளிபரப்பில் அப்படம் ஒளிபரப்பப்பட்டதன் மூலமாய், கணிசமான ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும் என்றாலும் அதில் லாபம் என்று ஒரு பைசாவும் இல்லை. இருப்பினும் "ஒரு நல்ல கலைப் படம் எடுக்க உதவிய திருப்தி எனக்கு!" என்கிறார் சுந்தரம்.

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி.**

---

* "கருணாநிதிக்குச் சில யோசனைகள்" முதல் பரிசு பெறும் மாறனின் கட்டுரை, வெறும் வார்த்தை ஜாலமல்ல. ஆட்சியில் இருப்பவரின் மண்டையில் அடித்தாற் போன்ற சத்திய வார்த்தையாகும்.

கரூர் — 2, எம். தனபாலன்

* பதினொன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தும் இவ்வளவு மகிழ்ச்சியுடன் போஸ் கொடுத்துள்ளாரே! உண்மையிலேயே, தாமோதரன் அதிர்ஷ்டசாலிதான்!

முத்துப்பேட்டை,
கோவிலூர் உதயகுமார்.

* முதல் பக்கத்திலேயே, 'பதினாறு பெற்றும் பதறாதவர்' கட்டுரையைப் போட்டது குடும்பநலத் திட்டத்தைக் கேலி செய்வது போல் இருக்கிறது!

முத்துப்பேட்டை,
தஞ்சைத் தரணியன்.

* 'கப்ராஜா கனவுகள்' அருமையான கதை. கதைக்கு மாருதி வரைந்திருந்த ஓவியம் அப்படியே உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

சென்னை — 45,
ஏ. ஜப்பார் காதர்.

சில யோசனைகளில் ஒரு யோசனை தவறானது!

* 'கல்கி' 11.11.1990 இதழில் 'முதல்வருக்குச் சில யோசனைகள்' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பரிசுக் கட்டுரையில்,

"ஆண்டு முழுவதும் கஷ்டப்பட்டு மில்லுக்குக் கரும்பு அனுப்பினால் வட்டார வளர்ச்சி நிதி — முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் நிதி — அது இது வென்று பிடித்தம், ஏன் இதையெல்லாம் ஈடுகட்ட விவசாயிகள்தான் கிடைத்தார்களா?"

என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி, மேற்காணும் தகவல் பற்றி, தொடர்புடைய சர்க்கரைத் துறையோடு கலந்து ஆலோசிக்கப்பட்டது. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் ஈட்டும் லாபத்தில் ஒரு பகுதி, கரும்புக்குக் கூடுதல் விலையாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. கரும்புக்கு வழங்கப்படும் இந்தக் கூடுதல் விலை, மாநில அரசு கரும்புக்கு நிர்ணயிக்கும் விலைக்கு மேல் ஆலை ஈட்டும் லாபத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதாகும். இப்படி லாபத்தின் அடிப்படையில் வழங்கப்படும் கூடுதல் தொகையில் ஒரு பகுதி, விவசாயிகளுக்குப் பங்கு முதலீடாக ஆலையில் வைக்கப்பட்டு அதற்கான பங்கும் பத்திரமும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பங்கு மூலதனத்தின் அடிப்படையில்தான் விவசாயிகள் தங்கள் கரும்பு நிலங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்பது கரும்பு ஆலைகளின் விதியாகும். கரும்புக்கு வழங்கப்படும் கூடுதல் விலையில் இன்னொரு பகுதி கரும்பு ஆலைகள் அமைந்துள்ள அந்த வட்டாரங்களின் வளர்ச்சிக்காகப் புதிய சாலைகள் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள சாலைகளைப் பழுது பார்க்கவும் விவசாயிகளாலேயே மனமுவந்து — அவர்களின் ஒப்புதலோடு பிடித்தம் செய்யப்படுவதாகும். இந்த வட்டார வளர்ச்சி நிதி, விவசாயிகளின் நன்மைகளுக்காகவே செலவிடப்படுகிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் கரும்பு விலையில், மனமுவந்த ஒப்புதலோடு விவசாயிகளாலேயே வழங்கப்படும் வளர்ச்சி நிதி மற்றும் பங்கு மூலதனம், அவர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் கரும்பு விலையில் 20 சதம்தான். இதைத் தவிர வேறு எந்த வகையிலும் கரும்புக்காக வழங்கப்படும் விலையிலிருந்து குறைக்கப்படுவதில்லை.

தமிழகத்தில் சத்துணவுத் திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 195 கோடி செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிதி முழுவதும் தமிழக அரசின் வருவாயிலிருந்தே செலவிடப்படுகிறது. சத்துணவுத் திட்டத்திற்காக எந்த வகையிலும் யாரிடமிருந்தும் நன்கொடை எதுவும் பெறப்படுவதில்லை.

எனவே, கட்டுரையில் வெளியாகியுள்ள தகவல், உண்மைக்குச் சற்றும் பொருந்தாது என்பதை மேற்காணும் விளக்கத்திலிருந்து எளிதாக அறிந்து கொள்ளலாம்.

தலைமைச் செயலகம், சி. ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ்.,
தமிழக அரசு. முதல்வரின் துணைக் காரியதரிசி.
சென்னை — 9.

கருணாநிதியும் ரதயாத்திரை செய்கிறாராமே?



* அரசியலுக்குத் தேவையா!



* பதறுவா? இல்லையே!



* காது குத்தல்...



* தற்போதைய பலம்

* **கணியூர் பழனிச்சாமி, கோவை.**

? **டெலிஃபோன் ஊழியர்கள் போராட்டம் முறைதானா?**

! 'ஆட்சியில் யாரும் இன்னும் சரியாக அமராத போது வேலை நிறுத்தம் ஏன்?' என்றால், 'எங்கள் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க அதிகாரிகளுக்கே உரிமை உண்டு' என்கிறார்கள். 'பொது மக்களுக்கு ரொம்பத் துன்பம் உண்டாகிறதே' என்றால் 'சிரமம் தெரிந்தால்தானே எங்கள் கோரிக்கை ஏற்கப்படும்' என்கிறார்கள் ஏ.ஸியை நிறுத்தி விடுவதன் மூலம் தானியங்குக் கருவிகளைக் கூட செயலிழக்கச் செய்திருக்கிறார்கள். டெலிஃபோன் வேலை செய்யாத நாட்களுக்கு அரசு, வாடகையை ரத்து செய்யுமா என்ன? நீங்களும் நானும்தான் துன்பங்களையும் அனுபவித்து விட்டு, அதற்குச் சன்மானமும் அளிக்க வேண்டும்!

* **அ. சங்கர்லால், மயிலாடுதுறை.**

? **கலியுகப் போரில் வெற்றி பெறப் போவது ராமரா, இல்லை பாபரா?**

! இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்கிறவருக்கே பெரும் வெற்றி. பிடிவாதத்துடன் போராடி வெற்றி பெறுகிறவர் அடையப் போவது நீண்ட கால நோக்கில் படு தோல்வியே.

* **டி. தாமரை பிரபு, குடியாத்தம்.**

? **'மண்டல் என்பதும் மதச் சார்பின்மை என்பதும் வி. பி. சிங் போடும் வேஷங்கள்' என்று குமரி அனந்தன் கூறுகிறாரே?**

! மண்டல் விஷயத்தில் வடக்கே இருந்தால் ஒரு வேடம் தெற்கே வந்தால் ஒரு வேடம்போடுபவர் ராஜீவ் என்பது மக்களுக்குத் தெரியும். 86ல் பப்ரி மஸ்ஜித் கதவைத் திறந்து விட்டவர்; தேர்தலுக்கு முன் பூஜை போட அனுமதித்தவர் இன்று ரத யாத்திரையை எதிர்த்து சிறுபான்மை ஆதரவு கோஷம் போடுவது வேஷம் அல்ல என்றால் குமரியின் பார்வையில் கோளாறு.

* **கே. பி. சாரதி, வேலூர்.**

? **தற்போதைய 'கிங்மேக்கர்' என்று தேவிலாலைக் கூறலாமா?**

! கூடாது; ராஜீவைத்தான் அப்படிக் கூற முடியும்.

* **எம். தணிகைவேலன், ஆற்காடு.**

? **'நான் காங்கிரஸ்காரன்தான்' என்கிறாரே, தேவிலால்?**

! தேர்தலுக்கு முன் இந்த உணர்வு எங்கே போயிற்று? இவர்கள் குத்துகிற குத்தில் காதே காணாமல் போய் விடும் போலிருக்கிறது!

* **செந்தில், வேலூர் — 9.**

? **முலயாம்சிங் யாதவ்வின் துணிச்சலான நடவடிக்கை பற்றி...?**

! ஒரு பக்கம் சந்திரசேகருக்கு ஆதரவு என்று காட்டிக் கொள்ள வேண்டியது. இன்

னொரு பக்கம் எந்தக் காரணத்துக்காக வி. பி. சிங் விமர்சனத்துக்கு உள்ளாகி பதவி இறக்கம் செய்யப்பட்டாரோ அதே மண்டல் அறிக்கை ஆதரவாகப் பிற்பட்டோர் கோட்டாவை மாநிலத்தில் உயர்த்த வேண்டியது. இந்த மாதிரி இரட்டை வேடங்கள் போட ரொம்பத் துணிச்சல் தேவைதான்.

*** ரவி மயில், சேலம்.**

? வி. பி. சிங்கின் தற்போதைய பலம் என்ன?

! ஆட்சிப் பொறுப்பில் இல்லாததுதான். மக்களைச் சந்திக்க அவகாசம் இருப்பது தான். துணிந்து விமர்சனம் செய்ய வாய்ப்பு இருப்பதும்தான்.

*** ஆர். குமரவேல், சாமிநாதபுரம்.**

? ஆன்மா என்பது உயிரா? அறிவா? இரண்டுக்கும் அப்பாற்பட்ட சக்தியா?

! மூன்றாவது.

*** கே. ராஜபாலு, சேலம்.**

? வி. பி. சிங்கைக் கவிழ்த்துவிட்டுச் சந்திரசேகர் பிரதமரானது சாணக்கியமா? துரோகமா?

! வெளியே இருந்து விமர்சித்தது சாணக்கியம்; பிரதமரானது துரோகம்; ராஜீவைச் சரணடைந்தது அசட்டுத்தனம்.

*** ஜி. அர்ஜுனன், திருப்பூர்.**

? 'கழுதைக்கு உள்ள தன்மான உணர்வு கூட வி. பி. சிங்குக்கு இல்லை' என்கிறதே துக்ளக்?

! தலைவரை நேருக்கு நேர் சந்திக்கத் திராணியின்றித் தனிக் கூட்டம் நடத்திக் கட்சியை உடைப்பதும் நேற்றைய எதிரியின் கைப்பாவையாகிப் பிரதமராக அமர்வதும் தான் தன்மான உணர்வு என்றால் அப்படிப்பட்ட தன்மான உணர்வு வி. பி. சிங்குக்கு இல்லாமலிருப்பதற்காக மகிழலாம்.


*** ஜி. ராஜசேகர், வலங்கைமான்.**

? 'ரத யாத்திரையால் மத வன்முறை எதுவும் ஏற்படவில்லை. அதற்குப் பதில் இரு மதத்தினரிடையே பதற்றத்தைக் குறைத்திருக்கிறது' என்கிறாரே, அத்வானி?

! ஆமாம் ஆமாம். அதனால்தான் இன்னும் கூட பாரதத்தின் பல நகரங்களில் ஊரடங்குச் சட்டத்தை அரசு விலக்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது. பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் கூட கோயில்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு தேவைப்பட்டிருக்கிறது!



* பார்வைக் கோளாறு



* 'கிங் மேக்கர்'

*** நடராஜன், அன்னூர்.**

? நீங்களே சொல்லுங்கள், நடிகர் ராமராஜனுக்கு அரசியல் தேவைதானா?

! ராமராஜனுக்கு அரசியல் தேவைதான்; தமிழக அரசியலுக்கு ராமராஜன் தேவையா என்பதுதான் சந்தேகம்!

*** அ. க. கிருஷ்ணன், சென்னை.***

? அரசியலின் இலக்கணம் என்ன?

! சமீபத்தில் பிரிட்டிஷ் துணைப் பிரதமர், மார்கரெட் தாட்சருடன் கருத்து மாறுபாடு கொண்டார். அமைதியாக, கௌரவமாகப் பதவியிலிருந்து விலகிக் கொண்டு போனார். கட்சியை உடைத்தாரா? ஆட்சியைக் கவிழ்த்தாரா? எதிரியின் கைப்பாவையானாரா? அரசியல் இலக்கணம் — இலக்கியம் எல்லாம் இதுதான்.

*** வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.**

? கருணாநிதியும் ரதயாத்திரை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறாரே?

! நோக்கம் வேறு; ஆட்சேபிக்க இடமில்லை என்றாலும் 'ரத யாத்திரை' என்ற சொல்லே தற்போது ஒரு கசப்புணர்வை ஏற்படுத்துவதால் மறுபரிசீலனை செய்யலாம். கலைஞருக்கு இப்படிப்பட்ட சினிமாத்தனங்கள் தேவையில்லை.

*** ஆர். கே. கங்கா சீனிவாசன், திருவெண்ணெய் நல்லூர்.**

? தற்போதைய அரசியல் ஹீரோ யார்?

! கிராம அதிகாரிகளாக இருந்து, எம். ஜி. ஆர். காலத்தில் ஊழியமும் ஊதியமும் இழந்து வாடிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, அவர்கள் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்ற செய்தி செவிகளில் தேனாகப் பாய்ந்திருக்கும். அவர்கள் எல்லாருக்கும் இன்று ஹீரோ கருணாநிதி தான்!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

அ. க. கிருஷ்ணன்,
4. ஏ. ஏ. ரோடு,
வியாசர் நகர், சென்னை — 39.

நீங்கள் கேட்டவை — தராசு



"டாக்டர், எனக்குப் பிரஷர் இருக்கு, ஷுகர் இருக்கு, அப்பப்ப தலைவலி, கால் குடைச்சல், ஒரே ஒச்சலா இருக்கு, தூக்கமே கிடையாது. அப்புறம் தலை சுத்தல்...!"

"கொஞ்சம் இருங்க எனக்கே தலை சுத்தற மாதிரி இருக்கு!"

"என்னப்பா, பத்து லிட்டருக்கு மூணு பாயிண்ட் குறைச்சலா போட்டிருக்கே...?"

"பெட்ரோலை மிச்சம் பிடிக்கணும்னு அரசு சொல்லியிருக்குங்களே!"



"ராமருக்குக் கோவில் கட்டப் போறோம்..."

"ஐயையோ! எனக்கு அரசியலெல்லாம் வேணாம்... நீங்க போயிட்டு வாங்க..."





"இவங்க வீட்டு டெலிபோன் போய் இன்னிக்குப் பத்தாம் நாளாம்!"

"என்ன, வரவர லிமிட் இல்லாமப் போய்க்கிட்டிருக்கே நீ...? இன்னிக்கு லேடிஸ் கிளப் மீட்டிங்குக்கு உனக்குப் பதிலா என்னைப் போயிட்டு வரச் சொல்றியே... என்ன அர்த்தம்?"





காஸ் சிலிண்டருக்கு மீட்டர் போட முடியுமா?

"தண்ணீர், பெட்ரோல், ஆயில் முதலியவற்றின் அளவைத் தெரிந்து கொள்ளும் வகையில், மீட்டர் இருப்பது போல, சமையல் காஸ் சிலிண்டரில் இருக்கும் வாயுவின் அளவைத் தெரிந்து கொள்வதற்கும் ஒரு மீட்டர் வைத்தால் நுகர்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமே... இது பற்றிச் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்து எழுதுங்களேன்!" என்று மதுரையைச் சேர்ந்த கல்கி வாசகி டி. பழனிஸ்வரி யோசனை தெரிவித்திருந்தார்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பொது ஜனத் தொடர்புத் துறை மேலாளர் விஸ்வனாதனிடம் கேட்டோம்.

"பெரும்பாலோர் சமையல் வாயு சிலிண்டரின் உள்ளே இருப்பது வாயு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. பெட்ரோலிய வாயுவானது, சிலிண்டருக்குள் திரவ வடிவத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அதனால்தான் L.P.G. அதாவது Liquefied Petroleum Gas என்று சொல்கிறோம். வாயு திரவமாக மாறக் காரணம் அறுபது பி. எஸ். ஐ. அழுத்தம்தான் (PSI என்றால் Pounds per square inch – ஒரு பி. எஸ். ஐ. என்பது கிட்டத்தட்ட அரை கிலோ) இந்த அறுபது பி. எஸ். ஐ. அழுத்தம் எப்போதும் சிலிண்டருக்குள் இருந்து கொண்டே இருக்கும். அப்படி இருந்தால்தான் உள்ளே திரவ வடிவத்தில் இருக்கும் வாயு, மீண்டும் மீண்டும், நாம் சிலிண்டரைத் திறக்கும் போது வாயு ரூபத்தில் வெளியே வரும். அப்படி வெளியே வரும் போது உள்ள இடைவெளியில் உள்ள அழுத்தம் 0.5 பி. எஸ். ஐ. இந்த 0.5 பி. எஸ். ஐ. வெளியில் வந்தாலும், அண்ட வெளியில் உள்ள காற்று சிலிண்டருக்குள் போவதால் உள்ளே 60 பி. எஸ். ஐ. அழுத்தம் குறையாமல் இருந்து கொண்டே இருக்கும். அதே போல் சிலிண்டர் வேலை செய்யும் போது 0.5 பி. எஸ். ஐ. அழுத்தம் வெளியே வந்து கொண்டே இருக்கும். சிலிண்டர் காலியாகும் வரை இதே 0.5 பி.எஸ்.ஐ. அழுத்தம்தான் தொடரும். இந்த 0.5 அழுத்தத்தின் அளவைத்தான் மீட்டர் போட்டுப் பார்க்க முடியுமே தவிர, வாயுவை அளப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. எவ்வளவோ அற்புதங்கள் கண்டுபிடிக்கப்படும் இந் நாட்களில், சாத்தியம் என்றால் இதை மட்டும் கண்டுபிடிக்காமல் விட்டு வைப்பார்களா என்ன?

பேட்டி: **கல்யாணி.**

சிக்கியது கள்ளச் சந்தை கெரசின்!

கள்ள மார்க்கெட்டுக்குக் கெரசின் எப்படிப் போகிறது? இந்தியன் ஆயில் போன்ற நிறுவனங்களின் டெர்மினல்களிலிருந்து மொத்த வியாபாரிகளுக்கு லாரிகளில் கெரசின் அனுப்பப்படுகிறது. ஒரு டாங்கரின் கொள்ளளவு சுமாராய்ப் பன்னிரண்டாயிரம் லிட்டர். இதில், சுமார் இருநூறு லிட்டர் போல, கையாளும் போதும், ஆவியாவதன் மூலமும் குறைய அனுமதிக்கப்படுகிறது. லாரிக்காரர்கள், இந்த விஷயத்தைத் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டு, மண்ணெண்ணெயைத் திருட்டுத்தனமாய் வெளியாட்களுக்கு விற்று விடுகிறார்கள். சில இடங்களில், மொத்த வியாபாரிகளே இத்தகைய காரியத்தில் ஈடுபடுவதும் உண்டு. அரசு அங்கீகாரம் பெறாத தனியார், கெரசின் விற்றால் அது சட்டப்படி குற்றமாகும்.

சமீபத்திய நடவடிக்கைகளின் போது ஓர் இடத்தில் பதுக்கல் கெரசின் இருப்பதாகத் தகவல் அறிந்து, பிடிக்கப் போன போது, அங்கே சிறிதளவுதான் பிடிக்க முடிந்தது. பிடிபட்டவர், "நான் சின்ன ஆளு! என்னைப் பிடிக்கறீங்க! பெரிய ஆளு... (பெயரைச் சொல்லி) அவரையெல்லாம் விட்டுறுவீங்க!" என்றதும், பெரிய ஆளையும் போலீஸ் பிடித்தது. பொது மக்களும் நிறையத் துப்புக் கொடுத்தனர். வட சென்னையில், ஓரிடத்தில் திருட்டுத்தனமாய் லாரியிலிருந்து பேரல்களில் கெரசின் நிரப்பிக் கொண்டிருந்த போதே கையும் களவுமாய்ப் பிடித்தார்கள்.

துணை ஐ. ஜி. ராஜேந்திரன் கூறக் கேட்டவர்:

ஜூலி.

சொன்னதைச் சொன்னால்...





●● பத்து மாதங்களுக்கு முன்பு ஒரு மரம் நடப்பட்டது. ஆனால் வளர்ந்து, பழம் தரும் முன்பே அது வெட்டப்பட்டு விட்டது.

— வி. பி. சிங்.

●● பாரதீய ஜனதாவின் தேர்தல் சின்னமான தாமரையை அத்வானி ஏன் தன் ரதத்தில் பயன்படுத்தினார்? ராமர் என்ன பி. ஜே. பி. யின் அனுதாபியா?

— கம்ரஞ்சித்சிங் மான்.

●● ரதயாத்திரை மட்டுமே ஒருவரை, இந்துக்களின் பாதுகாவலராக்கிவிடாது.

— சிவசேனா தலைவர் பால் தாக்கரே.

●● என் ஆரோக்யக் குறைவு காரணமாய்த்தான், என் மகளைப் பிரதமராக்கினேன்.

— பெநசிரின் தாய் நசரத் புட்டோ.

●● பிரதமராவதற்கு எனக்கு ஆதரவு தர முன் வந்த காங்கிரஸ் எம். பிக்களிடம் நான் கூறினேன்: "உங்கள் ஆதரவுக்கு நன்றி. ஆனால் அதை ஏற்க நான் ஒன்றும் முட்டாள் இல்லை."

— சந்திரசேகர் (காங்கிரஸ் ஆதரவைத் தாமாகக் கோரும் முன்பு கூறியது.)

●● என்றைக்குமே எனக்கு ராஜீவ் காந்தி தான் தலைவர்.

— பதவி இறக்கம் செய்யப்பட்ட கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டீல்.

●● ஒருவர் (வி. பி. சிங்) ஜாதியால் மக்களைப் பிளவுபடுத்தினால், இன்னொருவர் (அத்வானி) மதத்தால் பிளவுபடுத்தி விட்டார்.

— ராஜீவ் காந்தி.

●● ஜெயலலிதா, இடஒதுக்கீட்டில் பிற்பட்டவர்களுக்கு 27 சதம் போதாது; ஐம்பது சதம் வேண்டும் என்கிறார். இன்றைக்கு இவருக்கு வேண்டப்பட்டவர்கள்தானே ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இதை அவர் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். ராஜீவ் காந்திக்குப் புரியும்படி சொல்ல வேண்டும்.

— கி. வீரமணி.

●● சந்திரசேகர் முன்னாள் காங்கிரஸ்காரர். எனவே, அவர் இ. காங்கிரஸின் பாதையிலிருந்து விலகமாட்டார் என்று நம்புகிறோம்.

— வி. என். காட்கில்.



●● நான் அரசியலில் டீலரோ, டிரேடரோ இல்லை. லீடர்.

— சந்திரசேகர்.

●● "சந்திரசேகர் பிரதமராகப் பார்க்கிறார்; எனக்கு ஆதரவு கொடுங்கள்; நான் பிரதமராகிறேன்" என்று தேவிலால் எங்களிடம் கேட்டுக் கொண்டார்.

— ஃபெர்னாண்டஸ், குஜ்ரால்.

தொகுப்பு: மௌனஷ்மி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

வீட்டின் அழகு கதவில் தெரியும்


விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட

மாயூரம் டிம்பர் கதவுகள்

அழகானவை, உறுதியானவை, நீடித்து உழைப்பவை

காரணம்?

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
நவீன ஆலைகளில் ஈரப்பதம்
80%லிருந்து 14% ஆக குறைக்கப்படுகிறது.
இது மரம் வளைந்து முறுக்காமல் தடுக்கிறது.
மரத்திற்கு ரசாயன கலவை பாதுகாப்பு
அளிப்பதால் கரையான் அரிப்பதை தடுக்கிறது.
தச்சுவேலை இயந்திரத்தில் செய்யப்படுவதால்
கதவுகள் நேர்த்தியாக அமைகின்றன.



Avoid Spending Time & Money to Achieve A Substitute
Come, Select & Place Your Order at

Mayuram Timber & General Trading Corpn.
Show Room: 13, Rameswaram Road, T.Nagar,
Madras – 600 017, Tel: 445207.

H.O. 83, G.S.T. Road, Tambaram – 600 045.

Also available at **Mayavaram Timber Depot**
No. 4, Post Office Road,
Mayiladuthurai, Tanjore Dist.


REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka
புதிய
Shield
DEODORANT SOAP
இண்டர்நேஷனல்
டியோடரன்ட்
உள்ளது
சாதாரண சோப்புகள்,
உடல் வாடையைத் தடுக்காது
புதிய ஷீல்டின்
இண்டர்நேஷனல்
டியோடரன்ட் மட்டுமே
தீவிரமாக உடல வாடையை
தடுக்கிறது. தன்னம்பிக்கை
புத்துணர்வு தருகிறது . . . மணிக்கு மணி
ஷீல்டு தருகிறது நம்பிக்கை.
தோழர்கள் • தருவார்கள் • சிறப்புஇடம் - உங்களுக்கே!
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
LINTAS SH G 78 2416